Registered as a News Paper in Sri Lanka
දිනමුරසු වාරමලර්
பக்கம் 24
ஜனவரி 05 - 11, 2012
ரூபா 30.00

# வாரமலர்
# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 944

# பொலிஸ், காணி அதிகாரங்கள்

## மக்கள் பேசுகிறார்கள்

பரபரப்பான கருத்துக் கணிப்பு



## யாழ். மேயரின் பேட்டி

சூடு - சுவை - - அதுதான் தினமுரசு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச கரும கொள்கையை முழுமையாக அமுல்படுத்த இந்த வருடத்தில் கூடுதல் கவனம்

## அமைச்சர் வாசுதேவ நாணயக்கார

சகல அரச நிறுவனங்களிலும் அரச கரும கொள்கையை முழுமையாக அமுல்படுத்த இந்த வருடத்தில் கூடுதல் கவனம் செலுத்தப்படும் எனவும், இந்த வருடத்தில் மும்மொழிக் கொள்கையை முன்னெடுக்க கல்வி அமைச்சுடன் இணைந்து நடவடிக்கை எடுக்க உள்ளதாகவும், தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

2012இல் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப் பாட்டு அமைச்சினூடாக முன்னெடுக்கப்பட உள்ள விசேட திட்டங்கள் குறித்து கருத்துத் தெரிவித்த அவர் 2012 எமது அமைச்சிற்கு மிக முக்கியமான ஆண்டாகும். தமிழ், சிங்கள மொழிக் கொள்கையை அமுல்படுத்த இந்த வருடத்தில் கூடுதல் கவனம் செலுத்த உள்ளோம். சகல அரசாங்க நிறுவனங்களிலும்



அரச கரும மொழிக் கொள்கையை முழுமையாக முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இது தவிர சகல கிராமங்களிலும் மொழிச் சங்கங்களை அமைத்து இரண்டாம் மொழியை கற்க நடவடிக்கை எடுக்க உள்ளோம். அரச ஊழியர்கள் மற்றும் தனியார் துறையினருக்கு தமிழ் சிங்கள மொழிகளை கற்பிக்கவும் பல திட்டங்கள் முன்னெடுக்கப்படும். தேசிய பிரச்சினைக்கு சகோதர மொழியை அறியாததும் பிரதான காரணம். அதனால் சகோதர மொழியை கற்பிக்க இந்த வருடத்தில் அதிக முக்கியத்துவம் வழங்கப்படும் என்றார்.

## பாதாளக்குழுக்களிடையே மோதல் ஒருவர் பலி - இருவர் காயம்

பாதாள உலகக் குழுக்களுக்கு இடையிலான மோதல் சம்பவம் ஒன்றில் ஒருவர் உயிரிழந்துள்ளார். கொழும்பு மாளிகாவத்தைப் பிரதேசத்தில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக காவல்துறை தலைமையகம் தெரிவித்துள்ளது. மாளிகாவத்தைப் பிரதேசத்தில் பாதாள உலகக் குழுக்களின் செயற்பாடுகள் அதிகளவில் காணப்படுவதாக காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவத்தில் மேலும் இரண்டு பாதாள உலகக் குழு உறுப்பினர்கள் காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும் சம்பவம் குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருவதாகவும் மாளிகாவத்தை காவல்துறையினர் தெரிவித்துள்ளனர். சம்பவம் இடம்பெற்ற பிரதேசத்தில் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## புகைப்பிடித்தலை தடுக்க புதிய சட்டம்

பெருந்தெருக்களில் புகைப்பிடித்தலை தடுக்கும் வகையில் புதிய சட்டம் ஒன்றை உருவாக்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும். இதற்கான கொள்கைகளை உள்ளடக்கிய புகையிலை மற்றும் மதுபானக் கட்டுப்பாட்டு சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

எதிர்வரும் ஏப்ரல் மாதத்திற்கு முன்னர் இந்த சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்த்துள்ளதாக தெரிவித்துள்ள அமைச்சு இதனைத் தவிர அரசாங்கம் விதித்துள்ள சட்டங்களை மீறும் வகையில் புகைப்பிடிக்கும் நபர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கான அதிகாரத்தைப் பொலிஸார் சுகாதார திணைக்களம் மற்றும் பொது சுகாதார பரிசோதகர்களுக்கு வழங்கும் வகையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளதாக சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

## இலங்கையின் நாணய மதிப்புக் குறையாது

இலங்கை ரூபாயின் மதிப்பு மேலும் குறைக்கப் படமாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் இந்த அறிவித்தலை விடுத்துள்ளார். இந்த வருடத்தில் ரூபாவின் மதிப்பை குறைக்கும் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படமாட்டாது என்று மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் குறிப்பிட்டுள்ளார்.

2012 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்டத்தின் போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவினால் 3 வீத ரூபாய் பெறுமதி குறைப்பு அறிவிக்கப்பட்டது.

இது ஏற்றுமதியை ஊக்குவிக்கும் முகமாக மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்பட்டது. இதன் காரணமாக, இலங்கையின் பணவீக்கம் கடந்த டிசம்பரில் நிலையானதாக இருந்ததாக மத்திய வங்கியின் ஆளுநர் அறிவித்துள்ளார்.

## விவசாயத் துறை மேம்பட பாரிய நீர்ப்பாசன திட்டங்கள்!!

### - நிமல் சிறிபால டி சில்வா -

இந்நாட்டின் விவசாயத் துறையை மேலும் மேம்படுத்தவென பத்து பாரிய புதிய நீர்ப்பாசன திட்டங்கள் இவ்வருடம் நிர்மாணிக்கப்படும் என்று நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா நேற்றும் தெரிவித்தார்.

இந்நாட்டின் நீர்ப்பாசனத் துறையை மேம்படுத்தவென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் நிதியமைச்சர் என்ற வகையில் 36 ஆயிரம் மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளார். இந்த பத்து நீர்ப்பாசனத் திட்டங்களுக்கும் இந்நிதி செலவிடப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பாக அமைச்சர் மேலும் கூறுகையில், இத் திட்டத்தின் கீழ் அம்பாறை மாவட்டத்தில் கஹகல்ஓயா, அநுராதபுரம், திருமலை மாவட்டங்களில் யான் ஓயா, மன்னார் மாவட்டத்தில் மல்வத்து ஓயா நீர்த்தேக்கத் தின் கீழ் பகுதி, பதுளை மாவட்டத்தில் மொரான குளம், இரத்தினபுரி மாவட்டத் தில் எல்லகுளம், மாத்தறை மாவட்டத்தில் தீகிலிஓயா, பொலன்னறுவை மாவட்டத் தில் கவுடுல்ல நீர்த்தேக்கத் தின் இடதுகரை, உமா ஓயா திட்டத்தின் கீழ் தல்பிட்டிகல, வடமத்திய மகாஎல ஆகிய வற்றை அடிப்படையாக வைத்தே இந்த பத்து நீர்ப்பாசனத் திட்டங்களும் அமைக்கப்படவுள்ளன.

இந்த நீர்ப்பாசன திட்டங் களின் நிர்மாண வேலைகள் யாவும் நீர்ப்பாசன திணைக்களத்தின் உள்நூர் பொறியியலாளர்கள் ஊடாக மேற்கொள்ளப்படும். இவற்றுக்காக வெளிநாட்டுக் கடனுதவிகள் பெறப்பட மாட்டாது உள்நாட்டு நிதியைக் கொண்டே இந்த நிர்மாணப் பணிகள் முன்னெடுக்கப்படும்.

நாட்டின் துரித பொருளா- தார மேம்பாட்டுக்காக நாம் நேரடியாக பங்களிப்பு செய்து வருகின்றோம். அந்த அடிப்படையிலேயே இவ்வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

இதேவேளை கண்டி மாவட்டத்தில் குருநாகல் ஓயா, அம்பாறை மாவட்டத் தில் ரம்புக்கனை ஓயா, குருநாகல் மாவட்டத்தில் தெதுருஓயா, அநுராதபுரம் மாவட்டத்தில் எல பொத்தான குளம், ஹம்பாந் தோட்டை மாவட்டத்தில் எட்டிகாவகுளம், மொனறா கலை மாவட்டத்தில் கீழ் ஊவா நீர்ப்பாசனம், அம்பாறை மாவட்டத்தில் கல்லோயா நவோதய திட்டம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட நீர்ப்பாசன திட்டங்கள் தற்போது நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. இந்த நீர்ப்பாசனத் திட்டங்கள் யாவும் இவ்வருடம் செயற்படத் தொடங்கும். அவை மக்களிடம் கையளிக்கப்படும் என்றார்.

## கண்காணிப்பில் புதிய அத்தியாயம்

நபர்கள் மற்றும் வாகன இலக்கத் தகடுகள் என்பனவற்றை இனம் காணும் வகையில் பாதுகாப்பு கண்காணிப்பு கமராக்கள் நவீனமயப் படுத்தப்படவுள்ளதாக பொலிஸ் மா அதிபர் என்.கே.இலங்கக்கோன் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் வாகனப் போக்குவரத்து வழக்குகள் தொடர்பாக அறிவிக்கப் படும் தண்டப்பண பிரசுரங்களுக்குப் பதிலாக கிதி குறுந்தகவல்கள் மூலம் அபராதம் செலுத்தும் முறைமை ஒன்றும் நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

## ஹெரோயின் கைப்பற்றப்பட்டது

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு கொண்டு வரப்படவிருந்த ஹெரோயின் தொகை கைப்பற்றப் பட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது. இதன் பெறுமதி 50 இலட்சம் இந்திய ரூபாய் என்று மதிப்பிடப் பட்டுள்ளது. இதுதொடர்பில் தூத்துக் குடியில் வைத்து நான்கு பேர் கைதுசெய்யப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது சம்பவம் தொடர்பில் காவல்துறையினர் தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## யாழ். குடாவில் சீரான மின் விநியோகம் அமைச்சர் டக்ளஸ் தலைமையில் ஆராய்வு

யாழ். குடாநாட்டில் நிலவுகின்ற மின்சாரம் தொடர்பிலான பிரச்சினைகள்



தொடர்பில் விரிவான கலந்துரையாடல் ஒன்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களது தலைமையில் நடைபெற்றது.

இதில், வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் மற்றும் இலங்கை மின்சார சபையின் வடபிராந்திய பொதுமுகாமையாளர் பிரியந்த குணதிலக்க ஆகியோர் கலந்துகொண்டனர்.

அடிக்கடி மின்தடை ஏற்படுதல் மின்வலு குறைந்தளவில் விநியோகிக்கப்படுதல் மற்றும் தெருவிளக்குகள் மின் விநியோகத் துண்டிப்புகள் புதிதாக மின் இணைப்புகளை வழங்குதல் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பில் இதன்போது இணக்கமான முடிவுகள் எட்டப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினமுரசு வாரமலர்
த.பெ. இல.-1272, கொழும்பு.
த.பெ. இல.-162, யாழ்ப்பாணம்.
தொலைபேசி:- 021 2221811
தொலைநகல் (Fax):- 021 222 1811
மின்னஞ்சல் (E-mail):- thinamurasu@live.com

## முரசம்

### பாதுகாப்பதும் பலப்படுத்துவதும் உடனடித் தேவை

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

[illegible]

# பொலிஸ், காணி அதிகாரங்கள் மக்கள் பேசுகிறார்கள்

**ஏதோவொரு புள்ளியில் தொடங்க வேண்டும்.**

**பசுபதி சிவரத்தினம்**
[தலைவர், பளை அபிவிருத்தி அதிகாரசபை]

கடந்த முப்பது வருட கால யுத்தத்தினால் அழிவுகளையும், இழப்புக்களையும் சந்தித்திருக்கின்ற மக்கள் தங்களை மீளக் கட்டியெழுப்புவதற்கு. அவர்கள் தங்களது அடிப்படைப் பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டு கொள்வதே முக்கியமானதும், அவசரமானதுமாகும். இதற்கான அதிகாரங்களை பெற்றுக் கொள்வதற்காகவே அரசியல் தீர்வு விரைவுபடுத்தப்பட வேண்டுமென்பதை நாங்கள் வலியுறுத்தி வருகின்றோம்.

அதாவது இன்றைய சூழலில் அரசியல் தீர்வானது இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் விளைவாக உருவாகிய 13ஆம் திருத்தச் சட்டத்தின் அடிப்படையிலான மாகாண சபைகளை இயங்க வைப்பதே ஆகும். ஏற்கனவே கிழக்கில் மாகாண சபை ஜனநாயக முறையில் தேர்வு செய்யப்பட்டு இயங்கிக் கொண்டிருக்கிறது. அதேபோன்று வடக்கிலும் ஜனநாயக முறையில் மாகாண சபை மக்கள் பிரதிநிதிகளிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதே எமது விருப்பமாகும். அதனை கௌரவ ஜனாதிபதி அவர்கள் மிகவிரைவில் செய்வார் என்ற நம்பிக்கையும் இருக்கின்றது.

எமது கட்சியினதும் அதன் தலைவர் கௌரவ டக்ளஸ் தேவானந்தா அவர்களினதும் இலக்காக இருப்பதும், 13 ஆவது திருத்தச் சட்டம் மற்றும் பிளஸ் என்பதே ஆகும். எனினும் நடைமுறை யதார்த்தத்தை உணர்ந்து கொண்டும், எமது நாட்டில் இனங்களுக்கிடையில் இன்னும் இருக்கின்ற இடைவெளிகளைப் புரிந்து கொள்வதனால் காணி, பொலிஸ் போன்ற அதிகாரங்களை மாகாணங்களுக்கு உடனடியாக வழங்குவதில் ஜனாதிபதிக்கும் அரசுக்கும் தோன்றக் கூடிய அசௌகரியங்களை விளங்கிக் கொள்கின்றோம்.

இந்த நிலையிலேயே எமது தலைவர் கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் ஏதோவொரு ஒரு புள்ளியில் ஆரம்பித்துவிட்டு பின்னர் கால ஓட்டத்தில் படிப்படியாக எமது அரசியல் இலக்கு நோக்கிப் பயணிக்கலாம் என்பதில் உறுதியாக இருக்கின்றார். அதுவே நீங்கள் கேட்ட காணி, பொலிஸ் அதிகாரங்கள் சம்பந்தமான எனது கருத்தாக இருக்கின்றது.

**அதிகாரங்கள் அவசியம், சாதுரியமாகப் பெறப்பட வேண்டும்.**

**வி. இராதாகிருஷ்ணன்,**
[பாத மலையக மக்கள் முன்னணி]

இந்த நாட்டின் கடந்த கால வரலாறுகளை ஆராய்ந்து பார்க்கும்போது,

[illegible]

அதிகாரப் பகிர்வு என்ற விடயத்தில் காணி, பொலிஸ் அதிகாரங்கள் என்பது சிறுபான்மை மக்களுக்கு அவசியமானது என்பது தெட்டத் தெளிவானது. அதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. எனினும் தற்போது அதனை வழங்க முடியாது என்று அரசு கூறிவருகின்றது. என்னைப் பொறுத்தவரையில் அரசின் இந்தத் தீர்மானம் இந்த நாட்டில் 75வீதமான சிங்கள மக்களை திருப்திப்படுத்தும் நோக்கிலேயே அரசு

இவ்வாறான முடிவை எடுத்துள்ளதாகத் தோன்றுகிறது. ஆனால் பொறுப்புமிக்க அரசாங்கம் என்ற வகையில் 25 வீதமாக வாழ்கின்ற சிறுபான்மை மக்களதும் உணர்வுகளுக்கு மதிப்பளித்து அவர்களது அபிலாஷைகளை தீர்த்து வைக்க வேண்டியதும் இந்த அரசாங்கத்தின் தார்மீக கடமை என்பதும் நான் சுட்டிக்காட்ட

விரும்புகின்றேன்.

அதேவேளை அரசாங்கத்தின் குறித்த அறிவிப்பை காரணம் காட்டி பேச்சுகளிலிருந்து விலகிச் செல்வதோ முரண்டுபிடிப்பதோ, சண்டித்தனம் செய்வதோ தமிழர் தரப்புக்கு ஏற்ற அணுகுமுறையாக அமையாது. கடந்த காலத்தில் முரண்டு பிடித்து ஆயுதம் தூக்கியதால் தமிழர் தரப்பு சந்தித்த துன்பங்கள் இன்றும் எம்கண்முன் சாட்சியங்களாக விரிந்து கிடக்கின்றன. இவற்றை உணர்ந்து கொண்டு தமிழர் தரப்பு சாதுரியமான முறையில் தமது இலக்கு நோக்கிப் பயணிக்க வேண்டும். அரசாங்கமும் குறுகிய சிந்தனைகளுக்கு அப்பால் சென்று இந்த நாட்டினது வளமான எதிர்காலத்துக்கு தேவையான தீர்மானங்களை துணிந்து நிறைவேற்ற வேண்டும்.

**புறநிழுக்காங்களை அர்த்தமுள்ளதாக மாற்ற வேண்டும்.**

**எஸ். குகவரதன்,**
[கொழும்பு மாநகர சபை உறுப்பினர்]

இந்த அரசியல் தீர்வு ஒன்றை முன்வைக்க வேண்டிய அவசியமும், அவசரமும் அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ளதாகவே நான் கருதுகின்றேன். இதற்கு இந்தியா உட்பட்ட புறசக்திகளின் அழுத்தம் பிரதான காரணமாக இருக்கின்றது. எனவே தீர்வு திட்டம் ஒன்றை முன்வைக்கின்ற தேவை ஒன்று ஏற்பட்டுள்ளது. இச்சந்தர்ப்பத்தை தமிழர் தரப்பு அர்த்தமுள்ளதாக மாற்ற வேண்டும்.

காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்குவதற்கு அரசும் சிங்கள மக்களில் ஒருபகுதியினரும் தயக்கம் காட்டுவதாக கூறப்படுகிறது. என்னைப் பொறுத்தவரையில் அது தேவையற்ற சிந்தனையாகும். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூறுவது போன்று மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி என்ற அடிப்படையில் அதிகாரங்கள் பகிரப்படுகின்ற போது முக்கிய கடிவாளங்கள் மத்திய அரசின் கரங்களிலேயே இருக்கப் போகின்றது என்பதுதான் உண்மை. இங்கு இன்னொன்றை கூற விரும்புகின்றேன். சிங்கள மக்கள் மத்தியில் காணப்படுகின்ற புத்திஜீவிகள் குறித்த அதிகாரங்களை வழங்குவதன் மூலம் நாட்டில் நிரந்தரமான சமாதானமும், ஐக்கியமும் ஏற்படும் என்ற வகையில் அவற்றை வழங்குவதில் தயக்கம் காட்டத் தேவையில்லை என்றே கருதுகின்றனர்.

(தொடர்ச்சி அடுத்த வாரம்)

## பரபரப்பான கருத்துக்கணிப்பு

## சிவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் தேசியக் கூட்டமைப்பு முஸ்லிம் காங்கிரஸ் சந்திப்பின் பின்னணியில் கிழக்கு

-பிரகஸ்பதி-

கிழக்கு மாகாணம் பிரிந்திருக்கின்ற நிலையில், வடக்குடன் இணைத்தால் மாத்திரமே தமிழ் மக்களின் தீர்வு சாத்தியம் எனத் தமிழ் தேசியக் கூட்டமைப்பு கூறிக் கொண்டிருக்கிறது. அதற்குள் அரசாங்கத்துடன் இணைந்திருக்கும் முஸ்லிம் காங்கிரசுடன் தமிழ் கூட்டமைப்பு பேச்சு ஒன்றினை அண்மையில் நடத்தியுள்ளது. இதன் உள்நோக்கம் குறித்து பல்வேறுபட்ட

சபை முறைமை தொடர்பிலும், தமிழர்களது அரசியல் விடயங்கள் குறித்தும் பல்வேறு காத்திரமான கருத்துக்களை வெளியிட்டு வருப-வருமான கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா. துரைரெத்தினம் தமிழ் தேசிய கூட்டமைப்பு முன்வைத்துள்ள இனப் பிரச்சினைக்கான குறைந்தளவான அதிகாரம் கொண்ட தீர்வுத்திட்டத்தையாவது

கடமையாகும். இலங்கை சுதந்திரம் அடைந்தபின் தமிழர் உரிமைகள் மறுக்கப்பட்டதை ஒவ்வொரு தமிழரும் உணர்ந்ததாலேயே தமிழ் மக்களிடையே தனிநாட்டுச் சிந்தனை பிறந்தது.

இந்தப் பின்புலத்தில் இதற்காக நாம்கொடுத்த விலைகள் எண்ணற்றவை. தமிழ் மக்களின் இனப்பிரச்சினை உரிமைகள் தொடர்பாக வடக்கிலும்

அடுத்து தோன்றியுள்ளது. இந்தப் பேச்சுவார்த்தையானது, எதிர்வருகின்ற தேர்தலில், முக்கியமாக கிழக்கு மாகாண சபையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆளும் தரப்பாக இருக்க வேண்டும் என்ற நோக்கை அடிப்படையாகக் கொண்டு இருக்கலாம் என்ற கருத்தும் உலாவத் தொடங்கியிருக்கிறது.

இதற்கிடையில் அரசாங்கம் தமிழ் தேசியக் கூட்டமைப்பு சொல்வதுபோல் வடக்கு, கிழக்கு இணைப்பிற்கு இணங்குமானால் அரசில் இருந்து வெளியேறுவேன் என சிறுவர் மற்றும் மகளிர் விவகார பிரதி அமைச்சரும் காத்தான்குடியைச் சேர்ந்த பிரபல

கருத்துக்கள் கிழக்கின் அரசியல் தலைவர்கள் சிலரால் முன்வைக்கப்பட்டபடி இருக்கிறது.

இந்த வாரம் இவ்விடயம் குறித்து ஆராயலாம். கிழக்கு மாகாணத்தை தனி அலகாக பிரித்து தமிழ் மக்களை துன்பங்களுக்குள் சிக்கவைப்பதற்கே தமிழ் தேசிய கூட்டமைப்பு முஸ்லிம் காங்கிரசுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுவருகிறது. தனி அலகு என்பது தொடர்பில் கிழக்கு மாகாணத்தை சேர்ந்தவர்கள் சிந்திக்கவேண்டும் என கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் அண்மையில் மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச பெண்கள் வாழ்வாதார திட்ட அங்குரார்ப்பண நிகழ்வில் உரையாற்றிய போது தெரிவித்திருக்கிறார்.

எமது சமூகம் வரலாற்று, பொருளாதார ரீதியிலான சமூகத்தை உருவாக்க முயன்றது கிடையாது. அதேபோன்று கிறிஸ்துக்கு முற்பட்ட வரலாற்றைக் கொண்ட இந்த மட்டக்களப்பு மாவட்ட மக்கள் தங்களுக்கென்று ஒரு அரசியல் அடையாளம் அற்றவர்களாகவே வாழ்ந்து வருகிறார்கள். இன்னும் மட்டக்களப்பு மாவட்டத்தின் அரசியல் யாருக்கும் கொடி பிடிக்கும் அரசியலாகவே இருந்துவருவது வேதனைக்குரிய விடயமாகும். அதனை தொடர்ந்து கொண்டு செல்லக்கூடாது என்பதில் நான் உறுதியாகவுள்ளேன்.

இன்று தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு பிரச்சினையான தமிழ் கட்சியாக தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியே உள்ளது. அத்துடன் பிரச்சினையான அரசியல்வாதியாக நான் உள்ளேன். இன்று முஸ்லிம் காங்கிரசுடன் தமிழ் தேசிய கூட்டமைப்பு பேச்சுவார்த்தை நடத்துகின்றது. கிழக்கின் தனி அலகு தேவையாகவுள்ள முஸ்லிம் காங்கிரசுடன் தமிழ் தேசிய கூட்டமைப்பு எதனைப் பற்றிப் பேசப்போகின்றது.

தனியலகு என்பது தொடர்பில் கிழக்கு மாகாணத்தை சேர்ந்தவர்கள் சிந்திக்க வேண்டும். ஓட்டமாவடி, ஏறாவூர், காத்தான்குடி பிரதேசங்களைக் கொண்டு எவ்வாறு தனியலகு அமைப்பார்கள். துண்டுதுண்டாக முஸ்லிம் பிரதேசங்களைக் கொண்டு எவ்வாறு தனியலகு அமைப்பார்கள் என்பதை கிழக்கு மாகாணத்தை சேர்ந்த ஒவ்வொருவரும் சிந்திக்கவேண்டும் எனவும் காரசாரமாக கிழக்கு மாகாண முதலமைச்சர் உரையாற்றியிருக்கிறார்.

இதற்கிடையில், தீவிரமாக தமிழ் மக்களின் அரசியல் விடயங்களில் கிழக்கு மாகாணத்தில் ஈடுபாட்டுடன் செயற்பட்டுவருபவரும், மாகாண

அரசாங்கம் ஏற்றுக்கொண்டு வடகிழக்கு மக்கள் ஒரு நிரந்தர தீர்வைப்பெற்று நிம்மதியாக வாழ வழியேற்படுத்தவேண்டும் என தனது அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

அதேநேரம், தமிழ் மக்களின் உரிமைகள் தொடர்பில் தமிழ் தேசம் ஒன்றை உருவாக்குவது தொடர்பாகவும் இதற்கு ஒத்துழைப்பு வழங்குமுகமாக சர்வதேசம் தலையிடுவது தொடர்பாகவும் தலையிடாமல் இருக்கவேண்டுமாயின் இலங்கை அரசு மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெற்று அரசாட்சி செய்துகொண்டு தேசிய பாதுகாப்புக்கு ஆபத்தகம் ஏற்படும் என சொல்வதும் திம்பு பேச்சுவார்த்தை போல் என்று கூறுவதையும் நிறுத்திவிட்டு 89ஆம்

> **தமிழ் மக்களின் ஏகபிரதிநிதியாக தம்மை வெளிக்காட்டிக் கொண்டிருக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு முஸ்லிம்களின் ஏக பிரதிநிதிகள் எனச் சொல்லிக் கொண்டிருக்கும், முஸ்லிம் காங்கிரசுடன் மாத்திரம் தமிழ் மக்களின் விடயங்களைப் பேச்சுவார்த்தை நடத்தி எதனைச் சாதித்துக் கொள்ளப் போகிறது. முஸ்லிம்களின் அரசியல் தலைவராக இருந்த அஷ்ரப்பின் மறைவின் பின்னர் தேசிய காங்கிரஸ், அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் என பலவாகப் பிரிந்து எட்டுக்கும் மேற்பட்ட துண்டுகளாக உள்ள முஸ்லிம் அரசியல் தலைவர்களுடன் பேச்சுநடத்துவது குறித்து தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்னவாக இருக்கும்.**

ஆண்டு முன்வைக்கப்பட்டதும் தமிழ் கட்சிகளால் முன்வைக்கப்பட்டதும் தற்சமயம் தமிழ் தேசியக் கூட்டமைப்பினால் முன்வைக்கப்பட்டதுமான வடகிழக்கு இணைப்பு, காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்க இலங்கை அரசாங்கம் முன்வரவேண்டும்.

அத்தோடு முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் அந்த மக்களோடு பேசி தீர்வு-காண வேண்டியது மத்திய அரசின்

கிழக்கிலும் புலம்பெயர்ந்த நாடுகளிலும் உள்ள தமிழர்கள் அனைவரும் தமது இனத்தின் உரிமையை பெறுவதற்காக ஒவ்வொருவகையில் ஒவ்வொருவரும் பங்காற்றி உள்ளனர்.

குறிப்பாக இப்போராட்டத்திற்கு போராளிகள் தொடக்கம் பொருளாதாரம் வரையும் ஜனநாயகரீதியாக இப்போராட்டத்தை வளர்த்துச்செல்ல ஒவ்வொருவரும் தமது பங்களிப்பை வழங்கி உள்ளனர் என்பதை எவரும் மறுக்கமுடியாது. அதனை மறுப்பதற்கும் எவருக்கும் உரிமையில்லை.

எமது நாட்டில் மூன்று தசாப்தமாக நீடித்த போரும் உயிரிழப்புகளும் முரண்பாடுகளும் விரும்பியோ விரும்பாமலோ இலங்கை தீவின் அனைத்து இனமக்களையும் பெரும் துயரத்தில் ஆழ்த்தியது. இதனை எந்த இதயசுத்தியுள்ள மனிதர்களும் மறுதலிக்க முடியாது.

இந்த வகையில் இன்று எமது நாட்டில் ஒரே நாடு, ஒரே தேசம் எல்லோரும் ஒரே தாய் மக்கள் என்ற கோட்பாட்டை முன்னிலைப்படுத்தி மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்துடன் ஆட்சி அமைத்துள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஜனாதிபதியான மகிந்த ராஜபக்ச அவர்கள் தனது சிந்தனையை உணர்வுபூர்வமாகவும் இதயசுத்தியோடும் நடைமுறைப் படுத்துவதற்கு இதைவிட வரலாற்றில் பிறிதொரு சந்தர்ப்பம் கிடைக்கப் போவதில்லை.

எனவே உலக நாடுகளின் தலையீட்டை தவிர்ப்பதற்கும் சர்வதேச நெருக்கடி நிலையில் இருந்து தான் எதிர்நோக்கி உள்ள சவால்களை அகற்றவும், உலகத்தமிழர்களின் இன்றைய இலங்கை அரசு தொடர்பான சந்தேகப்பார்வையை இல்லாது செய்யவும் உண்மையில் தனது சிந்தனையை நிலைநிறுத்தி தனது ஆட்சி அதிகாரத்தை ஸ்திரப்படுத்தவும் வடக்கு, கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கிய நிரந்தரத்தீர்வை வழங்கி எல்லோரையும் ஒரே குடையின் கீழ் அரவணைத்துக் கொள்ளவேண்டும் எனத் தெரிவித்திருக்கிறார்.

இது போல் ஒவ்வொருவரும் தமது கருத்துக்களை வெளியிட வேண்டிய நிலை தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முஸ்லிம் காங்கிரசுடனான பேச்சுவார்த்தையை

அரசியல்வாதியுமான எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா அண்மையில் தெரிவித்திருக்கிறார்.

போட்டியான அரசியல் செயற்பாடுகள் தேவையாக இருக்கின்ற போதும், நியாயமான நேர்மையான ஆக்கபூர்வமான கருத்துக்கள் வரவேற்கப்படலாம்.

இன அழிப்பு, நிலப் பறிப்பு இவற்றைத் தடுப்பதற்காகவே நாங்கள் அரசியல் செய்கிறோம் தந்தை செல்வாவின் வழியில் அரசியல் செய்கிறோம், கொள்கைக்கு தமிழ் மக்கள் வாக்களிப்பார்கள் என்ற வகையிலான தமிழ் தேசியக் கூட்டமைப்பினரின் அரசியலுக்குள் இப்போது புதிதாக நுழைக்கப்பட்டிருக்கும் முஸ்லிம் காங்கிரசின் பேச்சுவார்த்தை எந்த நிலையில் வந்து நிற்கும் என்பது யாருக்கும் தெரியாது.

தமிழ் மக்களின் ஏகபிரதிநிதியாக தம்மை வெளிக்காட்டிக் கொண்டிருக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு முஸ்லிம்களின் ஏக பிரதிநிதிகள் எனச் சொல்லிக் கொண்டிருக்கும், முஸ்லிம் காங்கிரசுடன் மாத்திரம் தமிழ் மக்களின் விடயங்களைப் பேச்சுவார்த்தை நடத்தி எதனைச் சாதித்துக் கொள்ளப் போகிறது. முஸ்லிம்களின் அரசியல் தலைவராக இருந்த அஷ்ரப்பின் மறைவின் பின்னர் தேசிய காங்கிரஸ், அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் என பலவாகப் பிரிந்து எட்டுக்கும் மேற்பட்ட துண்டுகளாக உள்ள முஸ்லிம் அரசியல் தலைவர்களுடன் பேச்சுநடத்துவது குறித்து தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்னவாக இருக்கும்.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தில் உள்ளதைப் பெற்றுக் கொள்ள முடியாத தமிழ் அரசியல் தலைவர்கள் என்பவர்கள், அதனை ஏற்றுக்கொள்ளாத நிலையில், அதனைவிடவும் கூடிய அதிகாரம் கிடைத்துவிடும் என்று எப்படி நம்புகிறார்கள் என்பது இந்த இடத்தில் சந்தேகத்திற்கிடமானதாகவே இருக்கிறது. இலங்கை, இந்திய ஒப்பந்தத்தின்படி கிழக்கில் பொதுஜன வாக்கெடுப்பை நடத்தி அதன்படி வடக்கு கிழக்கின் இணைப்பினை நிரந்தரமாக்க நடவடிக்கை மேற்கொண்டிருந்தால் இப்போது ஏற்பட்டிருக்கும் நிலைமை உருவாகியிருக்காது.

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெண்கள் பக்கத்திற்குரிய தரமான ஆக்கங்கள் வாசகர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

அனுப்பவேண்டிய முகவரி: த.பெ.இல : 167, யாழ்ப்பாணம்

பாரதியின் பெண், ஆண்களுக்கு நிகரானவள். உரிமை மிக்கவள். பெருமை மிக்கவள். வையகத்தைப் புதுமையுறச் செய்பவள், கலியை அழிப்பவள். உலக நுட்பம் தேர்பவள். காதலன் ஒருவனைக் கைப்பிடிப்பவள், அவனுக்குத் தோள் கொடுத்துத் துணையாக நிற்பவள்.

# புதுமைப்பெண்!!



பாரதியாரின் புதுமைப்பெண் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு ஆகிய பெண்மைக் குணங்களைத் தவிர்ப்பவள். அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பு எதற்கு? என்ற வினாவிற்கு விடையாக, 'பட்டங்கள் ஆளவும் சட்டங்கள் செய்யவும்' விரும்புபவர்கள் என்கிறார். பாரதியின் சிந்தனைகளைப் பார்க்கும்போது, பாரதியிடம் பெண்மையுமை குறித்த வலுவான மறுப்புணர்வு இருந்திருக்கிறது என உணர்ந்துகொள்ள முடிகிறது. பெண்கள் மீதான சமூகத்தளைகள் களைந்தெறியப்பட வேண்டும் என்ற வேட்கை பாரதியாரிடம் அதிகமாக இருந்தது என்பதைப் பெண்கள் விடுதலைக் கும்மி என்ற பாடல் மூலம் அறிந்து கொள்ளலாம்.

பாரதியாரின் காலச்சூழலைப் பொறுத்தவரையில் அவருடைய பெண் பற்றிய சிந்தனை என்பது முரண்பட்டதாகவே இருக்கிறது. அதாவது அன்றைய காலகட்டத்தில் பெண்கள் வீட்டிற்குள் அடக்கப்பட்டிருந்தனர் என்பதை உணர்ந்ததால்தான் அதனை எதிர்த்துக் குரல் கொடுக்கவேண்டிய கட்டாயம் அவருக்கு நேர்ந்துள்ளது. அதனால் அவர் புதுமைப்பெண் எப்படி இருக்கவேண்டும் எனப் பட்டியலிடுகிறார். ஆனால் அடிப்படையில் அவர் ஓர் இந்துவாக இருப்பதால் பெண்ணைத் தெய்வமாகக் காணுதல். தெய்வத்தைப் பெண்ணாகக் காணுதல். புதுமைப் பெண்ணைக் காண விரும்புதல், பெண்ணின் அழகைப் போற்றுதல் ஆகியன இவரது பெண் வருணனைக்கான அடித்தளங்களாக அமைந்துள்ளன.

சமுதாயம் குறித்த புதிய தேடல் என்பது பெண்ணின் பரிமாணத்தை உள்ளடக்கியது. பெண் மதிக்கப்படும் பொழுது சமூகம் மிளிரும். ஏனென்றால் ஒரு சமூகத்தின் இயக்கத்திற்குப் பெண்ணின் பங்களிப்பும் அவசியமாகிறது. பெண்ணைப் புறம் தள்ளி எந்த வளர்ச்சியும் கிடையாது. பெண் இயற்கையானவள். இயற்கை எப்படிச் சமூகத்திற்குப் பயன்படுகிறதோ அதைப் போல பெண்ணும் சமூகத்திற்குப் பயன்படுகிறாள். அதனால்தான் பெண்ணும் இயற்கையும் ஒன்று எனக் கூறுகின்றார்

பெண் அறிவை வளர்த்துக் கொள்ளும்போது சமூகம் வளர்ச்சிப் பாதை நோக்கி நகரும் என்பதில் உறுதியாக இருக்கிறார் பாரதியார்.

பெண்கள் அறிவை வளர்த்தால் வையம்
பேதமை அற்றிடுங்காணீர் (முரசு-10)

என்று பாரதி கூறுவதை இங்கே நினைவுபடுத்திக் கொள்வோம்.

# முகப்பருவை போக்க எளிய வழிமுறைகள்

☛ சந்தனத்தை அரைத்து படிகாரம் கரைத்த தண்ணீரில் கலந்து பூசலாம்.

☛ ரோஜா இதழ்களைக் காய வைத்து பொடித்து அதை ரோஸ் வோட்டரில் கலந்து முகத்தில் பூசலாம்.

☛ புதினா இலையை கழுவி நன்கு அரைத்து முகத்திலும், கழுத்திலும் தேய்க்கவும். அரை மணி நேரத்திற்கு பிறகு கழுவிவிடவும். இப்படி தொடர்ந்து செய்துவந்தால் முகப்பரு மறையும்.

☛ முகப்பரு குழம்பு மாறு 1 தேக்கரண்டி முள்ளங்கி அரைத்து, அதில் 1 தேக்கரண்டி மோரை கலக்கி முகத்தில் தேய்த்து அரை மணி நேரத்திற்கு பிறகு கழுவி விடவும்.

☛ தினமும் ஐந்து அல்லது ஆறு முறை முகத்தைச் சுத்தமாகக் கழுவ வேண்டும். ஒரு நாளைக்கு ஐந்து லீற்றர் தண்ணீர் குடிக்கவும்.

☛ பழங்கள், பழச்சாறு, கீரைகள், காய்கறிகளை உணவில் அதிகமாகச் சேர்த்துக் கொள்ளவும்.


எண்ணெய் பலகாரங்களைத் முழுவதும் தவிர்க்க வேண்டும். எலுமிச்சைச் சாறுடன் சிறிது வெந்நீர் கலந்து முகத்தை கழுவி வரலாம்.

☛ வெள்ளைப் பூண்டை பாலில் வேக வைத்து அரைத்து முகத்தில் பூசலாம். ஆனால் இதை தினமும் செய்ய கூடாது.

☛ கொழுப்பு நிறைந்த அசைவ உணவுகளையும், நெய், வெண்ணெய், கேக், ஐஸ்கிரீம், சொக்லெட், பாலாடை போன்றவற்றையும் கண்டிப்பாக சாப்பிட கூடாது.

☛ முகப்பருவை கிள்ளுவது கூடாது. இப்படி செய்வதால் முகப்பரு அதிகமாகும்.

# உருளைக்கிழங்கு ஓமப்பொடி



## தேவையான பொருட்கள்

வேகவைத்த உருளைக்கிழங்கு 1 பெரியது
கடலை மா - 1 கப்
அரிசிமா - 1/4 கப்
ஓமம் - 1/2 மேசைக்கரண்டி
உப்பு - தேவைக்கு
எண்ணெய் - பொரிக்க
நெய் - 1 மேசைக்கரண்டி

## செய்முறை

உருளைக்கிழங்கை நன்கு கட்டியில்லாமல் மசிக்கவும். ஓமத்தை சுத்தம்செய்து அரைத்து 1/4 கப் அளவிற்கு வடிக்கட்டவும்.

பாத்திரத்தில் மசித்த உருளைக்கிழங்கு, கடலைமா, அரிசிமா, உப்பு ஓமத்தண்ணீர் நெய் அனைத்தும் கலந்து கெட்டியாக பிசையவும்.

கடாயில் எண்ணெய் ஊற்றி காய்ந்ததும் மாவை ஓம அச்சில் போட்டு நேரடியாக எண்ணெயில் பிழிந்து பொரித்தெடுக்கவும்.

# தாய், சேய் பாதுகாப்பு

ஒரு குழந்தை முழுமையாக வளர்ச்சி அடையவும், எதிர்காலத்தில் மனதாலும், உடலாலும் ஊனமில்லாமல் பிறந்து வளரவும், கருவுற்ற பெண்கள் சில நடைமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டியது அவசியமாகிறது.

கர்ப்பிணி பெண்கள் சத்து மாத்திரைகளை நேரடியாக உபயோகிக்கக் கூடாது. கீரைகள், பழங்கள், தானியங்கள் காய்கறிகள்



போன்றவற்றில் தேவையான சத்துக்கள் அனைத்தும் கிடைக்கின்றன. சத்து மாத்திரைகளை உபயோகித்தால் அவை சில நேரங்களில் தாயின் உடல் சமநிலையை மாற்றி, கருவில் உள்ள குழந்தையை பாதிக்க ஆரம்பிக்கும். இதனால் குழந்தைகள் பிறந்து சில நாட்கள் நன்றாக இருந்து பின்பு பாதிப்பை ஏற்படுத்தும். சில குழந்தைகளுக்கு உடல் உறுப்புகள் பாதிக்கப்படும். எனவே மாத்திரைக்கு பதில் அதற்கு ஈடான காய்கறிகளை அதிகளவில் சேர்த்துக் கொள்ளலாம்.

மதிய உணவில் ஏதாவது ஒரு கீரையை சேர்த்துக் கொள்ள வேண்டும். அதிக சூடு, அதிக குளிர்ச்சி தரும் பழங்களைத் தவிர்த்து மற்ற பழங்களைச் சாப்பிடுவது நல்லது. ஜூஸ் செய்து கூட அருந்தலாம்.

கர்ப்பிணிப் பெண்கள் சரியான நேரத்திற்கு உணவு அருந்த வேண்டும். உணவு உண்டவுடன் தூங்கக் கூடாது. சற்று ஓய்வெடுத்தாலே போதுமானது. முடிந்தவரை பகல் தூக்கத்தைத் தவிர்ப்பது நல்லது.

தொலைக்காட்சியை அதிக நேரம் பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது. மனதைப் பாதிக்கும் காட்சிகளைப் பார்ப்பதைத் தவிர்க்க வேண்டும்.

## வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

பரிசுப் போட்டி இல :-301

கேள்வி : பெண்கள் தங்களுடைய அறிவை வளர்த்துக் கொள்வதால் ஏற்படும் மாற்றம் என்ன?

பரிசு 1000/- ரூபா.

விடையைப் பக்கத்திலுள்ள கூப்பனில் எழுதி, தபாலட்டையில் அனுப்பி வைக்கவும். அனுப்பி வைக்க வேண்டிய முகவரி.

வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி, பரிசுப் போட்டி இல : 301
தினமுரசு வாரமலர், த.பெ.இல : 1772, கொழும்பு, த.பெ.இல - 167, யாழ்ப்பாணம்.
அனுப்ப வேண்டிய கடைசித் திகதி-18.01.2012

சரியான விடையை எழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவார்.

பரிசுப் போட்டி இல- 291 இற்கான விடை :- 10 வருடங்களாக.
பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி:- செ.கிருஜித், ஆலங்கேணி -02, கிண்ணியா, திருகோணமலை.

பெயர் : ....................

முகவரி : ....................

....................

....................

தே.அ. அட்டை இல : ....................

விடை : ....................

கையொப்பம் ....................

301



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்.மாநகர சபை அலசுவது மதியூகி

# தெரிந்த பொய்களும்! தெரியாத உண்மைகளும்!!

# யாழ்.மேயரின் பேட்டி

**கேள்வி:- உங்கள் தலைமையின் கீழ் இயங்கி வரும் யாழ்.மாநகர சபையின் ஆளும் கட்சியிலிருந்து விலகியதாகக் கூறிக்கொள்ளும் உறுப்பினர்கள் அண்மைய நாட்களாக ஏற்படுத்தும் குழப்பங்கள் தொடர்பில் தங்களின் அடுத்த நடவடிக்கை என்ன?**

**பதில்:-** நாய்கள் குரைக்கும்; ஆனால் பயணிகள் கூட்டம் தொடர்ந்து போய்க்கொண்டே இருக்கும் (Dogs Braks caravan goes on) என்ற ஓர் ஆங்கிலப் பழமொழிதான் நினைவுக்கு வருகிறது. யார் எதிர்த்தாலும், யார் விலகினாலும், யார் குழப்பம் விளைவித்தாலும் நாங்கள் மேற்கொண்டுள்ள மக்கள் சேவை தொடர்ந்து நடைபெறும். எமது தலைமை அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கும்.

**கேள்வி:- இவ்வாறு விலகியவர்கள் உங்கள்மீதும் உங்களுக்கு வேண்டியவர்கள் மீதும் சுமத்தி வருகின்ற குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் உங்கள் கருத்து என்ன?**

**பதில்:-** ஆளும் கட்சியில் இருந்து விலகியவர்கள் பேசாமல் இருந்தால் தான் அது அதிசயம். விலகியவர்கள் விலகும்வரை என்னையும் மாநகரசபை நிர்வாகத்தைப் போற்றிப் புகழ்ந்துவிட்டு இப்பொழுது தான் குற்றச்சாட்டுக்களைக் கூற ஆரம்பித்துள்ளார்கள். இவர்கள் தங்கள் குற்றச்சாட்டுக்களை ஆதாரபூர்வமாக நிரூபிக்க இயலாமையால்தான் இவ்வாறான குழப்பங்களை ஏற்படுத்தி தாங்களும் குழம்பி மக்களையும் குழப்ப முயற்சிக்கிறார்கள்.

**கேள்வி:- இவ்வாறான குழப்பங்களுக்கு மத்தியில் மாநகரசபையின் செயற்பாடுகள் எவ்வாறு முன்னெடுக்கப்படுகின்றன?**

**பதில்:-** போற்றினாலும் தூற்றினாலும் மாநகர சபையின் செயற்பாடுகள், மக்கள் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும். எனது நிர்வாகத்தின் கீழ் யாழ். நகர் நாளுக்கு நாள் அடைந்துவரும் வளர்ச்சியைக் கண்டு பொறாமையாலும் பொச்சாப்பினாலும் இவர்கள் கூறுவதை மக்கள் ஒரு போதும் நம்பமாட்டார்கள்.

**கேள்வி:- யாழ்.நகர சபை தொடர்பாக யாழ். ஊடகங்களில் வெளியாகின்ற செய்திகள் உங்களுக்குத் திருப்தி அளிக்கின்றதா?**

**பதில்:-** யாழ்.நகரில் இருந்து வெளிவரும் ஊடகங்கள் எல்லாம் நடுநிலையில் நின்று, காய்தல், உவத்தல் இன்றி செய்திகளை வெளியிடுகின்றனவா என்பது ஒரு பத்திரிகை ஆசிரியர் என்ற வகையில் உங்களுக்கு தெரிந்திருக்க வேண்டும். "நல்லவை செய்யாதெனினும் அல்லவை செய்தல் ஒழிமின்" என்பது ஆன்றோர் வாக்கு. எந்த விதத்தில் என் மீது அவதூறு, குற்றச்சாட்டுக்களைச் சுமத்தலாம் எனப் பேயாக அலையும் சில யாழ். நகர ஊடகங்களில் வெளிவரும் செய்திகளை மக்கள் பொருட்படுத்தவே மாட்டார்கள்.

**கேள்வி:- தங்களது கட்சியிலிருந்து கட்சி மாறுபவர்கள் அல்லது விலகிய தாகக் கூறுபவர்கள் தொடர்பில் எவ்விதமான நடவடிக்கைகள் எடுக்கப் போகின்றீர்கள்?**

**பதில்:-** ஆளும் கட்சியில் இருந்து மாறுபவர்கள், விலகுபவர்கள் சம்பந்தமாக கட்சி தலைமை தகுந்த நடவடிக்கை எடுக்கும். நான் என்றும் எனது மக்களின் சேவையை எனது தலையாய கடமையாக ஏற்றுக்கொண்டு செயலாற்றுவேன்.

இந்தச் சந்தர்ப்பத்தில் பாரதிதாசனின் கவிதை அடிகள் சிலவற்றை ஞாபகமூட்ட விரும்புகிறேன்.

"காரிருளால் சூரியன் தான் மறைவதுண்டோ?
கறைச் சேற்றால் தாமரையின் வாசம் போமோ?
பேரெதிர்ப்பால் உண்மைதான் இன்மையாமோ?

......................................................

பிறர் சூழ்ச்சி என் பணியை தடுப்பதுண்டோ


எமது கட்சி யாழ்.மாநகர சபையின் நிர்வாகத்தைப் பொறுப்பேற்ற பின் செய்த அபிவிருத்திப் பணிகளை பட்டியல் இட்டும் கூறமுடியாது. வீதி, வாய்க்கால், வடிகால் புனரமைப்புப் பணிகளுக்கு மேலாக இந்திய அரசின் உதவியுடன் கோடிக்கணக்கான ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ள கலாசார மண்டபம் போன்ற ஒன்றை என்பணி மீது சேற்றை வாரி இறைப்பவர்களால் கனவில் கூட நினைத்துப் பார்க்க முடியுமா? காலம் சென்ற மாநகர முதல்வர் அல்பிரட் துரையப்பாவிற்கு பின் நேற்றுவரை யாழ். மாநகரசபை நிர்வாகம் இலங்கை தமிழரசுக் கட்சியின் நிர்வாகத்தின் கீழ்தான் இருந்தது. அக்கால கட்டத்தில் இதைச் செய்தோம் என இவர்களால் எதையாவது ஒன்றைச் சுட்டிக்காட்ட முடியுமா?

**கேள்வி:- இறுதியாக யாழ். மக்களுக்குக் கூற விரும்புவது என்ன?**

**பதில்:-** தேர்தலில் மக்களுக்கு எதைக் கூறி பதவிக்கு வந்தோமோ, அதனை செய்துகொண்டிருக்கின்றோம். சுயலாப அரசியல் கொள்கைக்கு மாறான கருத்தினை கொண்டவர் எமது ஈழமக்கள் ஜன நாயகக் கட்சியின் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள். இவரது வழிநடத்தலில் உரிமைக்கு குரல் கொடுக்கும் அதேவேளை உறவுக்கு கை கொடுப்போம் என்ற கொள்கையில் எமது மக்களை சரியான வழியில் இட்டுச் சென்று அவர்களுக்கு சுபீட்சமான எதிர்காலத்தை அமைத்துக் கொடுப்போம் என்ற நம்பிக்கையை மக்களுக்குத் தெரியப்படுத்தி மக்களின் ஆணையை பலப்படுத்துமாறு யாழ். மக்களைக் கேட்டுக்கொள்கின்றோம்.

(முற்றும்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய அரசியலுக்குள் ஜெயலலிதா நுழைவாரா?

கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற அ.தி.மு.க. பொதுக்குழு கூட்டத்தில் தமது அடுத்த கட்ட அரசியல் நகர்வு என்ன என்பதை தெளிவாகக் கூறியிருக்கிறார் முதல்வர் ஜெயலலிதா.

"இந்திய ஆட்சி அதிகாரத்தில் அமரப் போகும் பிரதமரை தீர்மானிக்கிற சக்தியாக, நாம் திகழ்வதற்கான தருணம் கனிந்து கொண்டிருக்கிறது. அடுத்து அமையப் போகும் மத்திய அரசில் நாம் இருப்போம் நாமும் இருப்போம் என்பது திண்ணம்" என்ற அவரது வார்த்தைகள் அவர் எந்தப் பாதையில் போக விரும்புகிறார் என்பதைக் காட்டுகிறது.

40 எம்.பிக்களில் கணிசமான எண்ணிக்கையில் அ.தி.மு.க. வெற்றிபெற வேண்டும். நாடாளுமன்றத் தேர்தலுக்கு இன்னமும் ஒன்றரை ஆண்டுகள் உள்ளன.

சட்டமன்றத் தேர்தலிலும், உள்ளாட்சித் தேர்தலிலும்

தேசிய அரசியலுக்குள் வருவது தொடர்பாகவும், பா.ஜ.க.-அ.தி.மு.க. கூட்டு தொடர்பாகவும் அப்போது பேசப்பட்டது. அந்த விஷயங்களை ஜெயலலிதா வரை கொண்டு செல்லும் பொறுப்பும் சோவிடம் பா.ஜ.க. தலைவரால் கொடுக்கப்பட்டிருந்தது.

அதற்கு சமஸ்கிருத ஸ்லோகம் ஒன்றை சோ கூறியபோது, ஜெயலலிதா மரியாதை நிமித்தம் அவரை வணங்கி, 'வெளியேற்ற வேண்டியவர்கள் இன்னமும் ஒரு வாரத்துக்குள் வெளியேற்றப்படுவார்கள்' என்றாராம்.

இப்போது கடந்த பொதுக்குழுவில்



தேசிய அரசியலில் ஜெயலலிதா ஆதிக்கம் செலுத்த வேண்டுமானால், தமிழகம் மற்றும் கடந்த (வெள்ளிக்கிழமை) பொதுக்குழு கூட்டத்துக்கு முதல்வர் சென்றபோது.

பாண்டிச்சேரியில் இருந்து நாடாளுமன்றம் செல்லும்

அமோக வெற்றி பெற வேண்டுமானால், அதற்கு இப்போதிருந்தே ஹோம் வேர்க் செய்ய வேண்டும்.

கடந்த ஆட்சிக் காலத்தில் தி.மு.க. அரசு 5 வருடங்களில் சம்பாதித்த கெட்டபெயரை அ.தி.மு.க. அரசு 6 மாதங்களில் பெற்றுவிடும் போலிருக்கிறது என்பது ஜெயலலிதாவுக்கு தெளிவாக எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. அவரது நம்பிக்கைக்கு பாத்திரமான சோ ராமசாமி. நீங்கள் மத்திய அரசில் ஆதிக்கம் செலுத்த வேண்டாமா? என்று கேட்ட கேள்விதான், சசிகலாவை வெளியே அனுப்பியது.

சோ, ஜெயலலிதாவை தொடர்புகொண்டு சந்திப்புக்கு நேரம் கேட்டார். கடந்த வார இறுதியில் சந்திப்பு நடந்தது.

இதற்கிடையே சமீபத்தில் தமிழகம் வந்திருந்த பா.ஜ.க. தலைவர் ஒருவரும் ஜெயலலிதா தொடர்பாக சில விஷயங்களை சோவுடன் விவாதித்திருந்தார். ஜெயலலிதா

கடந்த வார இறுதியில் ஜெயலலிதாவைச் சந்தித்த சோ, அவரைச் சுற்றி நடக்கும் சசிகலா குரூப் விவகாரங்களை ஜெயலலிதாவுக்கு விளக்கமாகக் கூறியபோது, ஜெயலலிதாவுக்கு ஆச்சரியம் கலந்த கோபம் ஏற்பட்டது. ஆச்சரியத்துக்கு காரணம், இவை எதுவுமே அவருக்கு தெரிந்திருக்கவில்லை.

"எம்.ஜி.ஆர். காலத்துக்குப்பின் இம்முறை உங்களை அமோகமாக வெற்றிபெற வைத்திருக்கிறார்கள் தமிழக மக்கள். இதை நீங்கள் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள விரும்பவில்லையா? இன்னமும் ஒன்றரை வருடங்களில் வரப்போகும் நாடாளுமன்ற தேர்தலிலும் இப்படியொரு வெற்றி கிடைத்தால், தேசிய அரசியலில் நீங்கள் எங்கே போக முடியும் என்பது உங்களுக்கு தெரியாதா? அவற்றையெல்லாம், உங்களைச் சுற்றி இருப்பவர்களால் கெடுத்துக் கொள்ளப் போகிறீர்களா?" என்று இறுதியில் சோ கேட்டாராம்.

"நான் கடுமையான முடிவு ஒன்றை எடுக்க வேண்டும் என்கிறீர்கள் அப்படித்தானே" என்று ஜெயலலிதா இறுகிய முகத்துடன் கேட்டாராம்.

பேசிய ஜெயலலிதா, "வாஜ்பாயை பிரதமராக்கி, பாரதிய ஜனதா கட்சிக்கு முதன் முதலாக, இந்த தேசத்தை ஆளுகிற வாய்ப்பை உருவாக்கிக் கொடுத்ததில் நம் பங்கு அளவற்றது. நாம் ஒரு அனைத்து இந்திய அரசியல் இயக்கம் என்பதை அப்போதே நிரூபித்தோம்.

இப்போதும், அதை மேலும் பலப்படுத்தி, இந்திய ஆட்சி அதிகாரத்தில் அமரப்போகிற, பிரதமரை தீர்மானிக்கிற சக்தியாக நாம் திகழ்வதற்கான தருணம் கனிந்து கொண்டிருக்கிறது அடுத்து அமையப் போகும். மத்திய அரசில் நாம் இருப்போம் நாமும் இருப்போம் என்பது திண்ணம்"

அவரது ஆட்சியில் கெட்ட பெயர் வரக்கூடாது என்று முதல்வர் விரும்பினால், சசிகலா குடும்பத்தினரின் ஆதிக்கம் அகற்றப்பட வேண்டும்.

அதன் பின்னர்தான், டில்லிக்குச் செல்லும் பாதை கிளியராகும் என்பதை முதல்வர் புரிந்து கொண்டிருக்கிறார் என்று எடுத்துக் கொண்டால், சசிகலா சின்டிகேட்டின் வெளியேற்றம் தற்காலிகமோ என்ற பயம் தேவையில்லை. அது நிரந்தர வெளியேற்றமாக இருக்கும்.

# ஒரு நிமிடத்தால் வீணான எதிர்காலம்!

Skilled migration visa விண்ணப்பம் தமது அலுவலகத்தை ஒரு நிமிடம் தாமதமாக வந்தடைந்த



காரணத்தால் நிராகரிக்கப்பட்டது என ஆஸ்திரேலிய இமிகிரேஷன் திணைக்களம் தெரிவித்துள்ளது. அத்துடன் குறிப்பிட்ட அந்த விண்ணப்பம் சரியான முறையில் வந்து சேரவில்லை எனவும் கூறியுள்ளது.

Skilled migration visa விண்ணப்பங்கள் ஈ-மெயில் மூலம், அல்லது கூரியர் மூலம் அனுப்பப்பட வேண்டும் என ஆஸ்திரேலிய இமிகிரேஷன் தெரிவித்திருந்தது. குறிப்பிட்ட இந்த விண்ணப்பம் பக்ஸ் மூலமாக அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

டடென்டா முராட்சி என்ற 25 வயதுப் பெண்ணின் விண்ணப்பமே இந்தக் காரணங்களால் ஆஸ்திரேலிய இமிகிரேஷனால் நிராகரிக்கப்பட்டுள்ளது. டடென்டா, ஆஸ்திரேலிய இமிகிரேஷனுக்கு எதிராகத் தொடுத்திருந்த வழக்கில், தீர்ப்பு அவருக்குச் சாதகமாக அமையவில்லை.

மெல்போர்ன் பல்கலைக்கழகத்தில் கல்வி விசாவில் படித்து வந்த டடென்டா, ஆஸ்திரேலியாவில் நிரந்தரமாகத் தங்குவதற்கு Skilled migration விசாவுக்கு விண்ணப்பித்திருந்தார். அதற்கான சகல தகுதிகளும் அவருக்கு இருந்தது. விண்ணப்பம் சரியான முறையில் நிரப்பப்பட்டிருந்தது. விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டிய சகல ஆவணங்களும் இணைக்கப்பட்டிருந்தன.

அப்படியிருந்தும் விசா நிராகரிக்கப்பட்டது. இதையடுத்து அவர், ஆஸ்திரேலிய இமிகிரேஷன் இலாகாவுக்கு எதிராக வழக்குத் தொடுத்திருந்தார்.

நீதிமன்றத்தில் ஆஜராகிய இமிகிரேஷன் அதிகாரி, 'ஈ-மெயில் அல்லது கூரியரில் அனுப்பப்படாத காரணத்தால், விண்ணப்பத்தை நிராகரித்தோம்' என்று முதலில் கூறிய காரணம், நீதிபதியால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

அந்தக் கட்டத்தில் வழக்கில் இமிகிரேஷன் தரப்பு தோல்வியடையும் நிலை ஏற்பட்டது. அதன்பின், பேக்ஸில் வந்த டடென்டா முராட்சியின் விண்ணப்பத்தை ஆராய்ந்தபோது, அதில் பக்ஸ் வந்து சேர்ந்த திகதி மற்றும் நேரம் ஆகியவை பதிவாகியிருந்தன. மார்ச் 15ஆம் திகதி 17.01 மணிக்கு பக்ஸ் கிடைக்கப் பெற்றிருந்தது.

இதையடுத்து இமிகிரேஷன் இலாகா, தனது வாதத்தை மாற்றிக் கொண்டது.

"குறிப்பிட்ட விசா விண்ணப்பங்களுக்கான இறுதித் திகதி, மார்ச் மாதம் 15ஆம் திகதி. இமிகிரேஷன் இலாகாவின் அலுவலக நேரம் 5 மணியுடன் முடிகின்றது. இந்த விண்ணப்பம் 5.01க்கு வந்து சேர்ந்த காரணத்தால், இறுதித் திகதியைக் கடந்துவிட்டது" என்பது இமிகிரேஷன் இலாகாவின் புதிய வாதம்.

இந்த வாதம் நீதிபதியால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"டடென்டா முராட்சி மீது நான் அனுதாபம் கொள்வதைத் தவிர வேறு ஏதும் செய்ய முடியாது அவரது விண்ணப்பம் 1 நிமிடம் தாமதமாக வந்துள்ளது, விசா நிராகரிப்புக்குச் சரியான காரணமே" என்று கூறியுள்ள நீதிபதி, "மனிதாபிமான அடிப்படையில் நீதிமன்றம் செலவுக்கான பணத்தை இமிகிரேஷன் இலாகா ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்று தீர்ப்பளித்தார்.

ஒரு நிமிடத்தை வைத்து, ஒருவருடைய எதிர்காலத்துடன் விளையாடியிருக்கிறதே இமிகிரேஷன்!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருமணத்திற்கு** பின்னர் கணவன் - மனைவி இடையே தாம்பத்தியத்தில் ஏற்படும் மகிழ்ச்சியானது விளையாட்டுகளாலும் ஆரம்பமாகிறது. இணைந்து ஒன்றாக சமையலறையில் எழும் சின்னச் சின்ன சங்கீதமும், கிணற்றடியில் யாருக்கும் தெரியாமல் நிகழும் சின்ன ஸ்பரிசமும், தம்பதியரை உற்சாகத்திற்கு கொண்டு செல்லும். உறவு மட்டுமல்லாது வீட்டுக்குள் தம்பதியருக்கிடையே நிகழும் முன்விளையாட்டுகளும் அவசியம் என்கின்றனர் அனுபவசாலிகள்.

புதுமண தம்பதியர்களுக்கு ஒரு எதிர்பார்ப்பும், குறுகுறுப்பும் இருந்து கொண்டேதான் இருக்கும். ஆலயம்தான் கோவில் குளத்திற்கோ, திரைப்படங்களுக்கோ தம்பதியர்கள் தனியாக சென்றுவர வேண்டும் என்று வற்புறுத்தினர் முன்னோர்கள். திருமண தினத்தன்று நிகழும் சின்ன சின்ன வேடிக்கை, விளையாட்டுக்களும் இத்தகையதே.

ஒரு சின்ன குடத்திற்குள் மஞ்சள் தண்ணீரை ஊற்றி அதனுள் சிறிய மோதிரத்தைப் போட்டு புதுமணத்தம்பதியரை எடுக்கச் சொல்லி அனைவரும் வற்புறுத்த வெட்கத்தால் நெளிந்துகொண்டே இருவரும் கைகளை குடத்தினுள் விட அந்த சின்ன மோதிரத்தை தேடும்போதே இருவரின் கை களும் உரசிக் கொள்ளுமே. அப்பொழுதே தொடங்கிவிடுகிறது முன்விளையாட்டு உண்மையிலேயே பலவகை சிலிர்ப்புடைய சிலிர்ப்பும்



# புதுமணத் தம்பதிகளுக்கு பலன் தரும் தகவல்கள்

ஏற்ற இடம் எதுவென்றால் அது சமையலறைதான். அதில்தான் மையல் ஒளிந்திருக்கிறது அப்போது சமையலில் உதவுவது போல சென்று சின்னச் சின்ன ஸ்பரிசங்களின் மூலம் உங்களின் எண்ணத்தை மெதுவாக வெளிப்படுத்தலாம்.

அவ்வப்போது திருமண ஆல்பம், வீடியோ போட்டோக்களை எடுத்து பார்த்து அந்த இன்பத்தருணங்களை மறுபடியும் கண்முன் கொண்டுவரலாம். நெருக்கமாக அமர்ந்து திருமண நாளில் நடந்த விளையாட்டுக்களை வீடியோவில் கண்டு ரசிக்கலாம்.

வீட்டிற்கு அருகில் உள்ள கடைகளுக்கு சென்று உங்கள் வாழ்க்கைத்துணைக்கு ஏற்ற பொருட்களை வாங்கிக் கொடுத்து காதல் உணர்வுகளை அதிகரிக்கும். எத்தனை நாளைக்குதான் வீட்டிற்குள்ளேயே அடைந்து கிடப்பது என மனைவிக்கு நினைப்பு வரும். அதேபோல் அலுவலகம், வீடு என ஒரே மாதிரியாக இருப்பதும் எரிச்சலை ஏற்படுத்தும். எனவே தனியாக நேரம் ஒதுக்கி குளிர்ப் பிரதேசங்களுக்கு ஜாலியாய் ஒரு டூர் வரலாம்.

இரவு உணவுக்குப்பின்னர் மனதிற்கு பிடித்த புத்தகத்தை படித்தவாறு அதில் உள்ள நகைச்சுவை துணுக்குகளை பரிமாறலாம். தொலைக்காட்சியின் நகைச்சுவை காட்சிகளை பார்க்கலாம். இவற்றின் மூலம் அழுத்தங்களில் இருந்து விடுதலை பெறலாம்.

செஸ், கேரம்போர்டு, கார்ட்ஸ் போன்ற விளையாட்டுகளை கிரியாக தொடங்கலாம். ஜெயிக்கும் தருணத்திலும் தோல்வியை தழுவி விட்டுக்கொடுப்பது வேடிக்கையோடு உங்கள் மீதான காதலை அதிகப்படுத்தும்.

# சாப்பாடு என்றால் பெண்ணுக்கு போதும்!

எப்ப பாத்தாலும் சாப்பாட்டு நினைப்புதானா? என்று பெண்கள் சிலரை கேலி செய்வதுண்டு. நிஜமாகவே பெரும்பாலான பெண்கள் உணவு குறித்தே சிந்தித்து கொண்டிருப்பதாக சமீபத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.

அதாவது, பெண்கள் உறவில் ஈடுபடுவதைவிட உணவுக்கே முக்கியத்துவத்துவம் கொடுப்பதாகத் தெரிவிக்கிறது அந்த ஆய்வு முடிவு. அதேசமயம் ஆண்கள் அடிக்கடி செக்ஸ் பற்றிய நினைப்பிலேயே ஆழ்ந்திருப்பதாகவும் அந்த ஆய்வு முடிவு குறிப்பிட்டுள்ளது.

குறித்த ஆய்வின் முடிவில், ஆண்களுக்கு ஏழு செக்கண்டுக்கு ஒருமுறை செக்ஸ் பற்றிய நினைப்பு ஏற்படுவதாகவும் ஒரு வாரத்திற்கு 8 ஆயிரம் முறை அது பற்றி சிந்திப்பதாகவும் கண்டறிந்துள்ளனர்.



163 பெண்கள் மற்றும் 120 ஆண்களிடம் நடத்தப்பட்ட எழுத்துத் தேர்வு முறையில் இந்த ஆய்வு நடத்தப்பட்டது. அவர்களிடம், அத்தியாவசியமான உணவு, தூக்கம், செக்ஸ் குறித்து கேள்வி எழுப்பப்பட்டது. அப்போது நாளொன்றுக்கு சராசரியாக 19 முறை செக்ஸ் பற்றி நினைப்பதாக ஆண்கள் தெரிவித்தனர். ஒருசில ஆண்கள் நாளொன்றுக்கு 388 முறை செக்ஸ் பற்றி நினைப்பதாகவும், அதைப்பற்றி பேசுவதாகவும் தெரிவித்துள்ளனர். உண்ணும் உணவு பற்றி 18 முறையும், உறங்குவது பற்றி 11 முறையும் சிந்தனை எழுவதாக தெரிவித்துள்ளனர்.

அதேவேளை, இளம் பெண்கள் நாளொன்றுக்கு 15 முறை உணவு குறித்து சிந்திப்பதாகவும், செக்ஸ் பற்றி 10 முறை சிந்திப்பதாகவும் தெரிவித்துள்ளனர். ஒரு சில பெண்கள் மட்டுமே நாளொன்றுக்கு 140 முறை செக்ஸ் பற்றி சிந்திப்பதாகவும், அதைப்பற்றி பேசுவதாகவும் தெரிவித்துள்ளனர். பசியின் போது உணவைப் பற்றியும், சோர்வின் போது உறக்கத்தைப் பற்றி சிந்திக்கும் இளைஞர்கள் செக்ஸ் பற்றி அநேக நேரங்களில் சிந்திப்பதாக அந்த ஆய்வில் தெரியவந்துள்ளது.

# அறுபதிலும் ஆசை வரும்

**அறுபதுக்கு** மேல் வயதானவர்கள் தாம்பத்ய ஆட்டத்தில் ஈடுபட அதிக ஆர்வம் காட்டுவதாக ஆய்வு முடிவு ஒன்று தெரிவிக்கின்றது. 65 வயதிற்கு மேற்பட்டோரிடம் தனித்தனியாக நடத்தப்பட்ட ஆய்வில் இது தெரியவந்துள்ளது.


அமெரிக்காவின் புளோரிடா பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், 65 வயதிற்கு மேற்பட்ட 238 பேரிடம் தனித்தனியாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

அப்போது கடந்த 12 மாதத்தில் மாதம் ஒருமுறை உறவு வைத்துக்கொள்வதில் மிகுந்த மகிழ்ச்சியுடன் இருப்பதாக 10 சதவிகிதம் பேரும், 59 சதவிகிதம் பேர் மிகுந்த உற்சாகத்துடன் இருந்ததாக தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான கேள்விக்கு பதிலளித்துள்ளோரில், திருமணமான புதிதில் இருந்ததைப் போல உறவின் போது ஆர்வமுடன் செயல்படுவதாக 80 சதவிகிதம் பேர் தெரிவித்துள்ளனர்.

பார்த்தீர்களா, அறுபதிலும் ஆசை வரும் என்பதை இந்த ஆய்வு நிரூபித்திருக்கின்றது. மேற்குலகின் கலாசார வேலிகள் விசாலமானவை என்பதால், ஆய்வு நடாத்துகின்றார்கள். நமது வேலிகள் அந்தளவிற்கு விசாலமானது இல்லை என்பதால் அடக்கி வாசிக்கப்படுகின்றது.

நம்மூரில் பொது பேருந்துகளில் பயணிக்கும் இளம் பெண்கள், வாலிபர்களை விட கிழவன்கள்தான் படுமோசம் என்று எரிச்சலடைவதைப் பார்த்திருக்கின்றோம். அவ்வாறானவர்களுக்கு இப்போது நமது தாத்தாக்களின் நிலை புரிந்திருக்கும். வெள்ளை முடியானாலும் வழுக்கை முடியானாலும் தவிக்கிறார்கள்.



# ஆண்மைக்கு ஆப்படிக்கும் சுடுநீர்

**உறவு** கொள்வதில் வித்தியாசத்தை விரும்புவோர் நிறைய. அந்த விளையாட்டில் பல வித்தியாசமான முறைகள் கைக்கொள்ளப்படுகின்றது. அதில் குளியலறையில் இளஞ் சுடுநீரில் குளித்தவாறு ஆட்டத்தில் ஈடுபடுவது ஒருவகை. (நம்மூரில் அனேகம் பேருக்கு அந்த பாக்கியம் கிடைப்பது அரிது. நுவரெலியா விசிட் அடித்தால் சாத்தியமாகலாம்) அந்த வகை ஆட்டத்தில் சிக்கல் இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதாவது, கருத்தரிப்பதை விரும்பாவிட்டால், சுடுநீரில் குளித்தால் கருத்தடை சாதனம் தேவையில்லை என்பது விநோதமாக இருக்கிறது. ஆனால் உண்மையில் அது தவறு. சுடுநீராக இருந்தாலும், குளிர்ச்சியான நீராக இருந்தாலும் விந்தணு பெண்ணுறுப்பின் வழியாக செல்வதை முறையான கருத்தடை சாதனத்தைத் தவிர வேறு எதுவுமே தடுக்க முடியாது.

மேலும், ஆணுறுப்பு மற்றும் பெண்ணுறுப்பின் வழியாக பரவும் நோய்களைத் தடுக்கக் கூடிய தன்மையும் சுடுநீருக்குக் கிடையாது. எனவே ஆணுறை உள்ளிட்ட கருத்தடை சாதனங்கள் அவசியம் என்கிறார்கள் டாக்டர்கள்.

அதேபோல சுடுநீரில் குளித்தால் ஆண்களுக்கு மலட்டுத்தன்மை ஏற்படும், ஆணுறுப்பில் பாதிப்பு ஏற்படும், விந்தணு வளர்ச்சி பாதிக்கப்படும் என்ற அச்சம் சிலருக்கு உண்டு.

இதில் பாதி உண்மை உள்ளது. விந்தணு உற்பத்திக்கும், உடல் சூட்டுக்கும் தொடர்புள்ளது. உடல் சூடு அதிகரிக்கும்போது விந்தணு உற்பத்தி பாதிக்கப்படும். தமது உடலின் பிற பகுதிகளில் உள்ள வெப்பநிலையை விட விந்துப்பையின் வெப்ப நிலை 5 டிகிரி குறைவாகவே இருக்கும். அதற்கேற்றபடி விந்துப் பையானது தனது வெப்பநிலையை சரிவிகித நிலையில் வைத்துக் கொள்ளும். அந்த வெப்பம் அதிகரிக்கும்போது, விந்தணு உற்பத்தி நிச்சயம் பாதிக்கும் என்கிறார்கள் டாக்டர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேச்சு பெரிதுதான். ஆனால், மௌனம் அதை விடப் பெரியது.

-கார்லைல்

## வாரம் ஒரு திருக்குறள்



**பண்புடைமை**

**நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்**
**பண்புபா ராட்டும் உலகு.**

நீதியையும் நன்மையையும் விரும்பிப் பிறர்க்குப் பயன்பட வாழும் பெரியோரின் நல்ல பண்பை உலகத்தார் போற்றிக் கொண்டாடுவர்.

குறள்:994

# புகழ்



அருந்தூரம் என்ற அழகான கிராமத்தில் செடிகொடி களுடன் வண்ண வண்ண பூக்களாகப் பூத்துக்குலுங்கும் தோட்டம் ஒன்று இருந்தது. அதில் பலவகையான மரங்களும் இருந்தன.

அங்கே இருந்த ஒரு மாமரத்தில் ஒரு குயிலும், தென்னை மரத்தில் ஒரு மயிலும், சப்போட்டா மரத்தில் ஒரு கிளியும் வசித்து வந்தன.

கிளி, அழகாகப் பேசும். குயில் அருமையாகப் பாடும். மயில் அற்புதமாக ஆடும்.

கிளி, குயில், மயில் மூன்றும் தங்கள் திறமை யின் மீது கர்வம் கொண்டிருந்தன. எனவே அவை அடிக்கடி தங்களில் யார் பெரியவர் என்று விவாதித்து சண்டை போடும்.

ஒருநாள் இந்த பிரச்சினையைத் தீர்ப்பதற்காக அவை மூன்றும் ஒரு சிறுமியிடம் சென்று கேட்டன.

"குழந்தாய், எங்களில் யாரை உனக்கு ரொம்ப பிடிக்கும்? யார் பெரியவர் என்று நீயே சொல்லு" என்று கேட்டன.

"உங்கள் மூவரையும் எனக்கு பிடிக்கும். உங்கள் மூன்று பேரிடமும் திறமை உள்ளது. குயிலே நீ பாடுவது எனக்கு பிடிக்கும். மயிலே நீ ஆடுவது எனக்குப் பிடிக்கும். கிளியே நீ பேசுவது எனக்கு பிடிக்கும்" என்று அந்த சிறுமி கூறினாள்.


சிறுமியின் பேச்சில் மூன்று பறவைகளும் மயங்கின. அவள் குரல் கிளிப்பேச்சை விட அழகாகவும், குயில் பாட்டை விட இனிமை யாகவும் இருந்தது. அடுத்து அந்த சிறுமி உற்சாகமாக பாடிக் கொண்டே அழகாக ஆடினாள். அவளின் திறமையைக் கண்டு மூன்று பறவைகளும் வியந்தன.

"எங்களைவிட நீ அழகாக பேசுகிறாய். அருமையாகப் பாடுகிறாய். அற்புதமாக ஆடுகிறாய். உனக்கு உன் திறமையின் மீது கர்வம் கிடையாதா?" என்று அவை மூன்றும் கேட்டன.

"கலைகள் அத்தனையும் இறைவன் கொடுத்த வரம். எனவே அதில் கிடைக்கும், பேரும், புகழும் இறைவனுக்கே சொந்தம். பெரும் புகழ் கிடைத்தாலும், பணிவோடு இருக்க வேண்டும். நம் திறமை யால் புகழ் வரும்போது கர்வம் இன்றி, இருக்க வேண்டும். இப்படி எங்க அப்பா எனக்கு சொல்லிக் கொடுத்திருக் கார்" என்றாள், அந்த சிறுமி.

"உண்மைதான், எங்களின் கர்வம் காணாமல் போய்விட்டது. புகழ் வரும்போது தலைக்கனம் கூடாது என்று தெரிந்து கொண்டோம். எல்லா புகழும் இறைவனுக்கே" என்று கூறி மயில், கிளி, குயில் ஆகிய மூன்று பறவைகளும் கர்வம் இன்றி சந்தோஷமாக பறந்து சென்றன.

## வாரம் ஒரு நாடு



## கிரிபாடி

தலைநகர்: தெற்கு தராவா

பரப்பளவு: 726 சதுர கிலோமீற்றர்

மக்கள் தொகை: 98 ஆயிரம்

மொழி: ஆங்கிலம், கிப்பர்டீஸ்

நாணயம்: அவுஸ்திரேலியன் டொலர்

மதம்: கிறிஸ்தவம்

எழுத்தறிவு: 92 சதவீதம்

அமைவிடம்: பசுபிக் பெருங்கடலில் மத்திய வெப்ப மண்டலப்பகுதியில் அமைந்துள்ள தீவு தான் கிரிபாடி. இதில் ஒரு பவளத்தீவும், 32 பவளத் திட்டுகளும் உள்ளன. இவை 35 இலட்சம் சதுர கிலோமீற்றர் கடல் பரப்பில் சிதறிக் கிடக்கின்றன.

கிரிபாடியில் மத்திய பசுபிக் கடலில் உள்ள 33 அட்டால் தீவுகள் சேர்ந்துள்ளன. இவற்றில் பல தீவுகளில் மனிதர்கள் வசிக்கவில்லை. இவற்றில் மிகப்பெரியது, ஓஷன் தீவு. மக்கள் குடியேற்றம் உள்ள 21 தீவுகளிலும் தனித்தனி நிர்வாக அமைப்புகள் உள்ளன.

விளைபொருட்கள்: தேங்காய், பாண்டனஸ், ரொட்டிப்பழம், தேங்காய்.

தொழில்: விவசாயம், மீன்பிடித்தல்.

ஏற்றுமதிப்பொருட்கள்: உயர் ரக பாஸ்பேட், கொப்பரை

## சூரிய சக்தி



ஒளி எதன் மீது பட்டு எதிரொளிக்கிறதோ அப்பொருளின் அணு எலக்ட்ரோனாக மாறி விடுகிறது. இதை 'போட்டோ எலக்ட்ரிக் எபெக்ட்' என்று அழைப்பர்.

போட்டோ செல்லைக் கொண்டு பயன்படுத்திக் கொள்ளும் சக்தியை 'சோலர் பவர்' என்று சொல்வர். இதனால் சிறிய அளவில் கல்குலேட்டரில் இருந்து பெரிய அளவாக மின் உற்பத்தி வரை சூரியசக்தி பயன்படுகிறது. சூரியஒளியில் இருந்தே இந்த சக்தி பெறப்படுகிறது. இந்த ஒளி போட்டோன்கள் எனப்படும் ஒரு அணு சுழற்சியில் எலக்ட்ரோன்களாக மாறுகின்றன. சோலர் தகட்டில் விழும் சூரியஒளியின் சக்தியை சிலிகொன் அணு பெறுகிறது.

விண்ணில் சுற்றும் செயற்கைக்கோள்கள் முழுவதும் சூரியசக்தியால் தான் செயல்படுகிறது. இங்கு தொடர்ந்து 24 மணி நேரமும் சூரியஒளி கிடைக்கிறது. இதனால் சோலர் தகடுகள் தொடர்ந்து சூரிய சக்தியைப் பெற்றுக்கொண்டே இருக்கும்.

# பாப்பா முரசு



உலகெங்கும் தோல் பதனிடுதல் நடந்தாலும், அவற்றில் நுண்ணுயிர்களும், கொழுப்பு பகுதியும் சீராக நீக்கப்படாமல் இருக்கும். இன்றைய நவீன

## தோல் பதனிடும் விதம்

தொழில்நுட்பத்தில் சுத்தமாக் தயாரிக்கப்படுகிறது. தோல் பதனிடுதலில் முக்கியமாக இயற்கை எண்ணெய் மற்றும் கொழுப்பு பகுதியும் புதிய தொழில்நுட்பங்களில் நீக்கப்படுகிறது. இதற்கு 'டேனிங்' என்று பெயர்.

விலங்கிலிருந்து உரித்து எடுக்கப்படும் பச்சைத்தோல் அதிக நேரமிருந்தால் அழுகி கெட்டுவிடும். எனவே, உரித்தவுடனே இடைக்கப்பட்ட உப்புத்தூளை அதன் உட்பகுதியில் நன்கு தடவுவர். அதனை வேதிப்பொருட்கள் கலக்கப்பட்ட நீரில் நன்கு ஊறவைப்பார்கள். இதனால் தோலில் உள்ள அழுக்குகள் அப்புறப்படுத்தப்படும். அதன் பின், வேதிப்பொருள் கலவையோடு கூடிய சுண்ணாம்புக் கரைசலில் அந்த தோலை ஊறவைப்பார்கள். இதனால் தோலின் வெளிப்புறமுள்ள முடி நீக்கப்படும். தோலிலுள்ள சுண்ணாம்புக் கரைசலை நீக்கப் பல்வேறு அமிலம் கலந்த நீரில் நனைத்து எடுப்பர். இப்போது முடி மற்றும் அழுக்கு நீக்கப்பட்ட தோல் கிடைக்கிறது. இதன் பிறகே தோல் முறையாகப் பதனிடப்படும்.

தோல் பதனிடுந்தொழிலில் இந்தியா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா, அர்ஜென்டினா முதலிய நாடுகள் சிறந்து விளங்குகின்றன.



கிறந்த வர்ணந்திற்கு பரிசு திரும் எண்ணம்

போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் நரத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.

[illegible]

வர்ணம் தீட்டும் போட்டி இல. 923

தினமுரசு வாரமலர்


[illegible]

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 921**

**பரிசுக்குரியவர்:** வி.ம.சிரோமி, பாண்டிருப்பு, கல்முனை.

ஆறுதல் பரிசுக்குரியோர்

01. [illegible]
02. [illegible]
03. [illegible]
04. [illegible]
05. [illegible]
07. [illegible]
08. [illegible]
09. [illegible], யாழ்ப்பாணம்.





**கண்டுபிடியுங்கள்**

இங்கு பறந்து கொண்டிருக்கும் மூன்று பட்டங்களில் சிறுவனின் கைப்பிடியில் உள்ள பட்டம் எது?

# வேண்டுகோள்



அன்பு இதயத்தில் வேண்டும்
ஆர்வம் கல்வியில் வேண்டும்
இரக்கம் பார்வையில் வேண்டும்
ஈகை செய்கையில் வேண்டும்!

உண்மை உதட்டில் வேண்டும்
ஊக்கம் உழைப்பில் வேண்டும்
எளிமை நடத்தையில் வேண்டும்
ஏற்றம் தொழிலில் வேண்டும்!

ஐக்கியம் உறவில் வேண்டும்
ஒழுக்கம் வாழ்வில் வேண்டும்
ஓய்வு முதுமையில் வேண்டும்
ஔவைவழி நடந்திட வேண்டும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களைப்பு – பலவீனம் உடல்தான் காரணமா?

**உடம்பு** நல்ல வாட்ட சாட்டமாக இருக்கும். இரத்தசோகை, பிரஷர், நீரிழிவு ஏதும் இருக்காது. ஆனாலும் முகத்தில் சோர்வுடன் வருபவர்கள் பலர்.

"உடம்பு பலவீனமாகக் கிடக்கு. களைப்பாக இருக்கு. பெலத்திற்கு என்ன சாப்பிடலாம்? என்ன சத்து மா கரைச்சுக் குடிக்கலாம்?" எனக் கேட்பார்கள்.

உடல் ஆரோக்கியமாக இருக்கும் இவர்களுக்கும் ஏன் களைப்பு வருகிறது. ஊட்டக் குறைவுதான் இவர்களது களைப்பிற்குக் காரணமா?

இத்தகைய களைப்பிற்கு பெரும்பாலும் கடுமையான நோய்கள் காரணமாக இருப்பதில்லை. ஒருவரது தவறான பழக்கவழக்கங்களும், ஆரோக்கியமற்ற உணவுமுறைகளும் கூடக் காரணமாக இருக்கலாம்.

**தூக்கக் குறைபாடு**

முக்கிய பிரச்சினை போதிய தூக்கம் கிடைக்காததாக இருக்கக் கூடும். சிவராத்திரி முழிப்புப் போல இரவிரவாக விழிப்பிருந்தால்தான் மறுநாள் களைப்பு வரும்



என்றில்லை. உங்களுக்கு தினமும் தேவைப்படும் தூக்கத்தில் ஒருமணி நேரம் குறைந்தால் கூட மறுநாள் சக்தி இழந்தது போன்ற உணர்வு ஏற்படலாம்.

உங்கள் தூக்கம் குறைந்ததற்குக் காரணங்கள் பலவாக இருக்கலாம்.

* உதாரணமாக வேலைப் பழு காரணமாக சரியான நேரத்திற்கு படுக்கைக்குப் போக முடியாதிருக்கலாம்.
* படுக்கைக்குப் போனாலும் மன அழுத்தங்கள் காரணமாக நிம்மதியாகத் தூங்க முடியாது போயிருக்கலாம்.
* வயதாகும்போது பலருக்கு குழப்பமற்ற தூக்கம் வராதிருக்கலாம்.
* அல்லது வேளை-யோடு எழுந்திருக்க முடியாதிருக்கலாம்.

காரணம் எதுவாக இருந்தாலும் போதிய தூக்கமின்மை மறுநாள் சோர்வைக் கொண்டுவரும்.

**சோம்பேறி வாழ்க்கை முறை**

உடலுழைப்பற்ற சோம்பேறித்தனமான வாழ்க்கை முறையும் இயலாமையைக் கொண்டு வரும். போதிய உடல் உழைப்பு அல்லது உடற்பயிற்சி ஆரோக்கியத்தைப் பேணுவதற்கு மிக அவசியமாகும்.

உடற்பயிற்சி செய்வதற்கு நேரமில்லை அல்லது களைப்பாக இருக்கிறது என அதைத் தவிர்ப்பது தவறு. ஏனெனில் பயிற்சி இல்லையேல் உங்கள் உடலாரோக்கியம் கெட்டுவிடும். சிறு வேலை செய்வது கூடக் களைப்பைக் கொண்டுவரும்.

இதைத் தவிர்ப்பதற்கு தினமும் அரை மணிநேரம் ஆயினும் உடலுழைப்பில் ஈடுபடுங்கள். வேகமாக நடக்கலாம், நீந்தலாம், தோட்டத்தில் வேலை செய்யலாம். எதுவானாலும் ஒரேயடியாக 30 நிமிடங்களை ஒதுக்குவது முடியாது எனில் அதனை இரண்டு தடவைகளாகப் பிரித்துச் செய்யுங்கள். உடல் உறுதியானால் களைப்பு வராது.

**போஷாக்கான உணவு**

போஷாக்கான உணவையும், நீராகாரத்தையும் எடுக்காவிட்டால் உங்கள் நாளாந்த வேலைக்கான எரிபொருளை உங்கள் உடல் கொண்டிருக்காது. காலை உணவு முதல் கொண்டு போஷாக்காக எடுக்கப் பழகிக்கொள்ளுங்கள்.

எண்ணெய், பட்டர், மாஜரின் போன்ற கொழுப்புப் பொருட்கள் அதிகமுள்ள உணவுகளைத் தவிருங்கள். நார்ப்பொருட்கள் விற்றமின், தாதுப் பொருட்கள் அதிகமான உணவு வகைகளை தேர்ந்தெடுங்கள். தீட்டாத அரிசி, அரிசிமா, ஆட்டாமா, குரக்கன் போன்றவை நல்லது. பழவகைகளையும் தாராளமாகச் சேர்த்துக் கொள்ளுங்கள்.

**சிறிய உணவுகள்**

இனிப்புச் செறிந்த பழச் சாறுகள், மென்பானங்கள் போன்றவை நல்லதல்ல. பால், உடன் தயாரித்த பழச்சாறு போன்றவை விரும்பத்தக்கவை.

அதிகமாக வயிறு கொள்ளாமல் உண்பதைத் தவிருங்கள்.

சிறிய உணவுகளாக. அதுவும் கலோரிச் சத்துக் குறைந்த உணவுகளாக உண்ணுங்கள். வேண்டுமானால் 4 -5 மணி நேரத்திற்கு ஒரு முறை அவ்வாறான உணவை எடுக்கலாம்.

**மதுபானம்**

மதுபானம் உட்கொள்ளும் போது உற்சாகம் அளிப்பது போலத் தோன்றினாலும் உண்மையில் நரம்பு மண்டலத்தைச் சோர்வுறச் செய்கிறது.

அத்துடன் படுக்கைக்குச் செல்லுமுன் மதுபானம் எடுத்தால் தூக்கத்தைக் கெடுத்து அடுத்த நாளையும் சோர்வுறச் செய்து விடலாம்.

(தொடர்ச்சி அடுத்த வாரம்)




**எல்லோருக்கும் — அவள் பயங்கரக் கொள்ளைக்காரி, படு பயங்கரக் கொலைகாரி என்று தான் தெரியும். அவள் அதுவும் ஒரு பெண் — ஏன் அப்படி மாறினாள் என்று எத்தனை பேருக்குத் தெரியும்? பூ ஒன்று புயலான கதை. ஒருகாலே முரசில் புரட்டப்பட்ட இப்பக்கங்கள், வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் புரட்டப்படுகின்றன.**

"மல்லாஜி மீது நான் உயிரையே வைத்திருக்கிறேன். ஆனால் இந்த ஸ்ரீராம் பொல்லாதவனாய் இருந்தால் கூடப் பரவாயில்லை. கெட்டவன். மல்லாஜிக்கு இதனை எப்படிச் சொல்வது என்றுதான் புரியவில்லை. ஸ்ரீராம் தங்களின் அதிகாரம் செய்வது குழுவில் உள்ள பலருக்குப் பிடிக்கவில்லை" என்றான் பரத்சிங்.

அவன் அப்படிச் சொன்னது பூலானுக்குப் பெரும் மகிழ்ச்சியாக இருந்தது.

தன்னுடன் அவன் கருத்தும் ஒத்துப்போவதால் பரத்சிங் பேசியதை ஆமோதிப்பது போலத் தலையாட்டினாள்.

"நீங்கள் சொன்னால் மல்லாஜி கேட்பார். உங்களால் மட்டும்தான் ஸ்ரீராமால் எங்கள் குழு சின்னாபின்னமாகாமல் தடுக்க முடியும்," என்றான் பரத்சிங்.

அவன் தன்மேல் அத்தனை நம்பிக்கை வைத்திருக்கிறான் என்பதைக் கேட்கும் போது பூலானுக்குப் பெருமையாக இருந்தது. அதேபெருமையோடு சொன்னாள். "நானும் அப்படித்தான் நினைத்தேன் நீ சொல்வது சரிதான். இந்த இரண்டு தடியன்களாலும் எங்களுக்கு நாசம்தான் வரும். நான் மல்லாஜியிடம் சொல்லிப் பார்க்கிறேன்."

அன்றிரவு மல்லாவிடம் தணிந்த குரலில் பக்குவமாய் அவர்கள் இருவர் பற்றியும் சொன்னாள் பூலான். தான் மட்டும் அல்ல குழுவில் உள்ள பலருக்கும் அவர்களைப் பிடிக்கவில்லை என்பதையும் பூலான் சொன்னாள்.

பூலானைத் தன் மடியில் சரிந்துகொண்ட மல்லா அவள் தலையை ஆதரவாக வருடிக்கொண்டே யோசித்தான். பூலான் அவன் முகத்தையே பார்த்துக்கொண்டு கிடந்தாள்.

குனிந்து அவள் நெற்றியில் முத்தமிட்டான். "எனக்குத் தெரியும் கொஞ்சம் அனுசரித்துப் பார்க்கலாம் என்றுதான் விட்டுவிருக்கிறேன் குழுவில் உள்ள யாருக்காவது அவர்களால் ஆபத்து ஏற்படாமல் பார்த்துக் கொள்வது என் பொறுப்பு."

உடனே பூலான் தன்



கரங்கள் இரண்டாலும் அவனைக் கட்டிக்கொண்டு "உனக்கே ஆபத்து வந்தால் என்ன செய்வது? எனக்குப் பயமாக இருக்கிறது. என் நெஞ்சு எப்படித் துடிக்கிறது பார்." என்றவள் அவன் கையைப் பிடித்து தன் நெஞ்சில் வைத்துக் கொண்டாள்.

மல்லா சிரித்தான். மெல்லச் சிரித்தான்.

"எனக்கு உன்னிடம் மட்டும்தான் பயம் வேறு யாரிடமும் பயம் கிடையாது. புரிகிறதா உன்னிடம் மட்டும்தான்!"

"என்னிடமா... ஏன்?"

"யப்பா.... இங்கே துடிக்க என் உள்ளேயும் துடிக்கிறது. படபடக்கிறது. நீ பக்கத்தில் அதுவும் இப்படித் தனிமையில் இருந்தால் என் உடம்பெல்லாம் எப்படிப் படபடக்கிறது தெரியுமா?"

"சீ... ஆளைப்பார்!"

"பார்த்துக் கொண்டுதானே இருக்கிறேன்!"

"ஆளை மட்டும் பார்ப்பது போலத் தெரியவில்லை."

"வேறு யாரைப் பா... ஓ பார்க்கப் பார்க்க..."

"பார்க்க?"

"வேண்டாம்... அடிப்பாய்."

"சொல்லு, சொல்லடா..."

கழுத்தை இறுக்கினாள். மல்லா நாக்கை நீட்டி மூச்சுத் திணறுவது போல பாவனை செய்ய, பூலான் சிரித்தாள்.

மறு நாள் ஸ்ரீராமிடம் தனிமையில் மல்லா சொன்னான். "பண்ணையார் அவர்களே! இது உங்கள் குழு. ஆனால் குழுவில் உள்ளவர்கள் பலர் புதியவர்கள். அதனால் எடுத்ததும் அவர்களை அதட்டி அதிகாரம் பண்ணினால் உங்கள் மீது வெறுப்படைவார்கள். மரியாதையாக நடத்துங்கள். உங்கள் நன்மைக்காகத்தான் சொல்கிறேன்!"

"மல்லா! உன் ஆலோசனைக்கு நன்றி. குருவுக்கு புத்தி சொல்லும் அளவுக்கு நீ வளர்ந்திருப்பது எனக்கு எத்தனை பெருமையாக இருக்கிறது தெரியுமா? ம்... இனிமேல் பார்த்து நடந்துகொள்கிறேன்!" என்றான் ஸ்ரீராம்.

தான் சொன்னதைக் கேட்டதும் ஸ்ரீராம் கோபமடைவானோ என்று பயந்த மல்லாவுக்கு ஸ்ரீராமின் போக்கு திருப்தி தந்தது. மகிழ்ச்சியோடு சென்றான்.

மல்லா அவ்விடத்தை விட்டு அகன்றதும் ஸ்ரீராம் தன் சகோதரன் லாலா ராமை அழைத்தான். ஸ்ரீராமின் கண்களின் குரோதம் படமெடுத்தாடியது. மல்லா சென்ற திசையையே பார்த்தபடி லாலா ராமிடம் ஸ்ரீராம் சொன்னான்.

"வளர்த்த கடா மார்பிலேயே பாய்ந்து விடும்போல இருக்கிறதடா. பாயவிடலாமா? கொன்றுவிடலாம்!"

லாலா ராமுக்கு மல்லா மீதுள்ள பொறாமையைவிட பூலான் மீதுள்ள ஆசைதான் அதிகம்.

ஆசை காரணமாகவே மல்லாவை கொல்ல வேண்டும் என்று ஸ்ரீராமின் கண்களில் குரோதம் படமெடுத்தாடியது. மல்லா சென்ற திசையையே பார்த்தபடி லாலா ராமிடம் ஸ்ரீராம் சொன்னான்.

அந்த ஆசை காரணமாகவே மல்லாவை கொல்ல வேண்டும் என்று ஸ்ரீராம் சொன்ன போது பலமாகத் தலையாட்டி ஆமோதித்தான்.

மல்லா மட்டும் செத்துப் போனான் என்றால் பூலானை.... பூலானின் மதமதப்பான அந்த உடலை மொத்தமாக ஆளலாம் என்று நினைக்க நினைக்க லாலா ராமுக்குத் தலைகால் புரியவில்லை.

பூலானுக்கு ஆற்றில் நீச்சலடித்துக் குளிப்பது என்றால் ஆனந்தம்.

யாரும் இல்லை என்ற துணிச்சலில் குறுக்குத் துண்டுடன் மட்டும் ஆற்றில் இறங்கி ஆசைதீர நீந்திக் குளித்தாள்.

(திருப்பங்கள் தொடரும்...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2011 ஒரு மீள் பார்வை



2011-ம் ஆண்டு சினிமா உலகத்துக்கு பெரிதாக சொல்லிக் கொள்ளும்படி அமையவில்லை. 2010-ம் ஆண்டு வெளியான ரஜினியின் எந்திரன் தாக்கமே 2011 முதல் காலாண்டு வரை தொடர்ந்தது. இந்தப் படம் அதிகாரப்பூர்வமாக ரூ 375 கோடியை வசூலித்து வாய் பிளக்க வைத்துவிட்டதால், அதன் பிறகு வெளியான பல நடிகர்களின் படங்களுடைய எதிர்ப்பார்ப்பு பெரிதாக இருந்தது. ஆனால் ஒரு படம் கூட அதில் கால்வாசியைக் கூட தொடவில்லை என்பதுதான் பரிதாபம்.

ஹாலிவுட் போல உண்மையான வசூல் விவரங்கள் என்னவென்று தெரிந்து கொள்ள கோலிவுட்டில் வழியில்லை. நஷ்டம் என்றாலும் அதை கவுரவத்திற்காக, லாபம் அல்லது சாதனை என்று கூறும் போக்கு இங்கு தொடர்கிறது.

இதையெல்லாம் தாண்டி, பளிச்சென்று வெற்றிப் படங்களாக தெரிந்த சிலவற்றை இங்கே பட்டியலிடுகிறோம்.

**1. மங்காத்தா**

அஜீத் - அர்ஜுன் - த்ரிஷா - லட்சுமிராய் - ப்ரேம்ஜி என பெரிய நட்சத்திரப் பட்டாளம் நடித்து, வெங்கட் பிரபு இயக்கத்தில் வெளியான இந்தப் படம்தான் கடந்த ஆண்டின் பெரிய வெற்றிப்படம் எனலாம். கிட்டத்தட்ட ரூ 100 கோடிக்கு மேல் வர்த்தகமான ஒரே படம் மங்காத்தா. வசூல் என்று பார்த்தால் ரூபா 130 கோடி என்று கூறப்பட்டது.

இந்தப் படத்தின் பிரமாண்ட வெற்றிக்கு முக்கிய காரணம் அஜீத், யுவன் சங்கர் ராஜா, எத்தனையோ ஓட்டைகள் இருந்தும் அவற்றைக் கவனிக்கவிடாமல் பார்த்துக் கொண்ட வெங்கட் பிரபுவின் இயக்கம்.

**2. காஞ்சனா**

தமிழ் - தெலுங்கில் வசூலை அள்ளிக் குவித்த படம் காஞ்சனா. ராகவா லாரன்ஸ் தன்னை திறமையான இயக்குநர் என மீண்டும் இதில் நிரூபித்திருந்தார்.

படத்தின் வெற்றிக்கு முக்கிய காரணம், நகைச்சுவை மற்றும் அமானுஷ்ய காட்சிகளை இயல்பாக, சரியான விகிதத்தில் அமைத்திருந்தது. குறிப்பாக கோவை சரளா!

**3. எங்கேயும் எப்போதும்**

எதிர்பாராமல் ஜாக்பாட் அடிப்பது என்பார்களே, அது இந்தப் படத்துக்குப் பொருந்தும். புதிய இயக்குநர், பெரிதாக மார்க்கெட் இல்லாத நடிகர்கள் என சாதாரணமாக வந்த இந்தப் படம், ஏ.ஆர் முருகதாஸ் - ஸ்டார் பாக்ஸ் நிறுவனங்களின் கூட்டுத் தயாரிப்பு என்பதால் முக்கியத்துவம் பெற்றது.



அந்த மரியாதையைத் தக்க வைத்துக் கொள்ளும் அளவு கதை-திரைக்கதை வித்தியாசமாக அமைந்ததால், நல்ல வெற்றியைப் பெற்றது படம். மிகக் குறைந்த முதலீட்டில் வெளியாக, பெரிய
நூறாவது நாளையும் தாண்டிவிட்டது குறிப்பிடத்தக்கது.

**4. கோ :** ஜீவா - கார்த்திகா நடிப்பில் வெளியான படம். சொ
திருப்பத்தை கொடுத்த படம் இது. பத்திரிகை உலகை அடிப்பை
இயக்கிய இந்தப் படத்திலும் நிறைய ஓட்டைகள். ஆனால், பரபர
ஓட்டைகளை கண்டுகொள்ளாமல் ரசித்தனர் மக்கள். படத்தின் பெரிய
ஹீரோ ஜீவா. ரொம்ப அநாயாசமாக தனது பாத்திரத்தை கையாண்

**5. தெய்வத் திருமகள்**

விக்ரம் - அனுஷ்கா - சந்தானம் - அமலா நடித்திருந்த இந்தப்
ரீமேக்தான் என்றாலும், விக்ரம் நடிப்பில் அதை மக்கள் மறந்தே
படத்தின் பெரிய ப்ளஸ் சந்தானம், அனுஷ்கா. அப்புறம் அந்த அ

**6. 7ஆம் அறிவு :** இந்த ஆண்டில் பெரிய எதிர்ப்பார்ப்புக்குரிய
அறிவு. காரணம், ஏ ஆர் முருகதாஸ் என்ற திறமையான இ
வைத்திருந்த மரியாதை, நம்பிக்கை. ஆனால் அந்த நம்பிக்கை
படத்தில் தோற்கடிக்கப்பட்டது.

படத்துக்கு வந்த எதிர்மறை விமர்சனங்கள் கொஞ்சமல்ல.
தாண்டி தயாரிப்பாளர் உதயநிதி ஸ்டாலின் புண்ணியத்தில்
விளம்பரங்கள். அந்த விளம்பரங்களின் தயவிலேயே ப
பிடித்துவிட்டது. வசூலைப் பொருத்தவரை தயாரிப்பாளர்
படங்களில் 7-ஆம் அறிவும் இடம்பெற்றுவிட்டது.

**7. வேலாயுதம் :** தொடர்ந்து தோல்விகளைச் சந்தித்து
காவலன் சின்ன ஆறுதலைக் கொடுத்ததென்றால்,
நிம்மதியைக் கொடுத்தது எனலாம். படம் ஏற்கனவே
உல்டா, சுமார்தான் என்றாலும், சந்தானம், ஹன்ஸிகா,
மயான கலைஞர்களின் பங்களிப்பால் ரசிகர்களை க

**8. அவன் இவன் :** விஷாலுக்கு நல்ல பெயர், த
அகோரத்துக்கு நல்ல லாபம், குறிப்பாக அதன் தெ
ரூ 17 கோடியை வசூலித்ததாக சொல்கிறார்கள்.
இழப்பு பாலாவுக்கு மட்டும்தான். பணமல்ல, இத்த
சேர்த்து வைத்திருந்த நல்ல பெயர்!

**9. காவலன் :** விஜய்யின் 6 தொடர் தோல்
புள்ளி வைத்த படம் காவலன். சுமாரான வெற்
தயாரிப்பாளர், விநியோகஸ்தருக்கு லாபத்தைத்
படம். வடிவேலுதான் படத்தின் பெரிய ப்ளஸ்.

**10. ஆடுகளம்**

தனுஸ்"க்கு தேசிய விருது பெற்றுத் தந்த ப
பல தேசிய விருதுகளையும் வென்ற இந்தப்
பிக்சர்ஸின் மெகா விளம்பரங்கள் இந்தப் ப
வசூல் ரீதியாக சுமாரான வெற்றி பெற உதவ

இந்தியில் வெளியான டபாங் திரைப்படம் தமிழில் ஒஸ்தி என்ற பெயரில் மொழிமாற்றம் செய்யப்பட்டுள்ளது. இதை தற்போது தெலுங்கிலும் எடுக்கவுள்ளனர். இப்படத்தில் கதாநாயகனாக பவன்கல்யாணும், கதாநாயகியாக ஸ்ருதியும் நடிக்கின்றனர். இப்படத்தின் முதற்கட்ட படப்பிடிப்பு பொள்ளாச்சியில் சமீபத்தில் நடந்தேறியது. இப்படத்தில் ஒரு பாடலுக்கு குத்தாட்டம் ஆடுவதற்கு பிரபல இந்தி நடிகை பிபாசாபாசுவை அணுகியுள்ளார் இயக்குனர். அதற்கு அவர் ரூ.1 கோடி சம்பளம் கேட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

## ஒரு பாட்டு ஒரு கோடி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரிமா உலகத்துக்கு
க் கொள்ளும்படி
ம் ஆண்டு வெளியான
க்கமே 2011 முதல்
ர்ந்தது. இந்தப் படம்
பிறகு வெளியான பல
த்தில் கால்வாசியைக்

ாள்ள கோலிவுட்டில்
ம் அல்லது சாதனை

வெற்றிப் படங்களாக
பட்டியலிடுகிறோம்.


ரிஷா - லட்சுமிராய்
ட்சத்திரப் பட்டாளம்
இயக்கத்தில் வெளி
கடந்த ஆண்டின்
னலாம். கிட்டத்தட்ட
வர்த்தகமான ஒரே
ன்று பார்த்தால்
றப்பட்டது.


# தரமான விமர்சனங்களுக்கு தலைவணங்கும் சுவாதி

சுப்ரமணியபுரம், போராளி ஆகிய படங்களில் முக்கியமான கதாபாத்திரத்தில் நடித்து புகழ் பெற்றவர் நடிகை ஸ்வாதி.

ஒரு பேட்டியில் நடிகை ஸ்வாதி கூறுகையில் நான் நடிகையாவேன் என்று நினைக்கவேயில்லை, எதையும் நான் திட்டமிட்டு செய்வதில்லை என்ன நடக்கிறதோ அதை அப்படியே ஏற்றுக் கொள்வேன்.

சுப்ரமணியபுரம் திரைப்படம் நல்ல நடிகையாக என்னை அடையாளம் காட்டியது. அதன்பிறகு நிறைய வாய்ப்புகள் வந்தது மனதிற்கு பிடிக்காததால் ஏற்கவில்லை. போராளி படத்தில் மற்றொரு பரிமாணத்தை வெளிப்படுத்தியிருக்கிறேன். என்னை பொறுத்தவரை பணம், புகழ் முக்கியமல்ல மகிழ்ச்சிதான் முக்கியம். என்னை பற்றி நிறைய விமர்சனம் வருகிறது. தகுதியானவர்களின் விமர்சனம் என்றால் கண்டிப்பாக ஏற்றுக் கொள்வேன். மற்றவர்களை பற்றி கவலையில்லை என்று ஸ்வாதி கூறியுள்ளார்.





## அதிக எதிர்பார்ப்பு புதிய கெட்டப்

ஒரே கெட்டப்பில் நடிக்கும் நடிகர் என்ற பெயர் விஜய்க்கு உண்டு. விஜய்யும், கெட்டப் மாற்றுவதில் நம்பிக்கை கிடையாது என்று கூறி வருபவர்.

வசீகரா படத்திற்கு பிறகு நடித்த படங்களில் பாடல்களுக்கு தேவைப்படும் போது மட்டும் தனது கெட்டப்பை மாற்றி வந்தார்.

காவலன், வேட்டைக்காரன் படங்களில் பாடல் காட்சிகளில் விதவிதமாக விக் மட்டும் மாற்றியுள்ளார். மற்ற எல்லா படங்களிலும் அவரது தோற்றம் ஒரே மாதிரிதான்.

இந்நிலையில் முருகதாஸ் இயக்கத்தில் தற்போது நடித்து வரும் துப்பாக்கி படத்திற்காக தனது கெட்டப்பை மாற்றியுள்ளாராம் விஜய். இந்தப் படம் தனது இமேஜை இன்னும் உயரத்திற்கு கொண்டு போகும் என அவர் நம்புவதால், மிக அதிக கவனம் காட்டி வருகிறார்.

## சூடு பிடிக்கிறது மௌனகுரு

அண்மைய படங்களில் பார்க்கலாம் வகையைச் சேர்ந்த படம் மௌனகுரு. ஒரேயொரு ஆக்சனை மட்டுமே வெளிப்படுத்தும் அருள்நிதியை வைத்து ஒரு நல்ல க்ரைம் த்ரில்லரை தந்த சாந்தகுமார் திரைக்கதை விஷயத்தில் தேர்ந்த குமார்தான் சந்தேகமில்லை.

ராஜபாட்டையின் ரவுசு தாங்காததால் மௌனகுருவுக்கு ஓடுகிறார்கள் ரசிகர்கள். இதன் காரணமாக மேலும் முப்பது தியேட்டர்களில் மௌனகுருவை வெளியிட்டிருக்கிறார்கள். சரக்கிருந்தால் ரசிகன் தேடி வருவான் என்பதற்கு மௌனகுரு ஒரு மௌன சாட்சி.

## சர்ச்சையை கிளப்பியிருக்கும் நடுவிரல்

பாலிவுட் நடிகர் அனில் கபூரின் மகள் சோனம் கபூர் பிளேயர்ஸ் என்ற திரைப்படத்தில் நடித்துள்ளார். சமீபத்தில் பிளேயர்ஸ் திரைப்படத்திற்கான பத்திரிக்கையாளர் சந்திப்பு நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட சோனம் கபூர், பத்திரிக்கையாளர்கள் சந்திப்பு முடிந்ததும் தனது நடுவிரலை உயர்த்திக் காட்டி அனைவரையும் அதிர வைத்துள்ளார்.

இது குறித்து சோனம் கபூர், நடுவிரலைக் காட்டுவது என்பதில் எந்த விசே'மும் இல்லை. இன்றைய இளைஞர்களின் மொழியாக அது உள்ளது. திரைப்படங்களுக்கு சென்சார் செய்வதில் எனக்கு நம்பிக்கை இல்லை. அதைத்தான் நான் நடுவிரலைக் காட்டி வெளிப்படுத்தினேன் என்று கூறியுள்ளார். இளைஞர்கள் இப்போது நடுவிரலை ஒருவருக்கொருவர் காட்டிக் கொள்வது சாதாரண விடயமாகும். ஒருவரது பேச்சு அல்லது செயல் பிடிக்காவிட்டால் நடுவிரலை காட்டிக் கொள்வது சகஜமானது ஆகும்.

இதை சாதாரணமாக எடுத்துக் கொள்ள வேண்டுமே தவிர பிரச்சினையாக்கக் கூடாது. அதுவும் திரைப்படங்களில் பணியாற்றுபவர்களுக்கு இது சாதாரண விடயமாகும். மேலும் இந்தியாவில் எழுத்து மற்றும் கருத்து சுதந்திரம் உள்ளதால் நான் நடுவிரலைக் காட்டியதை பெரிதாகப் பேசுவது வியப்பாக உள்ளது என்று கூறியுள்ளார்



வெளியாக, பெரிய லாபத்தைப் பெற்ற இந்தப் படம்,
த்தக்கது.
ளியான படம். சொல்லப் போனால், இருவருக்குமே
உலகை அடிப்படையாக வைத்து கே வி ஆனந்த்
ர். ஆனால், பரபரவென நகர்ந்த காட்சிகளால், அந்த
ள். படத்தின் பெரிய பலம் இயக்குநர் கே வி ஆனந்த்,
த்திரத்தை கையாண்டிருந்தார் ஜீவா.

நடித்திருந்த இந்தப் படம் ஹாலிவுட் படம் ஒன்றின்
மக்கள் மறந்தே போனார்கள். விக்ரமைத் தாண்டி
. அப்புறம் அந்த அழகான குழந்தை பேபி சாரா.
திர்ப்பார்ப்புக்குரிய படமாக வெளியானது 7 ஆம்
திறமையான இளைஞர் மீது தமிழ் ரசிகர்கள்
ல் அந்த நம்பிக்கை முதல் முறையாக இந்தப்

ங்கள் கொஞ்சமல்ல. ஆனால் இதையெல்லாம்
லின் புண்ணியத்தில் இந்தப் படத்துக்கு ஏக
ன் தயவிலேயே படமும் ஓரளவு தாக்குப்
வரை தயாரிப்பாளர் திருப்தி. 2011 ஹிட்
ற்றுவிட்டது.
விகளைச் சந்தித்து வந்த விஜய்க்கு,
காடுத்ததென்றால், வேலாயுதம் பெரிய
. படம் ஏற்கெனவே வந்த திருப்பாச்சியின்
தானம், ஹன்ஸிகா, ஜெனிலியா என திறமை-
ால் ரசிகர்களை கவர்ந்தது. நல்ல வசூல்.
நல்ல பெயர், தயாரிப்பாளர் கல்பாத்தி
றிப்பாக அதன் தெலுங்கு பதிப்பு மட்டுமே
சொல்கிறார்கள். ஆனால் உண்மையான
பணமல்ல, இத்தனை படங்களில் அவர்
பயர்!
தொடர் தோல்விகளுக்கு முற்றுப்
ன். சுமாரான வெற்றிதான் என்றாலும்,
தருக்கு லாபத்தைத் தந்தது இந்தப்
ின் பெரிய ப்ளஸ்.

ந்து பெற்றுத் தந்த படம். மேலும்
யும் வென்ற இந்தப் படம், சன்
ம்பரங்கள் இந்தப் படத்தை
வெற்றி பெற உதவின!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேன் கிண்ணம்

## தைத் திருநாளே வருக!

தமிழரின் திருநாள்
உழவரின் பெருநாள்
இன்பம் பொங்கும்
தைத்திருநாள்

சங்கடங்கள் பறந்து
தர்மங்கள் செழித்து
தமிழ்மணம் கமழும்
திருமகள் போலே
புதிதாய் பிறப்பெடுத்த
நாளே – தைத்திருநாள்.

சூரிய பகவானைத் துதித்து
அனைவரும் கூடி
உணவுண்டு மகிழ
பிறந்த நாளே
தைத்திருநாள்.

இன்பக் காற்று வீசி
இனிமையுடன்
நாம் வாழ
தைத்திருநாளே
வருக... வருக...

ராணி மகள் ரஜனிந்தா

## அலையும் ஆன்மா

சுகம் தேடி அலைபாயும் ஒரு
சோகப் பறவையாய் – உன்
மனம் தேடி அலைகிறேன்.
எங்கெங்கோ வழி தேடி அலைகின்றேன்.
கனிவுடன் பேசும் காலங்கள் போனது
உன் விழிதேடி அலைகின்றேன்.
காதல் பிரிந்த இதயம் துடிக்க – உன்
செவி தேடி அலைகின்றேன்
காதல் மொழியால் கட்டுண்டவளாய்
மடிச் சுமந்த குழந்தையாய் அலைகிறேன்.
அலையும் ஆன்மா ஓய்வதில்லை – உடல்
அழிந்த பின் பார் உயிர் கூட.
பிரபஞ்சமெல்லாம் – அவன்
உள்ளத்தில் அமைதி கிடைக்கும் வரை
அலையும் ஆன்மா ஓய்வதில்லை.

ந. தீபா,
மாசியப்பிட்டி.

## உயிரெழுத்தில் ஓர் கவிதை....

அன்புள்ள எனும் கருவறைக்குள் – என்
ஆசைகளை அடைத்து வைத்து
இன்பமெனும் கவிக் கட்டிலிலே – நான்
ஈன்றெழுதும் காதல் கடிதமிது
உள்ளத்துள் உனை வைத்து – உன்பின்
ஊமையாய் அலைகின்ற
எந்தனுயிர் விண்ணப்பம் – இதை
ஏற்பது உன் விருப்பம்
ஐயராத்தில் தவழ்கின்ற – தங்க
ஒளி வீசும் ஓவியமே!
ஓடிவந் தெனக்கொரு முத்தமிடு
ஔவைபோல் ஆகுமுன்னே – நாம்
ஃ போல் மூன்று பெற்றிடலாம்.

நுவரெலியா,
கே. வண்ணன்.

## வீரனுக்கு... க(ண்)(ஞ)வனே!

யாழ்: ஜெயா,
புதுக்குடியிருப்பு.

க(ண்)ண(அ)வனே!
கல்லானாலும் புல்லானாலும்
நீதான் என்றிருந்த எனக்கு
சொல்லாமலே சென்றதன்
மாயமென்ன?

வாசல்வரை
வந்த என்னை
நேசம் கொண்டு
திரும்பிப் பாராமலே
ஏன் சொல்லாமல் நீ
சென்றாய்?

நீ திரும்பி வரும் வரை
உனக்காக பிரார்த்திக்கப் போவது
நான் மட்டும்தான்
ஏன் தெரியுமா?
நலமாக நீ
மீண்டும் வருவதால்
வெள்ளைச் சேலைக்குள்
விதவையாகாமல்
வாழப் போவது
நான் மட்டுமே
உன்னைச் சுற்றியிருப்பவர்களல்ல.

## நான்தான் பேசுகின்றேன்

நான் சிறியவள்
இல்லாத ஏழை உயர்வானாய் வாழவேண்டும் [illegible]
[illegible]
[illegible] – நீ
[illegible]
[illegible]
[illegible]
நீ பிறக்கும் முன்னே
உனக்குள் நான் பிறந்துவிட்டேன்
உன் அத்தனை திறமைகளையும்
ஒட்டுமொத்தமாய் அள்ளிக் கொள்வேன்
இறுதியில் [illegible]
[illegible]
அப்போதும் நான் இறக்கவிட்டேன்
உன் [illegible] கொள்வேன்.

க. ரஜனிகாந்த்,
வயாவிளான்.

கணவன்மார்கள் தங்கள் மனைவியிடம் பொய் சொல்வதுண்டு. காரணம் மனைவி மனம் வருந்தப்படக்கூடாது என்பது தான். அப்படி கணவன்மார்கள் எப்பொழுதெல்லாம் பொய் சொல்கிறார்கள் என்று பார்க்கலாம். ஒரு சேலையைக் கட்டிக் கொண்டு வந்து கணவனின் முன் நின்று கொண்டு இந்த சேலை எப்படி இருக்கு என்று மனைவி கேட்பாள். அதற்கு கணவன் நீயும், உன் சேலை செலக்ஷனும் என்று உண்மையைச் சொல்ல முடியுமா..?

உடனே சேலை ரொம்ப நல்லா இருக்கும்மா என்பார்கள். அவர்கள் சொல்வது சேலையைத் தான். அந்த சேலை உங்களுக்கு நன்றாக இருக்காவிட்டாலும் கூட பெரும்பாலானவர்கள் அப்படித்தான் சொல்கிறார்களாம். நல்லா இல்லையென்று சொன்னா அடுத்து என்ன நடக்கும் என்பது ஆண்களுக்குத்தானே தெரியும்..!!

மனைவியுடன் பொதுஇடத்தில் நடந்து செல்லும்போது ஒரு அழகான பெண் யாராவது அந்த வழியாகச் சென்றால், அப்படியே ஒரு சின்ன லுக் விடுவது பெருந்தும் இருக்கும் பழக்கம். அப்போது மனைவி கணவரை நோக்கி, என்ன கண்ணு கண்டபெணிக்கு திரியுது. இப்ப எதுக்கு அந்தப் பெண்ணை பார்த்தீங்க என்று கோபமாக சீறி

## கணவர்மார்கள் பொய் சொல்வார்களா?



என்னைப் போய் இப்படி நினைத்துவிட்டாயே. நான் அந்த பெண்ணைப் பார்க்கவே இல்லை. நீ பக்கத்தில் இருக்கும்போது நான் எதுக்கு அதைப் பார்க்கணும் என்பார்கள். இதுவும் ஒட்ட பொய்களில் ஒன்றுதான்.

மனைவிமார் புதுசா ஒரு ஐட்டம் சமைத்துக் கொண்டு வந்து சாப்பிடச் சொல்வார்கள். கணவன்மார்களும் மூச்சு, பேச்சு இல்லாம சாப்பிட்டுவிட்டு எழுந்துவிடுவார்கள். என்னங்க நான் புதுசா சமைத்தது எப்படி இருந்தது என்று கேட்பார்கள், மனைவிகள். அதற்கு கணவன்மார்கள் ஓ, ரொம்ப நல்லா இருந்தது என்று பாராட்டுவார்கள். மனைவி உச்சி குளிர்ந்து போய் அந்த உணவை தன் வாயில் வைத்தவுடன் தான் அது எவ்வளவு மோசமாக இருந்தது என்றே உணர்வார்கள். அதற்காக எல்லோரும் மோசமாக சமைப்பவர்கள் இல்லை என்பதையும் இங்கு சொல்லியாக வேண்டும்.

இருந்தாலும், சாப்பாடு நல்லா இல்லாவிட்டாலும் கூட, அதையும் பெண்கள் அழகாகச் சமாளிப்பார்கள். அன்றைக்குக்கு ஒரு நாள் நான் புதுசா ஒரு சாப்பாடு சமைச்சேன். அதை வாயில் வைக்கவே முடியவில்லை. ஆனால் என் புருஷன் ஒரு வார்த்தை கூட சொல்லாம அமைதியா சாப்பிட்டார். அவர் மாதிரி வருமா என்று பெருமை பேசிக்கொள்வார்கள். அதாவது கணவன் பொய் சொன்னாலும் கூட, அதை பெருந்தன்மையாக கருதுவதுதான் ஒரு மனைவியின் குணம்.

கணவன் – மனைவி இருவருக்கும் ஒரே மாதிரியான ரசனை இருக்க வேண்டும் என்றில்லை. சந்தோஷ் சுப்ரமணியம் படத்தில் வருவது மாதிரி, தானே கணவருக்கு ஒரு சட்டையைத் தேர்ந்தெடுத்து அது அவருக்கு பிடிக்காவிட்டாலும் சூப்பர் என்று சொல்லிவிடுவார்கள் மனைவிகள். உடனே அது தனக்கு பிடிக்காவிட்டாலும் மனைவியின் சந்தோஷத்திற்காக அந்த சட்டையை அணிந்து கொள்வார்கள் ஆண்கள்.

இந்த மாதிரி சின்னச் சின்ன விஷயங்களில் ஆண்கள் பொய் சொல்வது மனைவி மனம் வருத்தப்படக் கூடாது, தாம்பத்தியத்தில் இனிமை கெட்டு விடக் கூடாது, குடும்பத்தில் பூசல் வெடித்து விடக் கூடாது என்பதற்காகத் தான். மற்றபடி எதுக்கெடுத்தாலும் பொய் சொன்னால் கண்டிப்பாக பூகம்பம் தான் வெடிக்கும் என்பதை மனதில் கொள்வது நல்லது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அ.தி.மு.க.வின் அதிகார மையம் சசிகலாவின் விஸ்வரூபம்

அ.தி.மு.க.விலும் சரி, ஆட்சியிலும் சரி ஆரம்பம் முதலே சசிகலா நந்தியாக மாறி பெரும் குழப்பங்களை ஏற்படுத்தி வந்தபோதும் பொறுமையாக இருந்த ஜெயலலிதா, சமீப காலமாக தனது ஆட்சிக்கே உலை வைக்கும் அளவுக்கு ஆட்சியைப் பிடிக்கும் அளவுக்கு சிந்திக்கத் தொடங்கியதும், சீர்குலைவு நடவடிக்கைகளை முடுக்கிவிட்டதாலும்தான் பொறுக்க முடியாமல் சசிகலா கும்பலை அ.தி.மு.க.வை விட்டுத் தூக்கி விட்டதாக கூறப்படுகிறது.

(தகவலும் உண்டு).

ஜெயலலிதாவின் வலது கரமாகவும், இடதுகரமாகவும் மாறிப் போனதால் சசிகலா வைத்ததே சட்டம் என்ற நிலை கட்சிக்குள்ளும், ஆட்சியிலும் உண்டாகிவிட்டது.

சசிகலாவின் செல்வாக்கைப் பயன்படுத்திக் கொண்டு அவரது அக்காள் மகன்களான சுதாகரன், திவாகரன், பாஸ்கரன் ஆகியோர் அ.தி.மு.க.வில் தலைதூக்கினர். உறவினர்களான அக்காள் கணவர் விவேகானந்தன், டாக்டர் வெங்கடேஷ், ராவணன்



ரிஷி

1991ஆம் ஆண்டுக்கு முன்பு போக வேண்டும் ஜெயலலிதா, சசிகலா இடையிலான நட்பை அறிந்து கொள்ள. எம்.ஜி.ஆரின் மறைவுக்குப் பின்னர் ஜெயலலிதா அரசியலில் புதிய சக்தியாக உருவெடுத்தபோது அவருக்கு சாதாரண முறையில்தான் அறிமுகமானார் சசிகலா.

ஆணாதிக்கம் மிக்க அரசியல் துறையில், உற்ற தோழியாக சசிகலா வந்ததாலும், தன்னைப் புரிந்து கொண்டு நடந்ததாலும் சசிகலாவை தனக்கு அருகிலேயே வைத்துக் கொண்டார் ஜெயலலிதா. சசிகலாவும், ஜெயலலிதாவின் மனதறிந்து அவருக்கு உற்ற தோழியாக நடந்து கொண்டார். இந்த நட்பு நாளுக்கு நாள் இறுகி இணை பிரியாத தோழிகளாக ஜெயலலிதாவும், சசிகலாவும் மாறிப் போயினர். நாளடைவில் ஜெயலலிதாவின் உதவியாளராக உருவெடுத்தார் சசிகலா. மேலும் ஜெயலலிதாவுக்கு அவ்வப்போது அறிவுரை கூறும் அளவுக்கும் அவர் மாறினார்.

1991ஆம் ஆண்டுதான் சசிகலாவின் விஸ்வரூபம் வெளிப்பட்டது. ஆட்சியிலும், கட்சியிலும் சசிகலா ஒரு முக்கிய அதிகார மையமாக உருவெடுத்தார். 91 முதல் 96 வரை நடந்த முதலாவது ஜெயலலிதா ஆட்சியின்போது சசிகலாவைத் தாண்டித்தான் காற்றாக இருந்தாலும் கூட ஜெயலலிதாவை சென்றடைய முடியும் என்ற நிலை ஏற்பட்டது.

சர்வ வல்லமை படைத்த அதிகார மையமாக மாறிய சசிகலா படிப்படியாக தனது குடும்பத்தினரையும் ஒவ்வொருவராக கட்சிக்குள் இழுத்து வந்தார்.

ஒரு கட்டத்தில் ஜெயலலிதாவுக்காக தனது கணவர் நடராஜனைக் கூட உதறித் தள்ளத் துணிந்தார். பல ஆண்டுகளாகி விட்டது சசிகலாவும் நடராஜனும் பிரிந்து (இருவரும் அவ்வப்போது இரகசியமாக சந்தித்துவன்டு என்ற

உள்ளிட்டோரும் அதிகார மையங்களாகினர்.

அ.தி.மு.க.வில் ஏதாவது நடக்க வேண்டும் என்றால் இவர்களில் யாரையாவது ஒருவரைப் பார்த்தால் போதும் என்ற நிலைக்கு அ.தி.மு.க.வினர் தள்ளப்பட்டனர். இந்த மன்னார்குடி வகையறாவின் ஆதிக்கத்தால், ஆளுமையால் பல மூத்த தலைவர்கள் கட்சியை விட்டு ஒதுங்கிச் சென்றனர். பலர் தூக்கியடிக்கப்பட்டனர் - முத்துசாமி போல.

தற்போதைய கதைக்கு வருவோம். ஜெயலலிதாவின் 3ஆவது ஆட்சி தொடங்கிய கடந்த 6 மாதங்களில் சசிகலாவின் ஆதிக்கமும், ஆட்டமும் கட்சிக்குள் அதிகரித்துவிட்டதாக செய்திகள் வெளிவந்த வண்ணம் இருந்தன. மேலும் ஆட்சியிலும் அவர் பெருமளவில் தலையிடுகிறார் என்ற புகார்களும் கிளம்பின.

தனக்கு வேண்டியவர்களை முக்கிய பதவிகளில் அமர்த்தினார் சசிகலா. அதேபோல அமைச்சர்கள் நியமனத்திலும் அவரது ஆட்டம் அதிகமாகவே இருந்தது. இடமாறுதல்கள் உள்ளிட்டவற்றிலும் பெரிய அளவில் விளையாடினார் சசி என்பது இன்னொரு குற்றச்சாட்டு.

இந்த குழப்பத்தால்தான் ஜெயலலிதாவின் இந்த ஆறு மாத கால ஆட்சியில் பல அதிகாரிகள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள், துறைச் செயலாளர்கள், பல அமைச்சர்கள் அடிக்கடி மாற்றப்பட்டு ஆட்சிக்கும், கட்சிக்கும் பெரும் கெட்ட பெயர் ஏற்படுத்தக் காரணமாகிவிட்டதாக கூறப்படுகிறது.

குறிப்பாக உளவுத்துறை ஐ.ஜியாக இருந்து வந்த பொன் மாணிக்கவேல் நியமனமும், இடமாற்றமும் ஒரு முக்கிய உதாரணமாக கூறப்படுகிறது. இவர் சசிகலாவுக்கு மிகவும் நெருங்கியவர். இதனால்தான் அந்தப் பதவிக்கு கொண்டு வரப்பட்டார்.

(தொடர்ச்சி 32ஆம் பக்கம்)

உடன் பிறந்த அண்ணன் தம்பிகள், அக்காள் தங்கைகள் இருப்பார்கள். ஏதேனும் ஒரு சிக்கல் இருந்துகொண்டே இருக்கும்.

'வாழ்க்கை என்றால் ஆயிரம் இருக்கும்
வாசல்தோறும் வேதனை இருக்கும்
வந்த துன்பம் எதுவென்றாலும்
வாடி நின்றால் ஓடுவதில்லை
மயக்கமா கலக்கமா? மனதிலே குழப்பமா?"

இப்படி ஒரு பாடலை நான் படத்தில் எழுதியுள்ளேன்.

வாழ்க்கை என்றால் வேதனை இருந்துகொண்டேதான் இருக்கும்.

அதில் நீ எண்ணிப் பார்க்க

நாளைக்கு என்ன செய்வது என்று எண்ணினால், உன்னைச் சிந்திக்காமல் உறவையே சிந்திக்க வேண்டியிருக்கும்.

உறவிலே யாராவது ஒருவர் ஏதாவது சொல்லிவிட்டால், சந்தேகம் வரும். 'ஐயோ! தாங்க முடியவில்லையே!' என்று கதறல் தோன்றும். செத்துப் போகலாமா?" என்ற எண்ணம் வரும். எங்கேயாவது ஓடிவிடலாமா?" என்று ஆசை வரும். 'இப்படி என்னாலே வாழ முடியாது!' என்று தலையில் அடித்துக்கொள்ளத் தோன்றும்.

ஒன்றா? இரண்டா? குடும்பத்துக்குள்ளே ஏராளமான கலவரங்கள், சங்கடங்கள்.

# கண்ணதாசனின் அர்த்தமுள்ள இந்துமதம்

பாகம் - 10



200

குழப்பங்கள், மயக்கங்கள் வந்து கொண்டே இருக்கும்.

அதிலே சிக்கிக் கொண்ட பிறகு, நீ உன்னை அறிவது எப்படி?

மனம் இவர்களுக்கு இடையிலே சின்னா பின்னப்பட்ட பிறகு, அந்த மனதைப் பக்குவப்படுத்துவது, பாடம் பண்ணுவது எப்படி?

அதற்காக, 'குடும்பத்திலே மாட்டிக் கொள்ளாதே! கல்யாணம் செய்து கொள்ளாதே! சந்நியாசியாகிவிடு!' என்று நான் போதிக்க வருகிறேனா

என்றால் இல்லை.

பட்டும் படாமலும், தொட்டும் தொடாமலும் இருக்க வேண்டும்.

'எண்ணெயை உடம்பிலே தேய்த்துக் கொண்டு என்னதான் மண்ணிலே புரண்டாலும், ஒட்டுவதுதான் ஒட்டும்' என்று கிராமங்களில் சொல்வார்கள்.

'இவ்வளவுதான் நமக்கு வந்தது. அவ்வளவுதான் நமக்கு இறைவன் கொடுத்தது' என்று அமைதி அடைந்துவிடு.

மனதிலே டென்ஷன்-கவலை இவற்றை வளர்த்துக்கொள்ளாதே.

மனைவி ஒரு பக்கம் நின்று திட்டிக் கொண்டிருப்பாள். மக்கள் தலைமாட்டிலே நின்று ஏசுவார்கள். மருமக்கள் வேறு பேசுவார்கள்.

பேரன் பேத்திகளைத் தூக்கி வைத்துக்கொண்டு, இவர்களை எல்லாம் மறந்துவிடு. பேரன், பேத்திகளே உனக்கு விரோதமாக மாறமாட்டார்கள்.

ஏனென்றால், 'எந்தக் காலத்திலேயும் மூன்றாவது பரம்பரை என்பதுதான், உன்னைக் காப்பாற்றுகின்ற பரம்பரை' என்று நம்முடைய மூதாதையர்கள் கருதினார்கள்.

அதனால்தான் 'பாட்டனுடைய பேரை வைப்பான்' என்கிற பொருளிலே 'பேரன்' என்கின்ற வார்த்தையைக் கொடுத்தார்கள்.

பேறெடுக்கின்ற பெண்ணாதலால், 'பேத்தி' என்று பேத்தியைச் சொன்னார்கள்.

வேண்டியது என்ன?

"உனக்கும் கீழே உள்ளவர் கோடி நினைத்துப் பார்த்து நிம்மதி தேடு!"

"தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை அம்மா பெரிதென்று அகமகிழ்க!" என்றார் குமரகுருபர சுவாமிகள்.

காலுக்குச் செருப்பு இல்லையே என்று ஒருவன் கவலைப்பட்டானாம். அவன் ஒரு கோயிலுக்குப் போனானாம். அங்கே இரண்டு கால்களும் இல்லாமல் ஒருவன் உட்கார்ந்து இருந்தானாம்.

"ஆண்டவனே! எனக்குச் செருப்பில்லா விட்டாலும் பரவாயில்லை. இரண்டு கால்களும் இருக்கிறதே" என்று பெருமிதத்தோடு திரும்பி வந்தானாம்.

அந்தக் கால் இல்லாதவன், சற்று நகர்ந்து போனானாம். அங்கே கண்ணில்லாத ஒருவன் உட்கார்ந்திருந்தானாம்.

"ஆண்டவனே! எனக்குக் கால்கள் இல்லாவிட்டாலும் பரவாயில்லை. உலகத்தைக் காணக் கண்களையாவது கொடுத்தாயே. அதுவரைக்கும் நன்றி!" என்றானாம்.

உனக்கு வருகின்ற துன்பத்தைப் பார்த்து அழாதே. உனக்கும் கீழே உன்னைவிடத் துன்பப்படுகிறவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள் என்று எண்ணி, அவர்களைப் பார்த்துச் சந்தோஷப்படு!" என்கிறார்கள் நம்முடைய மூதாதையர்கள்.

குடும்பத்தில் அவ்வளவு சிக்கல் இருக்கும். அதிலேயும் மனைவி மக்கள் என்று மாட்டிக் கொண்டால், சிக்கல் அதிகமாகும்.

நாளுக்கு நாள் நீ உலகத்திலேயே ஏற்றத்தைப் பெறு. அவர்களுக்காக வாழ வேண்டியிருக்கும். ஒரு புத்திர மனிதனாக நீ வாழ வேண்டியிருக்கும்.

நல்ல மனைவி வாய்த்தால், ஆண்டவனுடைய அருள். நல்ல பிள்ளை வாய்த்தால், ஆண்டவனுடைய அருள். இல்லை என்றால் கூட, நீ கவலைப்பட்டு என்னாகப் போகிறது?

கண்ணீர் வடிப்பதாலே கவலைகள் தீர்ந்துவிடப் போகின்றனவா? அதைத்தான் சொன்னேன்.

(தொடரும்...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடங்கும் வசந்தம்



**பதினேழு** வயது மட்டுமே நிரம்பிய நடா மொகம்மட் வாபா. கட்டார் நாட்டைச் சேர்ந்த நீச்சல் வீராங்கனை. பாடசாலை மட்ட நீச்சல் போட்டிகளோடு மட்டும் சரி. அதற்கப்பால் செல்வதற்கு அந்த நாட்டின் பாரம்பரிய சமூக நடைமுறைகள் இடமளிப்பதாக இல்லை. ஆனால் இப்போது டோகாவில் நடைபெறவுள்ள அரபு விளையாட்டு நிகழ்வுகளுக்கு இவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்று அறிவிக்கப்பட்டதும் அதிர்ச்சியடைந்துவிட்டார். அது ஆனந்த அதிர்ச்சி.

கட்டார் மிகவும் செல்வந்த நாடு. தன்னை விளையாட்டுத்துறையின் மூலம் பிரபல்யப்படுத்தி உலகளவில் பதிவுகளை ஏற்படுத்த முனையும் நாடு. இதன்காரணமாக தடகளப் போட்டிகள், ரென்னிஸ் போட்டிகள் உதைபந்தாட்டப் போட்டிகள் என்று சர்வதேச அளவில் தன் நாட்டில் நடாத்திக் கொண்டிருக்கிறது. சிறப்பாக 2020இல் உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளை நடாத்தவுள்ள நாடு என்பதே அதன் விருப்பங்களையும் வெற்றியையும் வெளிப்படுத்தி நிற்கிறது. இந்நிலையில் ஒலிம்பிக் போட்டிகளிலும் கட்டார் மகளிர் பங்குபற்ற வைப்பதில் கட்டாருக்கு ஆர்வம் உண்டு.

அதோடு 2020 ஒலிம்பிக் போட்டிகளை நடாத்தும் வாய்ப்பினைப் பெற்றுக் கொள்ளும் விருப்பமும் உண்டு. இதனால் விளையாட்டுத் துறையில் மகளிர் பங்களிப்பும் ஒரு தேவையாக உள்ளது. கட்டார் விளையாட்டுத்துறை அதிகாரிகள் கருத்துக் கூறுகையில், சட்டரீதியாக மகளிர் பங்கேற்புக்குத் தடையில்லை. ஆனால் மக்களின் மனநிலை, மற்றும் பாரம்பரியங்கள் காரணமாக விரைவாக சில விடயங்களைச் செய்ய முடியாமல் இருக்கிறது. ஆனால் எமது பெண்களை விளையாட்டுகளில் கலந்து கொள்ளாமல் இல்லை. உதாரணமாக 2010இல் சிங்கப்பூரில் நடைபெற்ற யூத் ஒலிம்பிக் போட்டிகளில் எமது மகளிர் கலந்து கொண்டனர். 2008 பீஜிங் ஒலிம்பிக்கில் பங்குபற்றாமைக்குக் காரணம் அந்தத் தகுதிநிலையை அடையும் குறைந்தபட்ச நியமங்களை அடைய முடியாமல் போனமை தான் என்று தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளார். கட்டாரில் நிலைமை வேகமாக மாறிக் கொண்டு வருகிறது. முன்பெல்லாம் விளையாட்டுத் துறையில் ஈடுபட்ட பெண்கள் கேலியாகப் பார்க்கப்பட்ட நிலை மாறி இப்பொழுது மகளிருக்கு உற்சாகம் கொடுக்கும் நிலை வந்துவிட்டதென்கிறார் ஒரு வீராங்கனை.

மீண்டும் வாபாவின் விடயத்துக்கு வந்தால் Brest Stroke, Free style வகையில் 50m, 100m எனும் நான்கு நீச்சல் வகையிலும் பங்குபற்றுவார் இவர். தனது தகுதிநிலையை மேலும் மேலும் அதிகரித்துக் கொள்ளும் ஆர்வத்தில் இருக்கிறார் இவர். அநேகமாக விசேட நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் லண்டன் ஒலிம்பிக் போட்டிகளில் பங்குகொள்ளும் சந்தர்ப்பம் இவருக்கு இருக்கிறது. அப்படி நடைபெற்றால் மிக உயர்ந்த விளையாட்டு நிகழ்வின் கட்டார் நாட்டின் முதல் பெண் பங்கேற்பாளர் என்ற பெருமையை வாபா பெறுவார்.

கட்டார் அதிகாரிகளின் கருத்துக்களைப் பார்க்கும்போது, மகளிர் விளையாட்டு அபிவிருத்திக்கு சகல வசதிவாய்ப்புக்களையும் செய்ய இவர்கள் ஆர்வமாக இருப்பது புலப்படுகிறது. இந்நிலை தொடர்ந்து. சமூகமட்டத்தில் இருந்து மகளிர் பங்கேற்புக்கான பூரணமான விருப்பமும் வெளிப்படும் பட்சத்தில் கட்டார் சர்வதேச வெற்றிகளை மின்னல் வேகத்தில் செய்து காட்டும் என்று சந்தேகமின்றிக் கூறலாம்.

---

# கண்ணாமூச்சி ஆட்டம்

**அவுஸ்திரேலிய** கிரிபித் பல்கலைக்கழக பொருளியல் பேராசிரியர் டொக்டர் நிக்கலஸ் ரோட்ஸ் ஒரு ஆய்வு செய்துள்ளார். அதாவது உலகின் அதிசிறந்த கிரிக்கெட் வீரர் அவுஸ்திரேலியாவின் சேர். டொன் பிரட்மனா அல்லது தனது ஆய்வின் முடிவில் சச்சினே அதிசிறந்த வீரர் என்று கூறுகிறார்.

சச்சின் 184 டெஸ்ட் ஆட்டங்களின் 15183(இப்போது மாறி இருக்கும்) ஓட்டங்கள் பெற்றுத் துடுப்பாட்டச் சராசரி 56.02 என்பதைக் கொண்டிருப்பார். 1989 ஆம் ஆண்டு சர்வதேச கிரிக்கெட் உலகில் நுழைந்தவர். பிரட்மன் 52 டெஸ்ட் ஆட்டங்களில் 6996 ஓட்டங்கள் சேர்த்த 99.04 எனும் சராசரி கொண்டவர். இவர் 1928 - 48 காலப்பகுதியில் கிரிக்கெட் விளையாடியவர்.

பேராசிரியர் தனது ஆய்வை மேற்கொள்ளும்போது பல்வேறு காலகட்டங்களில் விளையாடிய வீரர்களையும் சேர்த்து தன் ஆய்வை மேற்கொண்டிருந்தார் அதோடு இந்த ஜாம்பவான்கள் பெற்ற மொத்த ஓட்ட எண்ணிக்கைகள், இவர்களது காலத்துச் சராசரி விளையாட்டு வீரர்களின் ஓட்ட



எண்ணிக்கைகளையும் ஒப்பிட்டு முடிவுகளை மேற்கொண்டுள்ளார். அவர் கருத்துக் கூறும் போது, தனது ஆய்வு ஒரு வகைப்பாட்டென்றும், இந்த வீரர்கள் பற்றி இன்னும் பல திசைகளில் பலரும் ஆய்வு செய்வார்கள், அதற்கு எனது ஆய்வு ஒரு ஊக்கமாக இருக்கும் என்றும் கூறியுள்ளார்.

அதோடு இவர்கள் இருவரையும் ஒப்பிடும் போது, இருவரும் விளையாடிய கால எல்லையும் கவனத்தில் கொள்ளப்பட்டதாகவும் சச்சின் தொடர்ந்து விளையாடிக் கொண்டிருப்பதால் துல்லியமாகச் சச்சினின் கால எல்லையைக் குறிப்பிட முடியவில்லை என்றும், இவரின் ஒய்வையடுத்து, தனது ஆய்வு இன்னும் கூர்மைபெறும் என்றும் கூறியுள்ளார். அதோடு சச்சினின் ஓய்வின் பின்னரே நிறையப் பேர் ஆய்வில் ஈடுபடும் சந்தர்ப்பம் அதிகம் உண்டென்றும் கூறுகிறார்.

பேராசிரியர் வகைப்படுத்தலின்படி அவுஸ்திரேலியாவின் அலன்போடர், மற்றும் ஸ்ரீவ்வோ முறையே ஏழாவது, ஒன்பதாவது இடம்பெற, இந்தியாவின் டிராவிட் மற்றும் கவாஸ்கார் முறையே நாலாம், எட்டாம் இடம்பெற்றுள்ளனர். சச்சினைப் பொறுத்தவரை இந்த நிமிடத்திலும் கூட அவுஸ்திரேலியாவில் தன் திறமையை வெளிப்படுத்திக் கொண்டுதான் இருக்கிறார். (மதம்)தான் இவருடன் கண்ணாமூச்சி விளையாடிக் கொண்டிருக்கிறது அதனைத் தன் கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வர சச்சினுக்கு கனகாலம் எடுக்காது.

**விளையாட்டு**

ஜோசப் சிறிஸ்கெல்லா

# உன்னைப் போல் யார்?

**மீண்டும்** இவரைப் பற்றியே எழுத வேண்டிய சந்தோஷம் இது இவருக்கும் சந்தோஷமாகத்தான் இருக்கும். இவர்தான் லயனல் மெஸ்ஸி. இவர் பற்றிய அறிமுகம் தேவையில்லை. ஆனால் இவருக்கும் ஒரு ஆதங்கம். உதைபந்தாட்ட உலகில் பல விருதுகளைப் பெற்றாலும் தாயகமான ஆர்ஜென்ரினா தன்னைக் கண்டுகொள்ளவில்லையே என்ற ஆதங்கம்தான் ஆர்ஜென்ரினா அணித்தலைவர் மெஸ்ஸிக்கு.

இப்பொழுது அதுவும் தீர்ந்துவிட்டது. ஆர்ஜென்ரீன விளையாட்டுத்துறை ஊடகவியலாளர்கள் அனைவரும் சேர்ந்து 2011க்கான Arjentine Sports Personality என்ற தங்க விருதுகளுக்கு இவரைத் தெரிவு செய்துள்ளனர். இதனால் மிகுந்த சந்தோஷத்தில் இருக்கிறார் இவர். இந்த விருதுக்கு நன்றி. கடவுளுக்கும் நன்றி. எனக்கிருந்த மனக்குறை தாயகத்தில் ஒரு விருது பெறவில்லையே என்பதுதான். அந்தக் குறையும் தீர்ந்துவிட்டது என்று கூறியிருக்கிறார் மெஸ்ஸி.

ஆர்ஜென்ரீன தேசிய அணியின் தலைவரான இவர், பார்சலோனா கழகத்துக்கான நான்கு முறை கிண்ணம் வென்று கொடுத்தவர். சம்பியன்லீக் லீக்கா சுற்றுப் போட்டிகளில் அதிகூடிய கோல்கள் போட்டவர் என்ற பெருமையைத் தொடர்ந்து மூன்றாவது வருடமாகத் தக்க வைத்துக் கொண்டிருப்பவர்.

பலூன் டி ஓர் விருதை 2010, 2009 ஆம் வருடங்களில் வென்றவர். 2008, 2007 இல் இரண்டாம் இடம்பெற்றவர். இம்முறையும் இந்த விருதுக்கு பிரேரிக்கப்பட்டுள்ள மூவரில் இவரும் ஒருவர். இம்முறையும் இவ்விருதை இவரே தட்டிச் செல்வார் என்ற கேள்வி உதைபந்தாட்ட உலகில் மிகப் பரபரப்பாகப் பேசப்பட்டுக் கொண்டிருக்கிறது. இவரைப் பற்றி ஒரு கட்டுரையாசிரியர் கூறும்போது, கட்டுச்செட்டான வேகம். நுட்பங்கள் நிறைந்த, கட்டுப்படுத்த இயலாத இயல்புகள் அனைத்தும் கொண்டவர் இவர் என்று புகழ்பாடி நிற்பதோடு, ஒப்பீட்டளவில் அதிசிறந்த உதைபந்தாட்ட வரிசையில் எந்தக் காலத்துக்கும் முதன்மையானவர் என்று முடிக்கிறார். அநேக ரசிகர்களின் கருத்தும் இதுதான்.

இம்முறை FIFA Ballon d.or விருதுக்குப் பரிந்துரைக்கப்பட்டவர்கள்



**சேவி ஹெர்னான்டஸ்**
31வயது - ஸ்பானியா,
பார்சலோனா கழகம்.
107 ஆட்டங்கள். 8 கோல்கள்

**லயனல் மெஸ்ஸி**
24 வயது - ஆர்ஜென்ரீனா
பார்சலோனா கழகம்
67 ஆட்டங்கள். 19 கோல்கள்

**கிறிஸ்டியானோ ரொனால்டோ**
26 வயது - போர்த்துக்கல்
றியல் மட்ரிட் கழகம்
87 ஆட்டங்கள். 32 கோல்கள்

மேற்படி மூவரில் மெஸ்ஸி, சேவி இருவரும் பார்சலோனா வீரர்கள். 2011 இல் இவ்விருவரும் இணைந்து பார்சலோனா பெற்ற வெற்றிகள்.
ஸ்பானிஷ் சாம்பியன்ஷிப்.
சாம்பியன்ஸ் லீக் UEFA Cup
ஸ்பானிஷ் சுப்பர் கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போருக்குப் பிந்திய சூழலில் பெண்களின் நிலை!

முனைரெனவாப் தாங்கள் உணவுக்கும் குடிப்பதற்கும் மட்டுமே வாயைத்திறக்க முடிந்ததாகவும், கூடிய பட்சம் கருத்துச் சுதந்திரம் என்பது பசிதாகத்தை வெளிப்படுத்துவதோடு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது என்றும் அவர் பயங்கரமூட்டக்கூடிய தங்களதுபாவிற்பு அனுபவத்தை நினைவு கூருகிறார்.

தமக்கு வெளியிடங்களில் இருந்து வரும் சாதாரண சமாச்சாரங்களைத் தாங்கிய கடிதங்கள் கூட ஆயுததாரிகளான புலிகள் இயக்கத்தினரால் தபாலகங்களிலிருந்து பெறப்பட்டு அவர்கள் அதனைப் பிரித்துப் படித்துப் பார்த்தும் திருப்திப்பட்ட பின்னரே தங்களிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் அதில் சந்தேகத்துக்குரிய ஏதுமொரு விடயங்களும் இல்லாதிருந்த போதிலும் கூட அவர்கள் எச்சரிக்கப்பட்டிருந்ததாகவும் தங்களுக்கு ஏற்பட்ட கசப்பான வேறும் பட்டறிவு அனுபவத்தை கலைவாணி வெளிப்படுத்துகிறார்.

தங்களது கல்வி கற்கும் உரிமை, கருத்துச் சுதந்திரம், நடமாடும் பாதுகாப்பு, உடல் ரீதியான பாதுகாப்பு, உளவு ரீதியான சிந்தனை வெளிப்பாட்டுச் சுதந்திரம், பொருளாதாரத்தைத் தேடிக் கொள்ளும் பாதுகாப்பு எல்லாமே போருக்கு ஆள்பிடிக்கும் படலத்திற்குள் புதையுண்டு போய்விட்டிருந்தது, என்றும் கலைவாணி குறிப்பிடுகிறார்.

தற்போது பட்டப்படிப்பைத் தொடர்ந்து கொண்டிருக்கும் கலைவாணி, தான் காரியாலயத்தில் கடமையில் இருக்கும் போதே தன்னையும் பிடித்துச் சென்று ஆயுதப் பயிற்சி தந்து களமுனைக்கு அனுப்ப எல்.ரீ.ரீ.ஈயினர் முயற்சி செய்தவேளையில் தான் அதிலிருந்து தெய்வாதீனமாகத் தப்பிக்கொண்டதையும் நினைவுபடுத்தினார்.

நகரப் புறத்துப் பெண்கள் பெருமளவும் ஆயுதம் தாங்கிய ஒரு சாராரின் நெருக்கடிகளையே எதிர்கொண்டு வந்துள்ள அதே வேளை கிராமப்புறத்துப் பெண்களின் கதியோ வேறு விதமாக இருந்தது. அதாவது கிராமப்புறத்தில் எல்லா வகையான ஆயுததாரிகளின் பிரசன்னமும் செயற்பாடுகளும் இருந்தன. இவர்களின் ஒட்டுமொத்த செயற்பாடுகளும் கிராமப்புறத்துப் பெண்களின் வாழ்க்கையையே ஆட்டங்காணச் செய்திருந்தது, என்று கூறுகிறார் பெண்கள் பற்றிய ஆய்வாளரும் சமூகசேவையாளருமான நிரோஷா.

தங்களது இயல்பு வாழ்க்கை, மனித உரிமைகள், தங்களது சூழ்நிலைகளின் உயிர்ப் பாதுகாப்பு, வாழ்வாதாரம் என்று எல்லாமே குறைபாடு உடையதாகத்தான் இருந்தது.

ஆட்கடத்தல் இடம்பெறும் போது சகோதரனை, சகோதரியை, தாய் தந்தையை, உற்றார் உறவினரை ஏன் கடத்திச் செல்கின்றாய் எனக் கேட்கும் திராணி ஏழைப் பெண்களுக்கு இருந்திருக்கவில்லை. ஏனென்றால் ஒட்டுமொத்தமான தெளிவற்ற பாதுகாப்பு இல்லாத ஒரு சூழ்நிலையில்தான் அவர்கள் வாழ்ந்தார்கள்.

உளரீதியாக வெளியில் சொல்ல முடியாத அநேகமான பிரச்சினைகளை அவர்கள் அமர்ந்து கொண்டு அவலத்துடன் காலங்கழித்தார்கள். ஆனால் இந்தத் துயரங்களை எல்லாம் நகரப்புறத்துப் பெண்கள் அனுபவித்திருக்கவில்லை.

கேள்விப்பட்ட பய உணர்வுகளோடுதான் நகரப்புறத்துப் பெண்கள் வாழ்ந்தார்களேயொழிய அவர்கள் நேரடியாகப் பாதிக்கப்பட்டதோ அனுபவித்ததோ ஒப்பீட்டளவில் மிகக் குறைவு.

ஏற்கெனவே நகர மட்டத்திலுள்ள பெண்களுக்கு யுத்த காலத்திலும் ஓரளவுக்கு சாதகமான நிலைமையே இருந்தது. இப்போது அத்தகைய சாதகங்கள் அவர்களுக்கு இரு மடங்காகியுள்ளது.

அதேமாதிரி யுத்தத்தால் எந்நேரமும் நெருக்கடிகளுக்குள் சிக்குண்டு தமது வாழ்க்கை சீரழிந்து போன கிராமப்புறத்துப் பெண்களுக்கும் சாதகமான சூழல் ஏற்பட்டுள்ளது. பூரண சுதந்திரம் உண்டு. நினைத்த இடத்துக்குப் போகலாம், தங்களுடைய கருத்துக்களை ஓரளவுக்கேனும் வெளிப்படுத்திச் சொல்லலாம். ஏனென்றால் இப்போது அவர்களுக்கு ஒரு பக்கத்துத் தொல்லை அதாவது எல்.ரீ.ரீ.ஈயினரின் தொல்லை முழுவதுமாக இல்லை. ஆயுதம் தாங்கிய படைத்தரப்பினரின் பிரசன்னம்தான் இப்பொழுது உள்ளது. ஆயினும், மனிதாபிமான விடயங்களில் அவர்கள் மக்களுக்கு உதவிக் கொண்டிருப்பதால் பலாத்காரப்படுத்தி பெண்களைத் தொல்லைக்கு உள்ளாக்குவது எனும் விடயம் இப்பொழுது குறைவு.

ஆனால் அதற்கு மாறாக எது கூடியிருக்கின்றது என்றால், எங்களுக்கு வசதி வாய்ப்புக்கள் இப்பொழுது மிகவும் கூடிவிட்டது. இப்பொழுது ஒரு பெண் தான் நினைத்தபடி எங்கும் போகலாம், எழுதப் படிக்கத் தெரியாத யுவதிகள் கூட இப்பொழுது கைத்தொலை பேசிகளை நன்கு பயன்படுத்தி வெளியுலகத்தோடு தொடர்பு வைத்திருக்கின்றார்கள். அதன் முழுமையான கருத்துச் சுதந்திரத்தை அனுபவிக்கின்றார்கள், தமது வாழ்க்கைத் துணையைக் கூட தொலைபேசித் தொடர்பு மூலமாகத் தேடிக்கொள்கின்றார்கள்.

ஆனால் இந்த நவீன தொடர்பாடல் வசதியே சிலவேளை அவர்களது வாழ்க்கை நாசமாகிப் போவதற்கும் காரணமாய் அமைந்துவிட்டிருக்கின்றது. எல்லோர் கையிலும் மொபைல் போன் உள்ளது. சுதந்திரம் என்ற அடிப்படையில் நவீன தொலைத் தொடர்பு சாதனங்களால் சமூகத்தில் கீழ் மட்டத்திலுள்ள பெண்களின் வாழ்க்கை சீரழிந்து கொண்டிருக்கிறது.

சட்டவிரோதத் திருமணம், சிறு வயதில் கருத்தரித்தல், பாலியல் வல்லுறவு, துஷ்பிரயோகம் இதெல்லாம் சாதாரணமாக நடக்கின்றது. ஈடுபடுத்தப்பட்டவர்கள் யார் என்று தெரிந்திருந்தும் கூட அது தமக்குத் தெரியாது என மறைக்கிறார்கள். இதெல்லாம் இப்போதிருக்கின்ற அதிக கூடிய நவீன தொடர்பாடல் வசதிகளின் பாதகமான விளைவுகள்தான்.

சுதந்திரமான நிலைமை ஏற்பட்டுள்ளதை கருவியாக வைத்துக் கொண்டு நடப்பவர்கள் யாருக்கும் பயப்படவோ பதில் சொல்ல வேண்டிய அவசியமோ இல்லாமல் போய்விட்டது. எப்படியும் நான் நடக்கலாம் என்கின்ற கட்டுக்கடங்காத சூழ்நிலை நாசவேலைகளுக்குக் காரணமாக இருக்கின்றது. இதுதான் இன்று பெண்கள் வன்முறைகளை எதிர்கொள்வதற்கான காரணமாகவும் அமைந்துவிட்டிருக்கிறது.

யுத்தம் நடைபெற்ற பகுதிகளிலும், யுத்தம் தீவிரமாக இடம்பெற்றிருக்காத புறப் பகுதிகளிலும் இந்தப் பிரச்சினை பூதாகரமாக வளர்ந்து வருகின்றது.

ஒன்று குறைந்துள்ள போது இன்னொன்று கூடியிருக்கின்றது. இப்போது நான் நள்ளிரவு 12 மணிக்கும் நடமாடலாம். அதில் எந்தத் தடையுமில்லை. ஆனால் யாராவது ஒருவரைத் துணைக்கு அழைத்துச் செல்ல வேண்டும். ஏனென்றால் சமூகப் பாதுகாப்பு என்பது இன்னும் இல்லை. இதற்கெல்லாம் நீங்கள் படையினரின் பிரசன்னம்தான் காரணமென்று கண்டுபிடித்தனமாகக் குற்றஞ் சுமத்த முடியாது.

கிராமத்தில் அடிமட்டத்திலுள்ள பெண்களின் அடிப்படை சமூக அந்தஸ்து, கல்வி, பொருளாதாரம், அரசியல் செல்வாக்கு என்பனவற்றில் பின்னடைந்த நிலையிலுள்ள பெண்களின் நிலைமையானது யுத்த காலத்திலும் யுத்தம் முடிந்த பிறகும் தற்போதைய சூழ்நிலையிலும் மிகவும் மோசமாக இருக்கிறது. யுத்தத்தின் காரணமாகக் கிராமப் புறங்களிலும் நகரப் புறங்களிலும் அவ்வப்போது பெண்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்கள் யுத்தம் முடிவுக்கு வந்தபோடு சரியாகி விட்டது. ஆனால் இப்பொழுது பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு இராணுவப் பிரசன்னம்தான் காரணம் என்று சொல்வது பிரச்சினைகளின் ஆணிவேரை ஆழமாக ஆய்வு செய்யாத, யதார்த்திற்குப் பொருந்தாத விடயம் என்றுதான் சொல்ல வேண்டும்.

ஆங்காங்கே எப்போதாவது புறநடையாக ஒரு துஷ்பிரயோக சம்பவம் நடக்கிறது. அதிலும் இந்தப் பெண்கள் தொடர்புபட்ட நிகழ்வுகள் அதன் பின்னணிகளாக இருந்திருக்கின்றன. இது இராணுவப் பிரசன்னத்தால் தான் நடக்கிறது என்பதல்ல. பல சம்பவங்களுக்கு உள்ளூர் சமூகத்தவரே காரணமாக அமைந்திருக்கின்றார்கள்.

தமிழ் சமூகத்தைச் சேர்ந்த பள்ளிக்கூட மாணவர்கள்

**(ஏ.எச்.ஏ. ஹுஸைன்)**

பாடசாலைச் சீருடையோடு சாராயம் குடித்துவிட்டுக் கும்மாளமடிப்பதற்கு இராணுவப் பிரசன்னம்தான் காரணமென்று எப்படி விரல் நீட்ட முடியும்? சந்திக்குச் சந்தி நின்று தனது சொந்த சமூக சகோதரிகளையே கிண்டலடித்து, அவமானப்படுத்தி, சட்டையைக் கிழித்து, சைக்கிளை விட்டுக் கீழே விழுத்தி இப்படியெல்லாம் அருவருக்கத்தக்கதாக நடந்து கொள்வதற்கு இராணுவப் பிரசன்னம்தான் காரணம் என்று கண்டுபிடித்தமையாகக் கூறுவது கொஞ்சமேனும் பொருத்தமானதாக இல்லை. வாகரையிலுள்ள, போரினால் பாதிக்கப்பட்ட பெண்களை ஏமாற்றி அவர்களது வயிற்றுப் பசியைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு அவர்களை மாயவலையில் சிக்க வைத்து நீலப்படமெடுத்து அதையும் இந்தத் தமிழ் சமூகத்திற்கு விநியோகிக்கும் அசிங்கத்தை இதே சமூகத்தைச் சேர்ந்தவர்கள்தானே செய்கின்றார்கள்? இதற்கும் படையினர் மீது எப்படி விரல் நீட்ட முடியும்?

பக்கச்சார்பு மனநிலையை வைத்துக் கொண்டு தீர்மானமெடுத்தால் முடிவுகள் இப்படித்தான் வரும், என்று கேள்விகளையே எழுப்பி சமூகத்தின் தெளிவான ஆதங்கத்தை வெளிப்படுத்துகிறார் சமூக சேவையாளரான நிரோஷா.

யுத்தத்திற்குப் பிறகு பெண்களுக்குப் பல சாதகமான அம்சங்கள் உள்ளன.

அதேவேளை எதை நாம் சாதகமானது என்று நினைக்கின்றோமோ அதே விசயங்களைத்தான் பாதகமாகவும் அமைந்துவிட்டிருக்கின்றன.

பெண்களின் நிலைமையை ஒப்பீட்டளவில் மதிப்பிட்டு எதுவும் கூறமுடியாது. ஏனென்றால் யுத்த காலத்திலும் சரி, யுத்தமில்லாத தற்போதைய சூழ்நிலையிலும் சரி கிராமப்புறப் பெண்களும் நகரப்புறப் பெண்களும் வெவ்வேறு விதமான பிரச்சினைகளையே எதிர்கொண்டு வந்தார்கள். கிராமப்புற ஏழைப் பெண்கள் அனுபவித்த நெருக்கடிகள், அவர்களது வாழ்க்கைத் தரங்கள் நகர்ப்புறப் பெண்கள் அனுபவித்த பிரச்சினைகள் வாழ்க்கைத் தரங்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டன.

(தொடர்ச்சி அடுத்த வாரம்...)



POWERFULL WORLD WIDE SERVICE
Gem Cooparation
PK JP
ஸ்ரீ துர்க்கா தேவி அருள் சக்தி இல்லம்
MALAYALA MANTHIRIGA UCHCHADA PEEDAM




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நல்லவேளையாக அதற்கு ஒற்றாற்போல் ஒருவன் வந்து சேர்ந்திருக்கிறான்.

"அவர் எந்த அறையில் தங்கியிருக்கிறார்?" டேவிட் கேட்டான்.

"அதெல்லாம் சிக்கலானது. இரவு பத்து மணியானால், அவன் மேற்புறத்தளத்துக்கு வந்து நிற்பான்."

"அப்படியானால், நான் அவனை அங்கேயே சந்தித்துக்கொள்கிறேன்"

அப்போது ட்ரான்ஸ் மீற்றர் "பீப்...பீப்..." என்று குரல் கொடுத்தது.

கங்காபிரசாத்தின் குரல் தெளிவாக ஒலித்தது. "டேவிட் வந்து சேர்ந்துவிட்டாரா."

உடனே புஷ்பராஜ் டேவிட்டிடம் பேசுமாறு சைகை செய்தார்.

"நான் வந்து சேர்ந்துவிட்டேன் போஸ்."

"நீங்கள் செய்ய வேண்டிய முதல் வேலை, ராபின்சனுடன் தொடர்புகொள்வது. பிறகு கப்பலை கோவாவின் கடற்கரையை நோக்கிச் செலுத்தி, துறைமுகத்தை நெருங்காமல் கடலிலேயே இருக்க வேண்டும்."

"பிறகு..."

"அங்கு நம ஆள் ஒருவர் வருவார். இந்த கப்பலைப் பற்றிய தகவல்கள் எப்படியோ பொலிசுக்குத் தெரிந்திருக்கிறது. அவர்கள் அவர்கள் கப்பலைச் சுற்றிவளைப்பதற்கு முதல், நமது கைதியைப் பத்திரமான வேறோர் இடத்துக்கு மாற்ற வேண்டும்."

"அதற்கு நான் எப்படி உங்களுக்கு உதவ முடியும்?" டேவிட் கேட்டான்.

"நீங்கள், ராபின்சனைத் தொடர்பு கொண்டால் எல்லாவற்றையும் அவர் விளக்குவார்." கங்காபிரசாத்தின் குரல் உறுதியாக ஒலித்தது.

"சரி..." டேவிட் ஒப்புக்கொண்டான்.

தொடர்பு துண்டிக்கப்பட்டது.

"ஒரு விடயம் ஞாபகம் இருக்கட்டும்... அந்த ராபின்சன் உயிரோடு இருக்கும்வரை நமது திட்டம் நிறைவேறாது. எனவே, நான் சொன்னது போல செய்யுங்கள்." புஷ்பராஜ் கூறினார்.

டேவிட் சம்மதத்துக்கு அடையாளமாகத் தலையாட்டிக் கொண்டான்.

ஏறத்தாழ பத்து மணியளவில் டேவிட் கப்பலின் மேல்தளத்துக்கு வந்தான். ராபின்சன் வழக்கம்போல அங்கு நின்று கொண்டிருந்தான்.

டேவிட் வருவதை ராபின்சன் கவனிக்கவில்லை.

ராபின்சன் கம்பித் தடுப்பைப் பிடித்து நின்று கொண்டிருந்தான். மெதுவாக அவனை நோக்கி நகர்ந்த டேவிட், ராபின்சனை அலாக்காகத் தூக்கிக் கடலில் வீசினான்.

பிறகு கம்பித் தடுப்பை நெருங்கிய டேவிட், கடற்பகுதியைப் பார்த்தான்.

இருட்டில் எதுவும் தெரியவில்லை. அங்கிருந்து கிளம்பிய டேவிட் கீழ்த்தளத்துக்கு வந்தான். தகவலை உடனே புஷ்பராஜிடம் தெரிவிக்கவும் செய்தான்.

அந்தத் தகவல் சரிதான் என்றாலும் அத்துடன் அவன் தொலைந்துவிட்டதாக நினைக்கக் கூடாது. அவன், அவ்வளவு சுலபமாகக் சாகக் கூடியவன் அல்ல. எனினும் தகவலை டிக்சனிடம் தெரிவிக்க விரைந்தார் புஷ்பராஜ்.

தகவலைக் கேட்டதும், டிக்சன் உடனே டயானாவுடன் ட்ரான்ஸ்மீற்றர் மூலமாகத் தொடர்பு கொண்டார்.

டயானாவுக்கு அருகில் அப்போதும் காவல்துறை அதிகாரிகள் காத்திருந்தனர்.

ஜோசப் மாத்யூ லைனில் வந்த பிறகு அது வரையிலான நிலைமையைப் புஷ்பராஜ் விபரித்தார்.

"கப்பலை தவிர்க்க முடியாத ஏதாவது ஒரு காரணம் சொல்லி அருகில் உள்ள கடற்கரையை நெருங்க முயற்சி செய்யுங்கள்!" ஜோசப் மாத்யூ யோசனை கூறினார்.

"அதற்கு வாய்ப்பு இல்லை. கப்பல் பம்பாயை நோக்கிச் செல்கிறது. ஆனால், கோவாவில் கப்பலை நிறுத்த வேண்டாம் என்றொரு உத்தரவு வந்துள்ளது. எனவே, நீங்கள் கோவாவுக்கு வருவதானால் எல்லோரையும் ஒட்டு மொத்தமாகப் பிடித்துவிடலாம்," புஷ்பராஜ் கூறினார்.

"கோவில் அவர்களது திட்டம் என்ன?"

"டிக்சனை வேறு கப்பலில் மாற்றுவதுதான். நீங்கள் மீன்பிடிப்பவர்களாக மோட்டார் படகு ஒன்றில் கப்பலுக்கு வந்து சேருங்கள். எல்லாம் நல்லபடியாக முடிந்துவிடும்."

"சரி... அப்படியே செய்கிறோம்."

அடுத்த கட்ட நடவடிக்கைகள் ஒரு வழியாக வந்துவிட்டதால் புஷ்பராஜ், டிக்சனிடம் தகவல் தெரிவித்துவிட்டு உடனே, மேற்புற டெக்குக்கு வந்து சேர்ந்தார்.

டெக்கில் அப்போது செக்யூரிட்டிகள் எவரும் இருக்கவில்லை. புஷ்பராஜ் மட்டுமே அங்கு தென்பட்டார்.

அப்போது டெக்கின் விளிம்பில் இருந்து தலை ஒன்று உயர்வதை புஷ்பராஜ் கவனித்தார். உடனே, அவர் அடுக்கி வைத்திருந்த கயிற்றுப் பகுதியில் மறைந்து நின்று கொண்டார்.

தலை மேற்புறமாக உயர்ந்தது.

அது, பதுங்கிப் பதுங்கி மேலெழும்பியது.

ஊன்றிக் கவனித்தபோது அது ராபின்சன் என்பது விளங்கியது.

ராபின்சன் தப்பித்திருக்கிறான்.

அப்படியானால் அவன் நேராக மோத வருவது தன்னிடமாகவே இருக்கும். அவனைப் பிடித்துத் தள்ளியது புஷ்பராஜ்தான் என்று அவன் தீர்மானித்திருக்கலாம். தான், கப்பலில் இருப்பதை அவன் ஏற்கெனவே ஊகித்திருக்கலாம்.

புஷ்பராஜ் மெதுவாக அவனை நெருங்கினார். அவரை ஏறிட்ட ராபின்சன் திகைப்பு அடைந்தான்.

"நான் வேறு எங்குசெல்வது?"

"என்னைக் கடலில் தள்ளியது?"

"அந்தமாதிரி கோழைத்தனமான செயல்களை நான் ஒருபோதும் செய்வதில்லை. நான் எவரிடமும் நேரடியாக மோத விரும்புபவன் இப்போது கூட நான் அதற்குத் தயார்."

ராபின்சன் அவரை நெருங்காமல் சற்றுத் தொலைவிலேயே நின்றான்.

(தொடரும்...)

# மட்டக்களப்பு மாவட்டத்தில் பெண் தொழில் முயற்சியாளர் ஒன்றியம்

**முதன்** முறையாக மட்டக்களப்பு மாவட்டத்தில் பெண் தொழில் முயற்சியாளர் ஒன்றியம் ஒன்று ஸ்தாபிக்கப் பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட வர்த்தக கைத்தொழில் விவசாய சம்மேளனம் 21-12-2011 அன்று மட்டக்களப்பு மாவட்டத்தின் பெண் தொழில் முயற்சியாளர் ஒன்றியத்தை ஸ்தாபித்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பெண் தொழில் முயற்சியாளர்களை ஒன்றுதிரட்டி அவர்களை திறன்மிக்க பெண் தொழில் முயற்சியாளர் என்ற அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொடுக்கும் நோக்குடன் இவ் ஒன்றியம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மாவட்டமெங்கும் இருந்து சுமார் 100 இற்கு மேற்பட்ட பெண்கள் தலைமை தாங்கும் முயற்சியாளர்கள் இந்த ஒன்றியத்தை ஸ்தாபிக்கும் அங்குரார்ப்பண வைபவத்தில் கலந்து கொண்டார்கள்.

மட்டக்களப்பு மாவட்ட வர்த்தக கைத்தொழில் விவசாய சம்மேளனத்தின் தலைவர் திரு.வி.ரஞ்சிதமூர்த்தி, சம்மேளனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி கே.குகதாஸ் மாநகர முதல்வர் சிவகீத்தா பிரபாகரன், காத்தான்குடி நகரசபை உறுப்பினர் சல்மா ஹம்ஸா, முன்னாள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் தங்கேஸ்வரி உள்ளிட்ட மேலும் பலர் இந்த பெண் தொழில் முயற்சியாளர்

- வாகரை வாணி -

ஒன்றிய அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்து கொண்டனர்.

தனிமைப்பட்டு வாழும் பெண்கள் ஏனையோரின் உதவியில் தங்கி இருக்காது தமது சொந்தக் காலில் நின்று சுயமாக தொழில் செய்து முன்னேற்றமடைந்து தமது வருமானத்தினை கூட்டிக் கொள்ள வேண்டும். இப்போது இங்கு அதிகளவிலான சுற்றுலா பயணிகள் வருகின்றார்கள்.

சுற்றுலாவுக்கும் கடல் குளிப்பிற்கும் மிகவும் பிரசித்தமான கல்குடா பகுதியில் நிறைய ஹோட்டல்கள் அமைக்கப்பட்டுள்ளன. உல்லாசப் பயணத்திற்காக வரும் வெளிநாட்டார் பைகள், மாலைகள், குடைகள் போன்றவற்றினைத்தான் விரும்புகின்றனர். அதனால், இப்படியான பொருட்களை நாம் உற்பத்தி செய்தால் அவற்றை நல்ல விலைக்கு அவர்களுக்கு நாம் விற்க முடியும். ஆகவே, அப்படியான பொருட்களை தெரிந்தெடுத்து எங்களுடைய விற்பனைத் திறனை அதிகரிப்பதற்கு எங்களது வர்த்தக சம்மேளனம் உதவி



புரிய வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்த அவர், அந்த சிறப்பான பணியை நீண்ட அனுபவம் உள்ள மட்டக்களப்பு மாவட்ட வர்த்தகக் கைத்தொழில் சம்மேளனம் முன்னெடுத்து உதவி செல்வார்கள் என்று தனது நம்பிக்கையையும் வெளியிட்டார்.

வர்த்தக கைத்தொழில் விவசாய சம்மேளனம் அனுசரணையுடன் அவர்களுடைய ஒரு இணைப்பாக பெண்கள் அமைப்பு இன்று இங்கு புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. நீங்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை செய்வதற்கான சிறந்த ஒரு இடம் தேவை. அது தொடர்பாக மாநகர சபை முதல்வர் திருமதி பிரபாகரன் அவர்களிடம் எடுத்துக் கூறியதற்கிணங்க அவர் சிறந்த சந்தை வசதி ஏற்படுத்தி தரப்படும் என இவ்விடத்தில் உறுதியளித்துள்ளதையும் சுட்டிக் காட்டினார்.

எனது பணி சிறு கைத்தொழில், பாரம்பரிய கைத்தொழிலுடன் இணைந்திருப்பதனால் நீங்கள் என்னுடைய உதவியையும், ஆலோசனை-யையும் எந்தநேரமும் கேட்கலாம். அத்துடன் இங்குள்ள வர்த்தக சம்மேளனத் தலைவருடன் கதைத்து அதற்குரிய உதவிகளையும் வழிகாட்டலையும் வழங்குவதற்கு எப்போதும் நான் உறுதுணையாக இருப்பேன் என்று உறுதியளித்த செல்வி தங்கேஸ்வரி, பெண்களின் தொழில்முயற்சியே எம் நாட்டிற்கு பெருமளவு வருமானத்தினை ஈட்டிக் கொடுக்கின்றது என்ற தகவலையும் வெளியிட்ட அவர், பெண்கள் எவ்விடயத்திலும் சளைத்தவர்கள் அல்ல என்பதனை சுயதொழில் முயற்சியினூடாக தெளிவுபடுத்தலாம், என்றும் குறிப்பிட்டார் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் அபிவிருத்தி அமைச்சின் தேசிய இணைப்பாளரும் முன்னாள் பா.உ.மான செல்வி தங்கேஸ்வரி.

காவியா நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளரும், மட்டக்களப்பு மாவட்ட வர்த்தக கைத்தொழில் விவசாய சம்மேளனத்தின் பொருளாளரும் அந்த அமைப்பின் பெண்கள் பிரிவுத் தலைவியுமான யோகமலர் அஜித்குமார் இந்த நிகழ்வில் உரையாற்றினார். யுத்தத்தின் விளைவால் தமது குடும்பத்தை தலைமை தாங்கி, பிரதான உழைப்பாளிகளாகப் பொறுப் பேற்றிருக்கும் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களின் எண்ணிக்கை மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகரித்துள்ளது.

(தொடர்ச்சி ஐந்தும் பக்கம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




"இதை பாப்பா போட்டுக்கறதுக்கு ஒரு வருஷம் ஆகணும். அவ்வளவு பெரிசு...!"

படுக்கையில் கிடந்த குழந்தையைப் பார்த்தான் ரகு.

"அம்மா, குழந்தைக்கு சரியில்லைம்மா!" என்றாள் செல்வி.

"என்னடி சரியில்லை...?"

"என்னவோ சரியில்லையம்மா.."

அப்போதுதான் அகல்யா உற்றுக் கவனித்தாள். குழந்தையின் மூச்சு மிகமிக லேசாக இருந்ததையும் கண்கள் செருகியிருந்ததையும் பார்த்தாள். உடலில் மின்சாரம் பாய்ந்தாற்போல் உணர்ந்தாள்.

அதைக் கரங்களில் தூக்கிப் பார்த்தாள். தலை துவண்டது.

"ஏய்! அங்கச்சி கண்ணு! பாப்பாக்குட்டி! இந்த காரியம் மட்டும் செய்யாதேடி. ப்ளீஸ்... எனக்கு வந்த கஷ்டம் போதும்டி...." என்று பதறினாள்.

"ரகு.. ரகு... ஏதாவது செய்யேண்டா.. செல்வி, ஓடி பக்கத்து ப்ளாட்டுக்குப் போய் டாக்டர் நம்பர் அவசரமா வேணும் என்று சொல்லு. குழந்தை உடம்பு சரியில்லை, அவசரம் என்று சொல்லு..."

இப்போது அதற்கு லேசாக வலிப்பு வந்தது. கை, கால் உதறியது. விக்கல் ஆரம்பித்தது.

"ஐயோ செல்வி... ஓடிப்போய் அழைச்சுக்கொண்டு வா... செல்வி... ஐயோ..." என்று பதறினாள்.

செல்வி பதட்டத்துடன் ஓடினாள். அகல்யாவுக்கு கண்ணை இருட்டிக்கொண்டு வந்தது.

> **"ஒரு குழந்தை அழுவறதுக்குப் பல காரணம் உண்டு. அதுக்குத் தெரிஞ்ச ஒரே பாஷை அழுகை தானம்மா. இப்படிக் கைக்கொள்ளாம அழுவறதை 'காலிக்'னு சொல்வாங்க. டெலிவிஷன் பார்க்கவிடலைன்னு உலுக்கினியா?"**

ரகு குழந்தையை அப்படியே வாரி அணைத்துக்கொண்டு வெளியே ஓடினான்.

ரகு குழந்தையை வாரி அணைத்துக் கொண்டு வெளியே ஓட, அகல்யாவுக்கு அவன் குழந்தையை என்ன செய்யப்போகிறான் என்பது தெரியாமல் மிகுந்த அச்சமாக, குழப்பமாக இருந்தும் எதுவும் தீங்கு விளைவிக்கமாட்டான் என்று உள்ளுணர்வு சொன்னது. அவன் குழந்தையை எடுத்துப்போவதை அவள் எதிர்க்கவில்லை. ரகு படிகளில் இறங்கி ஓடினான். அகல்யாவும் அவன் பின்னால் ஓடினாள். வாசல் பக்கம் சென்று சாலையில் ஆட்டோவை நிறுத்தி அவளையும் அதற்குள் திணித்துக்கொண்டு ஆட்டோவை விரட்டி. என்ன நடக்கிறது என்று தெரிவதற்குள் அருகாமையில் இருந்த தனியார் வைத்தியசாலையில் அவசரப் பிரிவுக்குள் குழந்தையுடன் நுழைந்தான்.

அகல்யா அழுகையை நிறுத்தவில்லை. "என்னவோ பண்ணிட்டேன் ஐயோ!" என்று அழுதாள்.

"இங்கேயே அழுதுகொண்டு இரு" என்று அவளை பெஞ்சின் மேல் அழுந்த உட்கார வைத்து அந்த வைத்தியசாலையின் இரகசியங்களுக்குள் மறைந்து விட்டான். அகல்யா, 'என் குழந்தை... என் குழந்தை" என்று அரற்றிக்கொண்டிருந்தாள்.

எத்தனை நேரம்? அதே நினைவில்லை. அரை மணியா, அரை தினமா? முகம் பூரா வியர்வையுடன் ரகு வந்து 'அகல்யா' என்றான் மெதுவாக.

"என் குழந்தை" என்று அவன் மேல் விழுந்தாள்.

"பயப்படாதே அகல்யா... குழந்தை பிழைச்சிருச்சு. உள்ளே வா..."

அத்தனை சின்னக் குழந்தைக்கு அத்தனை சிகிச்சையா... சுற்றிலும் அத்தனை மனிதர்களா என்று ஆச்சரியமாக இருந்தது.

ஒரு ஒட்சிசன் கூடாரத்துக்குள் குழந்தை இருந்தது. மூக்கில் ஒரு குழாய். கையில் ஒன்று செருகி கண்மூடிப் பக்கவாட்டில் படுத்திருந்தது. வாய் திறந்திருந்தது.

"குழந்தையோடு அம்மா யாரு?" என்றார் டாக்டர்.

அகல்யாவைத் தோளோடு அழைத்துச் சென்றான் ரகு.

"என்னம்மா செஞ்சே குழந்தையை?"

டாக்டருக்கு அறுபது வயதிருக்கும். கொழுக்கு மொழுக்கு என்று இருந்தார். லேசான கோபமா இல்லை முகமே அப்படியா? தெரியவில்லை. கண்ணாடி விளிம்பில் கறுப்பு, காதோர ரோம அடர்த்தி.

"கைகொள்ளாம அழுதது, டாக்டர்."

"அழுதா அதை உலுக்கினியா?"

"ஆமாம் என்றாள் தயக்கத்துடன்.

"ராட்சசி! உனக்கு அறிவிருக்கா? நீயே குழந்தையைக் கொல்ல இருந்தே தெரியுமா? நீயே குழந்தை மாதிரி இருக்கே... எங்க தாலியைக் காணோம்?"

அவள் கண்கள் சரிந்தன.

"எதுக்காக நீங்கள் எல்லாம் இப்படி அவசரப்படுறீங்கோ... அழுவாதே... பேர் என்ன... முண்டம்... முண்டம்!"

"அகல்யா..."

"ஒரு குழந்தை அழுவறத்துக்குப் பல காரணம் உண்டு. அதுக்குத் தெரிஞ்ச ஒரே பாஷை அழுகை தானம்மா. இப்படிக் கைக்கொள்ளாம அழுவறதை 'காலிக்'னு சொல்வாங்க. டெலிவிஷன் பார்க்கவிடலைன்னு உலுக்கினியா?"

"இல்லை டாக்டர்' என்றாள் அழுப்புடன்.

"ஏமாற்றமா? வெறும்பா அடிச்சா வலிக்கும், குலுக்கலாம் என்று ஒரு தைரியம் அப்படித்தானே?"

அகல்யா அழுதாள்.

"இப்ப நீ அழுகிற! தெரிஞ்சுக்க... ஒரு குழந்தையை இந்த மாதிரி குலுக்குறது எத்தனை அபாயம் என்று.

**இன்பம் தொடரும்**



# பெண்மைக்குள்ளே ஒரு மென்மை!

"செல்லம் நல்லா வேலைக்கு வந்திடுறன் சிரிச்சுக்கொண்டு வழி அனுப்புங்க" குகன் கெஞ்சினான். அவனது கெஞ்சல் அவளை மாற்றவே இல்லை. இவன் எப்படி இப்படிச்செய்யலாம் இன்றைய நாள் எனக்குரிய நாள், இன்னொரு நிகழ்ச்சியை எப்படி போடலாம்.

சின்னதாய் அவன் மேல் கோபம் இருந்தது அவள். அவள் சிரிக்காமல் ஒரு முத்தம் வாங்காமல் வெளியே போகான் என்பதை அறிந்தவன் "சரிடா போயிட்டு வா" என்று சொல்லி முத்தத்தோடு வழி அனுப்பியவள் சோபாவில் உட்கார்ந்து மெல்ல வயிற்றைத் தடவினாள். 6 மாதமாய் இன்னொரு குட்டிக் குகன் அவளுக்குள் தவழ்கிறான். இத்தனை நாள் அவள் தான் அவனிற்கு குழந்தை, தாய், நண்பி எல்லாமே. ஈருயிர் ஓருடல் என்பது அதுதானே? அப்படித்தான் வாழ்க்கை.

ஒரு சுடுவார்த்தை பேசிய நினைவுகள் இருந்ததில்லை. இருவருக்குள்ளும் வாழ்க்கை என்பது இப்படித்தான் இருக்க வேண்டும் என்று வாழ்க்கையே எண்ணும்படி வாழ்கிறார்கள். ஊடலும் கூடலும் வருவது இந்த பிரிவால்தான்.

எந்த நேரமும் தன்னோடு ஒட்டியபடி அவன் இருக்க வேண்டும் என்று அவளும், வேலையோடு மாரடிக்கும் அவனும் வாழ்க்கையில், பார்த்து பார்த்து பலவருசம் காதலிச்ச சேர்ந்த ஜோடி தானே.

அவன் ஆரம்ப நாட்களில் சொன்னவை நினைவில் "ஏம்பா நாங்க கலியாணம் கட்டி பிள்ளை குட்டி வந்து பேரன் பேத்தி வந்தாலும், நான் உன்னை காதலிக்கிறதை விடமாட்டன் நீயும் விடக்கூடாது சரியா."

ஓம் என்று அன்று தலையாட்டியவள் இன்றுவரை ஒவ்வொரு விநாடியும் அவனைக் காதலிக்கிறாள், அவனும் தான். வாழ்க்கையின் நெளிவுகள் சுழிவுகள் அறியாமலா அவன்.

ஏழு நாட்களில் ஒரு நாள் ஞாயிற்றுக்கிழமை இருவரும் ஒன்றாய் கழிப்பதாய் என்றோ போட்ட திட்டம் ஓரிரு முறை அவன் மீறியிருக்கிறான்.

என்ன தான் இருந்தாலும் இன்று அவன் மோசம் வேலை விடயமாய் இரண்டு நாள் பயணமாம் தவிக்க விட்டு சென்றுவிட்டான்.

உறவுகள் யாரும் அருகில் இல்லை. தனிமையாய் இருவரும் ஒருவருக் கொருவர் துணையாய் இரண்டு வருட வாழ்க்கை இனிமையாய்த்தான் போனது. அவள் கோவம் கொள்வதும் அவன் அன்பால் ஆற்றுவதும் அதில் ஒரு தனிச்சுகம் தான்.

அவளது சங்கடமான வேளைகள் அவனிற்கு போல் உணர்ந்து செயற்படுவதில் அவன் அவன் தான். எங்கு எப்போ சென்றாலும் அவளை அழைத்துச்செல்வான். அதுவும் ஒரு நாளுக்கு மேலான பயணம் என்றால் கூடவே அவளும் அவனுடன் சென்றுவிடுவாள், அவனும் விட்டுப்பிரியான்.

அவளுள் ஒரு உயிர் உள்ளே இருப்பதால், வீணான சிரமங்கள் வேண்டாம் என்பதால் இன்று அவளை விட்டுச்சென்றான், இது தான் நடந்தது. "மனிசியையும் பிள்ளையையும் விட்டிட்டு அப்படி என்ன வேலை வேண்டிக்கிடக்கு" என்று அவனைத் திட்டிய படி தூங்கியவள், எழும்பியபோது அறையி லுள் கட்டிலில் இருந்தாள். பக்கத்தில் அவன் தலை யைத் தடவியபடி.

"என்னடா கோவமா இந்த நேரம் என்ன தூக்கம்?" செல்லமாய் மூக்கை கிள்ளினான்.

கண்ணை ஒரு தடவை சாய்ப்ப பார்த்தவள், "ஏம்பா நீங்க வெளியூர் போகலையா முக்கியமான விடயம் எல்லாச்சு" என்றவள் அவனது மார்போடு சாய்ந்து கொண்டாள்.

"உன்னை விட்டிட்டு போய், என்ன செய்யிறியோ என்னமோ என்று பதைபதைத்த... போன விசயமும் ஒழுங்கா முடிக்காமல் உன்னையும் விட்டிட்டு போய் யார் அவஸ்தைப்படுறது."

"ஊதில போய் திரும்பிட்டன் அடிச்சு சொல்லிக் கிடக்கு வேணும் என்றால் அவை இஞ்ச வரட்டும். என்ர மனிசி பிள்ளையை விட உந்த பிசினஸ் பெரிசா என்ன. சரி இப்பவாவது கொஞ்சம் சிரிக்கிறே." என்று குட்டினான்.

அவனது வாய் உதிர்ந்தது அவனது உள்ளுள் என்னமோ போல் இருந்தது. நன்றி சொல்வதற்கு மேல் அவனை இறுகக் கட்டி முத்தமழை பொழிவதைவிட அவளால் என்ன செய்ய முடியும்.

அந்த நொடிகளில் அவளது முகமதில் அவன் கண்ட மாற்றம். அந்த விடயம் முடிந்து வரும் இலாபத்தை விட பெரிசாய் தெரிந்தது. மெல்ல அணைத்துக்கொண்டான். அவளது உள்ளுணர்வுகளை முழுமையாய் புரிந்தவனாய்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேலுக்கு வந்தது தலைவலி

**துருக்கி தமது இராணுவ சட்டலைட் ஒன்றில் இறுதிக்கட்ட வேலைகளில் ஈடுபட்டுள்ளது. விரைவில் இந்த சட்டலைட் வானில் ஏவப்படும் எனவும் அறிவித்துள்ளது. துருக்கியின் கோக்டர்க் சட்டலைட் தற்போது எந்தவொரு தனியார் நிறுவனத்தாலும் எடுக்க முடியாத அளவில் பூமிக்கு மிக கிட்டிய படங்களை எடுத்துக் கொடுக்கும் தொழில்நுட்பத்தை உடையது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.**

இஸ்ரேலிய அரசுக்கும், இராணுவத்துக்கும் புதிய தலைவலி ஒன்று விரைவில் வரப்போகின்றது. இஸ்ரேலுக்குள் என்ன நடக்கின்றது என்று எட்டிப் பார்க்க புதிய உளவு சட்டலைட் ஒன்றை வானில் அனுப்ப போகின்றது துருக்கி. இன்றுவரை சட்டலைட் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மிகமிக நெருக்கமாக (2 meters per pixel resolution) உளவு பார்க்கும் வசதி அமெரிக்காவிடம்தான் உள்ளது.

அமெரிக்காவை, தனியார் நிறுவனங்கள் (உதாரணமாக கூகுள் மேப்) இப்படியான மிக நெருக்கமான படங்களை வெளியிடுவதை சட்ட ரீதியாகத் தடை செய்துள்ளது. இதனால் தற்போது எந்தவொரு நாட்டுக்குள்ளும் என்ன நடக்கின்றது என்பதை மிக நெருக்கமாக, அமெரிக்க அரசைத் தவிர வேறு யாராலும் பார்க்க முடியாது. அமெரிக்கா இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்ததே, இஸ்ரேலின் நலனை மனதில் வைத்துத்தான் என்பதில் இரகசியம் ஏதுமில்லை.

பர்-இலான் பல்கலைக்கழகத்தின் பொலிட்டிகல் சயின்ஸ் பேராசிரியர் ஜெரால்டு ஸ்டெயின்பர்க், "இப்போது, கூகுள் மேப்பில் மற்றைய நாடுகளின் பகுதிகளை நீங்கள் பார்க்கும் அதே தொலைவில் வைத்து இஸ்ரேலின் சில பகுதிகளைப் பாருங்கள். அவை மங்கலாகவே தெரியும் விதத்தில் செட்டிங் செய்யப்பட்டிருக்கும். அமெரிக்க அரசின் உத்தரவுப்படி கூகுள் செய்துள்ள சிறிய அட்ஜஸ்ட்மென்ட் இது" என்கிறார்.

கூகுள் அமெரிக்க நிறுவனம் என்பதால், அரசு சொல்வதைக் கேட்க வேண்டிய நிலையில் உள்ளார்கள். ஆனால், இதுவே அமெரிக்காவுக்கு வெளியேயுள்ள நிறுவனம் என்றால்? அதுவும் இஸ்ரேலுக்கு எதிரான நாட்டு நிறுவனமாக இருந்துவிட்டால்?

அந்தத் தலைவலிதான் தற்போது இஸ்ரேலுக்கு வரப்போகின்றது.

துருக்கி தமது இராணுவ சட்டலைட் ஒன்றில் இறுதிக்கட்ட வேலைகளில் ஈடுபட்டுள்ளது. விரைவில் இந்த சட்டலைட் வானில் ஏவப்படும் எனவும் அறிவித்துள்ளது. துருக்கியின் கோக்டர்க் சட்டலைட் தற்போது எந்தவொரு தனியார் நிறுவனத்தாலும் எடுக்க முடியாத அளவில் பூமிக்கு மிகக் கிட்டிய படங்களை எடுத்துக் கொடுக்கும் தொழில்நுட்பத்தை உடையது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சட்டலைட் படங்களை வெளியிடுவதில் அமெரிக்காவில் உள்ளதுபோன்ற சட்டத் தடைகள் ஏதும் துருக்கியில் கிடையாது. அதுவும், இஸ்ரேலில் இருந்து மிகக் குறுகிய தொலைவில், அரசியல் ரீதியாக இஸ்ரேலுக்கு எதிரான நாடாக உள்ளது துருக்கி. இதனால், இவர்கள் மிக ஆனந்தமாக இஸ்ரேலின் சென்சிட்டிவ்வான இடங்களின் சட்டலைட் இமேஜ்களை யாவரும் பார்க்குமாறு செய்வார்கள் என்று ஊகிக்கலாம்.

ஜேன்ஸ் டிஃபென்ஸ் வீக்லியின் பாதுகாப்பு ஆய்வாளர்களில் ஒருவரான மொஹமெட் நஜிப், இஸ்ரேலின் எதிரி நாடுகளுக்கு துருக்கி நேரடியாகவோ, மறைமுகமாகவோ இந்த சட்டலைட் இமேஜ்களை விற்கத்தான் போகிறார்கள். இருந்து பாருங்கள்" என்று கூறியிருக்கிறார். அதுதான் நடக்கவும் போகின்றது!

(18 ஆம் பக்கத் தொடர்ச்சி...
**மட்டக்களப்பு ...)**

அதேவேளை, யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதிகளில் இத்தகைய குடும்பங்களில் வாழ்வாதாரத்திற்காகவும் அவர்களது பிள்ளைகளின் கல்விக்காகவும் பல வழிகளிலும் உதவி செய்து வந்த சர்வதேச உதவி நிறுவனங்கள் பல தற்பொழுது இங்கிருந்து சென்று விட்டதால் பாதிக்கப்பட்ட இந்தக் குடும்பங்களின் கதி நிர்க்கதியாகியுள்ளது.

எனவே இவர்கள் தமது நாளாந்த ஜீவனோபாயத்திற்காகப் பல வழிகளிலும் போராட வேண்டியுள்ளது. சுய தொழில் முயற்சிகளை சிறிய அளவிலாவது ஆரம்பிப்பதற்கு முதலீடு தேவை. ஆனால், வறுமையின் அடிமட்டத்திலுள்ளவர்களுக்கு கடன் தருவதற்கு வங்கிகள் மறுத்துவிடுவதால் அவர்களுக்குக் கைகொடுக்க எவருமில்லை என்ற நிலை உருவாகியிருக்கின்றது. இவ்வேளையில்தான் மட்டக்களப்பு மாவட்ட வர்த்தக கைத்தொழில் விவசாய சம்மேளனத்தில் ஒரு அங்கமாக சம்மேளனத்தின் பெண்கள் பிரிவொன்றை ஸ்தாபிக்க உத்தேசித்தோம்.

தற்பொழுது சில நிறுவனங்கள் பெண்முயற்சியாளர்களுக்கு உதவ முன்வந்திருக்கின்றார்கள். பயிற்சிகள், கடனுதவியின் நிதியுதவிகள் என்று உதவி வழங்கும் ஏற்பாடுகள் உள்ளன. எனினும் இவற்றைப் பெற்று இந்தப் பாதிக்கப்பட்ட பெண்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவதற்கு தனித்துச் செயற்பட முடியாது. ஒரு பலம் பொருந்திய அமைப்பாக நமது வேண்டுகோள்களை முன்வைப்பதன் மூலமே இது சாத்தியப்படும். அதனடிப்படையில்தான் இப்பொழுது இந்த மாவட்டத்தில் முதன் முறையாக பெண் தொழில் முயற்சியாளர் ஒன்றியம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

பெண்கள் சுயமாகச் சிந்திக்க முடியாமல் போனமைக்கும் கடந்த காலங்களில் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டதிற்கும் வறுமைதான் மிக முக்கிய காரணமாக அமைந்திருந்தது. ஆனால் காலச்சூழ்நிலையின் நிர்ப்பந்தத்தினால் வறுமையிலிருந்து மீளவேண்டும் என்ற விழிப்புணர்வு மக்களிடம் வந்திருக்கின்ற போது அதனை முன்னெடுத்துச் செல்வதற்கான கட்டிணைந்த பலம் பாதிக்கப்பட்டவர்களிடையே இருந்திருக்கவில்லை. இப்போது அது உருவாக்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் இந்த அமைப்பினூடாக நடுத்தர உற்பத்தி முயற்சிகளில் ஈடுபட்டிருக்கின்ற பெண் முயற்சியாளர்களுக்கு வியாபாரப் பதிவைப் பெற்றுக் கொடுப்பதுடன் கடனுதவிகளும் மேலும் அவர்களது உற்பத்திகளை விரிவுபடுத்துவதற்கான பயிற்சிகளும், சந்தை வாய்ப்புக்களும் பெற்றுக் கொடுக்கலாம் என்ற உத்தேசம் உள்ளது. தனித்தும் சுயமாகவும் உற்பத்தி முயற்சிகளில் ஈடுபடும் பெண்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வதற்கும் கவனம் செலுத்தப்படுகிறது. ஒரே நேரத்தில் தொழில் பெறுநராகவும் தொழில் வழங்குநராகவும் ஒருவர் இருக்கமுடியும். இந்த விடயத்தில் பெண்களை வலுவுள்ள உற்பத்தி முயற்சியாளர்களாக உருவாக்குவதற்கான பல யோசனைகள் அரசிடமும் உள்ளன. ஆனால் அது பற்றிய போதிய அறிவு மக்களுக்குப் போய்ச்சேரவில்லை, அதனை அமுல் படுத்தும் அதிகாரிகளின் அக்கறையின்மையும் இதற்குக் காரணமாக இருக்கிறது. தென்பகுதிப் பெண் முயற்சியாளர்களின் உற்பத்தித் திறனும் போதி செய்யும் நேர்த்தியும் வடகிழக்குப் பெண்களின் உற்பத்தி முயற்சிகளோடு ஒப்பிடும் போது மிகச் சிறப்பாயிருப்பதை நாம் காண்கின்றோம். எனவே, அந்த விடயங்களிலும் நாம் கரிசனை கொள்ள வேண்டும். நேர்மையான, தரமான வியாபார யுக்திகளையும் நாம் கையாள வேண்டும்." என்றார்.

(05 ஆம் பக்கத் தொடர்ச்சி...
**தமிழ்தேசியக் ...)**

ஆனால் கிழக்கு மாகாணம் குறித்த அக்கறை கொண்டவர்கள் போல் காட்டிக்கொள்ளும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் கிழக்கைக் கூறு போட எண்ணுகிறார்கள் என்பது கிழக்கின் அரசியல்வாதிகளிடம் தற்போது ஏற்பட்டிருக்கிறது. தமிழ் தேசியக் கூட்டமைப்பு - முஸ்லிம் காங்கிரஸ் சந்திப்பின் பின்னணியில் கிழக்கு மாகாணம் தொடர்பான விடயங்கள் இருந்தாலும் மேலும் மேலும் தமிழ் மக்களிடையே பிரச்சினைகளைக் கொண்டுவரும் முயற்சியாகவே இது பார்க்கப்படுகிறது.

தமிழ் மக்களைத் தொடர்ந்தும் ஏமாற்றும் முயற்சிகளில் இருக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் அரசியல்வாதிகள் ஒரு உருப்படியான அரசியல் தீர்வொன்றை முன்வைக்கத் தயாராகவில்லை. வாழும் வரையில் அவர்களால் எந்தப் பயனும் இருக்கப் போவதில்லை. தந்தை செல்வா காலம் முதல் என்று இறுமாப்பில் இருக்கும் சிலரும் தம்மை விட்டால் ஆட்கள் இல்லை என்று நினைக்கும் அரை குறைகளும் தமிழ் மக்களின் ஜனநாயகத்தினை எதிர்காலத்தினைத் தீர்மானிக்கும் வரை தமிழ் மக்கள் பாவமானவர்களே.


மோட்டார் சைக்கிள் சேர்விஸ்

மூன்றாவது இலவசம்!

தர்ஷன் வேர்க் சொப் அண்ட் சேர்விஸ் ஸ்ரேசன்

T.P: 021 3201544, 077 2479462

சகலவிதமான மோட்டார் சைக்கிள்களையும் மிகவும் சிறந்த முறையில் சேர்விஸ் செய்து கொள்வதற்கு ஒரே இடம்.

ஒரு தடவை சேர்விஸ் செய்வதற்கு 350 ரூபா மட்டுமே. இரு தடவைகள் சேர்விஸ் செய்துகொண்டால் மூன்றாவது தடவை இலவசமாக சேர்விஸ் செய்து கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு: முகாமையாளர், இல. 116, கோவில் வீதி, யாழ்ப்பாணம். (ICRC சந்தி)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தவாரம் உங்கள் பலன்

(05.01.2012 தொடக்கம் 11.01.2012 வரை)

## மேடம்

சகோதரர்களால் சில சங்கடங்கள் உண்டாகும். திருமணம் ஆகாதவர்களுக்கு உறவினர்களின் உதவியால் திருமணம் நடக்கும்.

## துலாம்

## இடபம்

## விருச்சிகம்

## மிதுனம்

## தனுசு

## கடகம்

## மகரம்

## சிங்கம்

## கும்பம்

## கன்னி

## மீனம்

# காதில பூ கந்தசாமி

## நோட்டீஸ் பலகை




நான் சொல்வதெல்லாம் பொய்
பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை
- காதில் பூ கந்தசாமி -

ஜெ: ஓ... ஞாபகமிருக்கு...

அப்பவும் ... எல்லாம் எப்படி இருக்குது.

ஜெ: அண்ணன் சரியாய் சொன்னீங்க.

# உலகிற்கு ஒளியூட்டியவர்



உலகை ... வைத்தவர்கள் (வியப்புக்கள் தொடரும்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புதுவருட கொண்டாட்டம்

நமது கடைகளில் பல வண்ணங்களில் பல்வேறு சுவைகளிலான கேக்குகள் வைக்கப்பட்டிருக்கும்.
இவ்வாறான கேக்குகளைப் பார்க்கையிலேயே வாயில் எச்சில் ஊறும். எதை செய்தாலும் சற்று வித்தியாசமாகச் செய்து உலகின் கவனத்தை தனது பக்கம் திருப்புவோர் இருக்கிறார்கள்.
சீனாவைச் சேர்ந்த 80 சமையல்காரர்கள் கடந்த ஆண்டு கிறிஸ்துமஸ "க்கு தாங்கள் செய்யும் கேக்கை சீனா மட்டுமல்லாமல் உலகமே மறக்கக் கூடாது என்று நினைத்தார்கள். இதற்காக அவர்கள் 1,068 மீற்றர் நீளமுள்ள கிறிஸ்துமஸ் கேக்கை தயாரித்தனர
மேலும் இதை மக்கள் பார்வைக்காக வைத்த பிறகு, கேக்கை வெட்டி விற்பனை செய்யத் துவங்கினர். இதில் கிடைக்கும் பணம் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ள 4 குழந்தைகளின் கீமோதெரபி எனும் மருத்துவத்திற்கு வழங்கப்படுகிறது. 2010ஆம் ஆண்டு பிரான்ஸை சேர்ந்தவர்கள் செய்த 207 மீற்றர் நீளமுள்ள கேக் தான் இதுவரை உலகின் மிக நீளமான கிறிஸ்துமஸ் கேக்காக இருந்தது.
தற்போது சீனர்கள் தயாரித்துள்ள கேக் கின்னஸ் புத்தகத்தில் இடம் பிடித்துள்ளது.



# இளங்கன்று பயமறியாது

இந்தியாவில் உத்திர பிரதேசத்தில் Ghatampur என்னும் கிராமத்தில் வசிக்கும் கஜோல் கான் என்னும் 8 வயது சிறுமி நாகப்பாம்பை தனது கைகளிலும், கழுத்திலும் சுற்றிக் கொண்டு சாதாரணமாக திரிகிறாள்.
மேலும் இச் சிறுமியின் விளையாட்டு, சாப்பாடு மற்றும் தூக்கம் எல்லாம் தனது நண்பர்களான பாம்புகளிடம் தான்.
இச்சிறுமியை 3 முறை இந்த விஷம் கொண்ட பாம்புகள் தாக்கிய பின்பும் எந்த பயமும் இல்லாமல் மிகவும் மகிழ்ச்சியுடன் பாம்புடன் அலவலாவுகிறாள்.
இவரைக் கண்டால் பயந்து ஓடுகிறார்கள் அந்த கிராம மக்கள். இதைத்தான் நம்மூரில் இளங்கன்று பயமறியாது என்பார்கள் போலும்!



# ஜாலி




ஒவ்வொரு மனிதனுக்கும் உடற்பயிற்சி அவசியம். தினமும் ஏதோ ஒரு வகையில் உடற்பயிற்சி செய்து வந்தால் அதுவே ஆரோக்கியத்திற்கு வழி வகுக்கும். அத்தகைய உடற்பயிற்சிகளில் நீச்சலும் ஒன்று. நீச்சல்களில் பல வகைகள் காணப்படுகிறது.
தற்போது டால்பினைப் போல ஜாலியாக நீந்தி மகிழ மனிதர்கள் ஆர்வம் காட்டுகின்றனர். டால்பின்கள் போலவே மனிதர்களும் நீந்துவதற்கு dolphin jetpack என்ற கண்டுபிடிப்பு உதவுகிறது. குறித்த கண்டுபிடிப்பை பொருத்திய இளைஞர் ஒருவர் டொல்பின் போன்றே நீந்தி மகிழ்வதை படத்தில் காண்கிறீர்கள்.

இங்கிலாந்தில் உள்ள நாய் ஒன்று மொத்தம் 15 குட்டிகள் ஈன்றுள்ளது.
இதில் 5 ஆண் குட்டிகள், 10 பெண் குட்டிகள். பொதுவாக நாய்கள் ஒரு தடவையில் 5 அல்லது 6 குட்டிகளை ஈனுவது வழமை.
இந்நிலையில், ஒரே நாய் 15 குட்டிகள் போட்டது அதிசயமாக கருதப்படுகிறது.
இதை ஏராளமானோர் ஆச்சரியத்துடன் பார்த்து செல்கின்றனர்.
இதுகுறித்து நாயின் உரிமையாள ரான சுல்லிவன் கூறியதாவது, நாய் வயிறு பெரிதாக இருந்ததால் 7 அல்லது 8 குட்டி போடும் என்று எதிர்பார்த்தோம். ஆனால் 15 குட்டி போட்டிருப்பது ஆச்சரியமாக இருக்கிறது.
ஆனால் இத்தனை குட்டியையும் எங்களால் வளர்க்க முடியாது. 2 குட்டிகளை மட்டும் எங்களோடு வளர்க்க போகிறோம். மற்றவற்றை விற்று விடுவோம். இவ்வாறு அவர் கூறினார்.



பொதுவாக சிற்பங்களை கற்களில் அல்லது சீமேந்து கலவையில்தான் வடிவமைத்திருப்பார்கள். இங்கு வித்தியாசமான முறையில் உருகும் பனிக்கட்டியில் சிற்பத்தை வடிவமைத்திருப்பதையே படத்தில் காண்கிறீர்கள்.
எமக்கு சாதாரணமாக நுவரெலியாப் பக்கம் சென்றாலே போதும் போதும் என்றாகிறது
(நுவரெலியாவில் அண்ணளவாக 8 பாகை செல்சியஸிக்கு கீழே வெப்பநிலை செல்வதில்லை) புச்சியத்தையும் தாண்டிய குளிர் பிரதேசத்தில் பனிக்கட்டிகளுடன் உறவாடி இந்த சிற்பங்களை செதுக்கிய சிற்பிகள் உண்மையிலேயே பாராட்டப்பட வேண்டியவர்கள்தான.







# பனிக்கட்டி மாளிகை



# நாடாளுமன்றில்கவர்ச்சிப் புயல்

ரஷ்யாவைச் சேர்ந்த நடிகையும், மொடல் அழகியுமான மரியா கொசெவின்கோவா அந்நாட்டு பாராளு மன்றத் திற்குத் தெரிவா கியுள்ளமை அனைவரையும் ஆச்சரியத் தில் ஆழ்த்தி யுள்ளது.
மரியாவை அந்நாட்டுப் பிரதமர் புடினே தேர்வுசெய் துள்ளார்.
இவர் பிரபல "பிளேபோய்" எனும் சஞ்சிகை யின் ரஷ்யத் தொகுப்பில் நிர்வாணமாகத் தோன்றி பரபரப்பை ஏற்படுத்தியவர்.
இந்த கவர்சி தேவதையின் பாராளுமன்ற பிரவேசமானது, பிரதமர் புடினுக்கு நெருக்கமாக இருந்தமையினாலேயே சாத்தியமானது என கூறப்படுகின்றது.
இதற்கு முன்னரும் புடினால், ரஷ்ய சஞ்சிகையொன்றுக்கு அரை நிர்வாணமாகக் காட்சி கொடுத்த அலினா கபாஹீவா என்பவர் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org